# வைகறை வெளிச்சம்


விலை ரூ.20/-


ஆசிரியர் மு. குலாம் முஹம்மது

Volume - 14 Issue - 09

செப்டம்பர் 2021 - முஹர்ரம்-ஸபர் 1443




# ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா வீழ்ந்தது எப்படி?




## UAPA / NIAக்கு எதிரான மக்கள் இயக்கம்

بسم الله الرحمن الرحيم

முஃமின்களே! நியாயத்தை நிலை நாட்டுவதற்காக அல்லாஹ்வுக்கு நீங்கள் உறுதியான சாட்சியாக இருங்கள், எந்த ஒரு கூட்டத்தார் மீதும் நீங்கள் கொண்டுள்ள வெறுப்பு நீதி செய்யாமலிருக்க உங்களைத் தூண்ட வேண்டாம். நீதி செய்யுங்கள்; இதுவே (தக்வாவுக்கு) - பயபக்திக்கு மிக நெருக்கமாகும்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை(யெல்லாம் நன்கு) அறிந்தவனாக இருக்கின்றான்.

(5:08)


04 ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா வீழ்ந்தது எப்படி?

12 89,100 அமெரிக்க வீரர்கள் தற்கொலை

27 சிலுவைப்போர் 2.0

32 இஸ்லாத்தில் பெண்களின் நிலை

38 பாலியல் ஜல்ஸா பார்ட்டி - பா.ஜ.க.

46 UAPA/NIA க்கு எதிரான மக்கள் இயக்கம்

58 ஔரங்கசீப்-ன் எளிமையான வாழ்வு



வைகறை வெளிச்சம்

செப்டம்பர் 2021 - முஹர்ரம்-ஸபர் 1443

ஆசிரியர்

மு.குலாம் முஹம்மது,M.A., Journalism & Communication

துணை ஆசிரியர்

கே.எம்.இல்யாஸ் ரியாஜி,M.A.,



All disputes arising out of any publications in this monthly will come under the jurisdiction of chennai courts Only



http:/www.facebook.com/vaigaraivelicham

தனி இதழ்: ரூ.20.

ஆண்டுச் சந்தா

உள் நாடு: ரூ.240.

வெளி நாடு: ரூ.3000.

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர் DARUL ISLAM FOUNDATION TRUST என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.



VAIGARAI VELICHAM

52/1, Mannady Street, Room# 07, Mannady, Chennai - 600001.

+91 81481 29887 | Email: darultrust@yahoo.com |

Web: www.darultrust.in



# ஆப்கானிஸ்தானில்

# அமெரிக்கா வீழ்ந்தது எப்படி?

ஒரு வல்லரசு அமெரிக்கா. உலகின் ஒரே வல்லரசு அமெரிக்கா. இருபது ஆண்டுகள் தன் படைபலத்தையும், பணபலத்தையும் தனக்குத் துணையாக வந்த ஆறு நோட்டோ நாடுகளின் பலத்தையும் மொத்தமாக இழந்திருக்கின்றது.

எப்படி..?

இதில் முழு ஆய்வுக்குள் இறங்கும் முன் தொடக்கத்திலேயே ஒன்றை தெளிவுபடுத்திட விரும்புகின்றோம்.

“தாலிபான்” என்ற பெயர் மேலைநாட்டு உளவுத்துறையினரால் உருவாக்கப்பட்ட ஒரு பெயர். இப்படி போராளிகளுக்கு ஒரு பெயரைச் சூட்டி விடுவது உலக உளவுத்துறைகளின் இப்போதைய உக்தி.

இப்படி அநியாயத்திற்கெதிராக, ஆக்கிரமிப்பிற்கெதிராக போராடும் போராளிகளுக்கு ஒரு பெயரைச் சூட்டிவிட்டால், அவர்களைத் தீவிரவாதிகளாக சித்தரிப்பதற்கு எளிதாக இருக்கும். ஊடகங்களும் ஒற்றைவரியில் அந்த அமைப்பின் மீது தீவிரவாத முத்திரையைக் குத்திட இயலும்.

இப்போது ஆப்கானிஸ்தானில் அமெரிக்காவை வீழ்த்திய முஜாஹித்களுக்கு (இறைவழியில் போர்



செய்பவர்களுக்கு) தாலிபான்கள் எனப்பெயர் என்றால், அதற்கு முன் இன்னொரு வல்லரசான ரஷ்யாவை வீழ்த்திய முஜாஹித்களுக்கு (இறைவனின் வழியில் போர் செய்தவர்களுக்கு )என்ன பெயர்?

அதற்கு முன் ஆங்கிலேய வல்லரசை வீழ்த்தியவர்களுக்கு..?

அதற்கு முன் மங்கோலியர்களை வீழ்த்தியவர்கள்...?

ஆக இத்தனை வல்லரசுகளையும் வீழ்த்திக் காட்டியவர்கள் ஆப்கானிஸ்தான் மக்கள். இந்த முஜாஹித்கள் - ஆப்கானிஸ்தான் குடிமக்கள்தாம். அவர்களின் விடுதலை உணர்வும், எந்த சக்திக்கும் அது எவ்வளவு பெரிய வல்லரசாக இருந்தாலும், அடிமைப்படமாட்டோம் என்ற உணர்வும், அல்லாஹ் நீதியின் பக்கம் நிற்பவர்களுக்கு நிச்சயமாக உதவி செய்வான் என்ற நம்பிக்கையும்தான்.

இந்த உணர்வுகள்தான் அவர்கள் 1839லிருந்து 2021வரை வல்லரசுகளை எதிர்த்து நிற்க வைத்திருக்கின்றது. அவர்களை ஏதாவது ஒரு பெயர் வைத்து முத்திரை குத்திவிட்டால், அந்த மக்களை உலக மக்கள் வெறுக்கும்படி செய்திடலாம் என்பது இவர்களின் சதிகளுல் ஒன்று.

இந்த விவகாரத்தில் எனக்கொரு சொந்த அனுபவமே உண்டு. ஒரு காலகட்டத்தில் நான் விடியல் வெள்ளி என்ற பத்திரிக்கையை நிறுவி நடத்தி வந்தேன். அத்தோடு மனித உரிமைகளுக்கு எதிராகச் செயல்படுவோருக்கு எதிராகவும் பல களப்பணிகளைச் செய்து வந்தேன். பல இளைஞர்கள் இந்த மனித உரிமை களத்தில் என்னோடு களமாடினார்கள்.

இப்படி மனித உரிமை களத்தில் பணியாற்று பவர்களை தீவிரவாதிகளாக சித்தரித்து மக்கள் மன்றத்தில் காட்டிட, நான் நடத்திவந்த பத்திரிகையையே ஒரு தீவிரவாத அமைப்பாகக் காட்டினார்கள். விடியல் வெள்ளி என்ற தீவிரவாத அமைப்பைச் சார்ந்தவர்கள் எனத் தொடர்ந்து ஊடகங்களில் வெளியிட்டார்கள்.

நெல்லிக்குப்பத்தில் நடந்த சகோதரர்கள் பிரச்சனை, “விடியல் வெள்ளி” என்ற அமைப்பைச் சார்ந்தவர்கள் என தொலைக்காட்சிகளில் முழங்கச் செய்தார்கள்.

தொடர்ந்து நடந்த பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் நான், விடியல் வெள்ளி ஒரு பத்திரிக்கை தான், அமைப்பல்ல எனச் சொன்னபோது எல்லோரும் சிரித்தார்கள்.

தொலைக்காட்சிகள் இப்படி அலறியதால் பத்திரிகை 25,000 பிரதிகள் அதிகமாக விற்றது.

ஆக ஆப்கானிஸ்தானில் 1839 முதலே போராடுபவர்கள் ஆப்கானிஸ்தான் மக்கள், முஜாஹித்கள் (அல்லாஹ்வின் வழியில் போர் செய்பவர்கள்) அவர்களுக்கு இப்போது அமெரிக்காவின் CIA என்ற மத்திய உளவுத்துறை வைத்திருக்கும் பெயர் தாலிபான். பொருள்: மாணவர்கள். நாம் அவர்களை முஜாஹித்கள் என்றே அழைப்போம்.

இனிவரும் நாள்களிலும் ஐரோப்பிய நாடுகளின் துணையோடு ஆப்கானிஸ்தான் ஆக்கிரமிக்கப் படலாம். அந்த மக்கள் அந்த ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து நிச்சயமாக போராடுவார்கள். அவர்களையும், உளவுத்துறை மற்றும் ஊடகங்களும் தீவிரவாதிகளாக சித்தரிக்கும். அதற்காக ஒரு பெயரை வைக்கலாம். நாம் அவர்களை முஜாஹித்கள் என்றே அழைப்போம். இன்ஷா அல்லாஹ் அதே நேரத்தில் பொது புத்திக்கு உணர்த்திட தாலிபான்கள் என குறிப்பிட்டு அவர்கள் எப்படி அமெரிக்காவை வென்றார்கள் எனப் பார்ப்போம்!

அவர்கள் மீது அமெரிக்கா ஒரு பெரும் குற்றச்சாட்டை சுமத்தியது. அது அவர்கள் அமெரிக்காவின் இரட்டை கோபுரத்தை தாக்கியவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தவர்கள் என்று.

இரட்டைக் கோபுரங்களைத் தாக்கியவர்கள், ஒசாமா பின்லேடன் அவர்களும், அவர்களின் கூட்டாளிகளும் என்பது அமெரிக்காவின் கணிப்பு. அவர்களுக்கு வைத்த பெயர் அல்கொய்தா.

ஆனால், இப்போது ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் வெற்றியை பொறுக்க முடியாதவர்கள், அமெரிக்காவை வீழ்த்திய முஜாஹித்களின் (வைத்த பெயர் தாலிபான்கள்) வெற்றியைப் பொறுக்க முடியாதவர்கள், இரட்டைக் கோபுரத்தைத் தாக்கியவர்களே இந்த முஜாஹித்கள் தாம் என்கின்றனர். அவர்கள் பொது அறிவு பெறும் வரை பாடம் சொல்லித் தருவோம்.

அல்கொய்தாவிற்கு அடைக்கலம் தந்தார்கள் (முஜாஹித்கள்)தாலிபான்கள் என்பதே குற்றச்சாட்டு. அவர்கள் சாட்சியங்களைத் தாருங்கள். நாங்கள் அவர்களை விசாரித்து தண்டனை தருகின்றோம். அவர்கள்தாம் குற்றவாளிகள் என்று நிரூபிக்கப் பட்டால் நாங்கள் தரும் தண்டனை கடுமையானதாக இருக்கும். ஷரீயா சட்டங்கள், கடும் சட்டங்கள். கடுமையாகவும், பொதுவெளியில் வைத்துத் தரப்படுவதாகவும் இருக்கும். இந்தத் தண்டனையைப் பார்ப்பவர்கள் அதுபோன்ற செயல்களில் தங்கள் வாழ்நாள் முழுவதும் ஈடுபடமாட்டார்கள். இந்த வகையில் இஸ்லாமிய ஷரீயா, குற்றங்களுக்குத் தரும் தண்டனைகள் குற்றங்களை வேரோடு கிள்ளி எறியும்.

இதில் அமெரிக்கா, நாங்கள் எதையும் தரமாட்டோம். நாங்கள் கேட்பவர்களை நீங்கள் ஒப்படைக்க வேண்டும் என்றது.

சரி எங்களிடம் ஒப்படைக்காவிட்டால் ஒரு பொது நாட்டிடம் நீங்கள் ஆதாரங்களை ஒப்படையுங்கள். நாங்கள் அங்கே, நீங்கள் சொல்பவர்களை ஒப்படைக்கின்றோம். விசாரணை நடுவுநிலையோடு நடக்கட்டும் என்றார்கள்.

ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் வைத்த இந்தக்கோரிக்கை அல்லது இந்த ஆலோசனை மிகவும் நியாயமானது, நேர்மையானது என அமெரிக்காவில் நியாயஉணர்வு கொண்டவர்களும், நீயோம் சோம்ஸ்கி போன்ற மனித உரிமை ஆர்வலர்களும் கூறினார்கள்.

உலகெங்கிலும் உள்ள நியாயவான்களும் கூறினார்கள். ஆனால் அமெரிக்கா எந்த நியாயத்திற்கும் கட்டுப்படவில்லை. நாங்கள் கேட்பவர்களை நீங்கள் ஒப்படைக்க வேண்டும் இல்லையேல் நாங்கள் குண்டுபோட்டு அழிப்போம் என்றார்கள்.

ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் நாங்கள் நியாயத்திற்கும், நீதிக்கும்தான் கட்டுப்படுவோம் அல்லாமல் அமெரிக்காவின் அச்சுறுத்தலுக்கு அஞ்சமாட்டோம் எனக்கூறிவிட்டார்கள்.

அப்போது ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்குத் தலைவராக இருந்த அறிஞர். முல்லா உமர் அவர்கள் Voice of America - அமெரிக்காவின் குரலுக்கு *26.09.2001*ல் கொடுத்த பேட்டியை இங்கே தருகின்றோம்.

VOA : VOICE OF AMERICA

அமெரிக்காவின் குரல் பேட்டி

VOA-கேள்வி: நீங்கள் ஏன் ஒசாமா பின்லேடன் அவர்களை ஒப்படைத்திடக்கூடாது?

உமர்-பதில்: இது ஒசாமா பின்லேடன் என்பவரோடு சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சனையல்ல. இது இஸ்லாத்தோடு சம்பந்தப்பட்ட பிரச்சனை. இங்கு இஸ்லாத்தின் கொள்கை வருகின்றது. அதேபோல் ஆப்கானிஸ்தானின் கௌரவம் அதன் பண்பாடு ஆகியவை சம்பந்தப்பட்டவை.

VOA-கேள்வி: அமெரிக்கா தீவிரவாதத்திற்கு எதிராக போரைப் பிரகடனப்படுத்தி இருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்களா?

உமர்-பதில்: நான் இரண்டு வாக்குறுதிகளை ஆழமாகச் சிந்தித்துக்கொண்டிருக்கின்றேன்.

ஒன்று அல்லாஹ்வின் வாக்குறுதி.

இன்னொன்று புஷ்-ன் வாக்குறுதி.

இறைவனின் வாக்குறுதி சொல்லுகின்றது, அல்லாஹ்வுடைய பூமி விசாலமானது. நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் ஒரு பயணத்தைத் தொடங்கலாம். நீங்கள் இந்த பூமியில் எங்கே வேண்டுமானாலும் குடியேறலாம், நீங்கள் பாதுகாக்கப்படுவீர்கள்.

புஷ்-ன் வாக்குறுதி என்னவெனில் இந்தப் பூமியில், நீங்கள் எங்கேயும் மறைந்து வாழ்ந்திட இயலாது. நான் கண்டுபிடிக்க முடியாத இடம் என்றொன்று எங்கேயுமில்லை.

நாங்கள், யார் தன்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றுகின்றார்கள் என்று பார்ப்போம்.

VOA-கேள்வி: நீங்கள் உங்கள் மக்கள், உங்கள் இயக்கம், தாலிபான்கள் (முஜாஹித்கள்), உங்கள் நாடு இவற்றைப் பற்றிக்

கவலைப்படவில்லையா? நீங்கள் உங்களைப் பற்றியும் கவலைப்பட வில்லையா?

உமர்-பதில்: அனைத்து ஆற்றலும் அழகாய் பெற்ற அல்லாஹ், அவனை நம்பி நிற்பவர்களையும், முஸ்லிம்களையும் காப்பாற்றுவான், உதவி செய்வான், உறுதுணையாய், உற்றதுணையாய் நிற்பான். அவன் அநியாயக்காரர்களுக்கு நிச்சயமாகத் துணை நிற்கமாட்டான். இந்த உலகின் விவகாரங்களில் அமெரிக்கா பலமிக்கது. அது எல்லோருடைய கணிப்பைவிட இரு மடங்கே ஆகட்டும். அதனிலும் அதிகமாகவே இருக்கட்டும். ஆனாலும் அது எங்களை வாகைகாணும் அளவுக்கு வலுவானதல்ல. அல்லாஹ் எங்களோடிருந்தால் யாரும் எங்களை வெல்லமுடியாது. இந்த நம்பிக்கையில் நிலையாக இருக்கின்றோம், அழுத்தமாக நிற்கின்றோம்.


VOA-கேள்வி: நீங்கள் கவலைப்படவில்லை என்கின்றீர்கள். ஆனால் உலகெங்கும் வாழும் ஆப்கானிஸ்தான் மக்கள் கவலைப்படுகிறார்களே?

உமர்-பதில்: நாங்களும் கவலைப்படுகின்றோம். மிகப்பெரிய பிரச்சனைகள் எதிரே வரவிருக்கின்றன. ஆனால் நாங்கள் அல்லாஹ்வின் அருளை நம்பி நிற்கின்றோம். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். நாங்கள் ஒசாமா பின்லேடனை ஒப்படைத்து விட்டால், இன்று ஒப்படைக்க சொல்பவர்களே நாளை எங்களை வைவார்கள். ஒவ்வொருவரும் அமெரிக்காவுக்கு அஞ்சுகின்றார்கள். அதனால் அதனை திருப்திபடுத்திட வேண்டும் என விரும்புகிறார்கள். ஆனால் அமெரிக்கா இஸ்லாத்தை பிணையாக எடுத்துக்கொண்டது.

நீங்கள் இஸ்லாமிய நாடுகளை கணக்கில் கொள்வீர்கள் என்றால், எல்லா மக்களும் பீதிவயப்பட்டு நிற்கின்றார்கள். அவர்கள் இஸ்லாத்திற்கு இங்கே, இப்போது வேலை இல்லை என நினைக்கின்றார்கள். அது காலாவதியாகிவிட்டது எனக் கருதுகின்றார்கள். ஆனால் (எங்கள்) மக்கள் இஸ்லாம் சொன்ன நம்பிக்கைகளில் உறுதியாக இருக்கின்றார்கள்.

VOA-கேள்வி: அமெரிக்கா இஸ்லாத்தைப் பிணையாக எடுத்துக்கொண்டது என்பதன் பொருள் என்ன?

உமர்-பதில்: அமெரிக்கா உலகிலுள்ள இஸ்லாமிய நாடுகளின் அரசுகளை கையிலெடுத்து ஆட்டிப் படைக்கின்றது. மக்கள் இஸ்லாமிய நாடுகளிலுள்ள




அரசுகளிடம் இஸ்லாத்தை பின்பற்றுங்கள் என்கின்றார்கள். ஆனால் அரசாங்கங்கள் அதைக் கவனிப்பதில்லை. காரணம், அவை அமெரிக்காவின் கைகளிலிருக்கின்றது. யாராவது அங்கே இஸ்லாத்தைப் பின்பற்றினால் அரசு அதாவது இஸ்லாமிய நாடுகளிலுள்ள அரசு அவர்களைக் கைது செய்கின்றது, சித்திரவதை செய்கின்றது, கொலை செய்கின்றது. இதுதான் அமெரிக்காவின் இப்போதைய பணி. அமெரிக்காவின் அழிவுக்கு அமெரிக்காவே காரணம்.

என்னையோ, ஒசாமா பின்லேடனையோ கொன்று விட்டால் அமெரிக்காவின் பிரச்சனை தீர்ந்துவிடும் எனப்பொருளல்ல. அமெரிக்கா தனது அணுகு முறையையும், தனது கொள்கையையும் மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். அது தனது சாம்ராஜ்யத்தை உலகின் இதரப்பகுதிகளில் நிலைநாட்டிட முயலுவதை நிறுத்திடவேண்டும். குறிப்பாக இஸ்லாமிய நாடுகளில் அது தன்னைத் திணிக்கக்கூடாது.

VOA-கேள்வி: அப்படியானால் நீங்கள் ஒசாமா பின்லேடன் அவர்களை அமெரிக்காவிடம் ஒப்படைக்க மாட்டீர்கள் அப்படித்தானே?

உமர்-பதில்: நிச்சயமாக நாங்கள் ஒப்படைக்க




மாட்டோம் அப்படிச் செய்தால், நாங்கள் முஸ்லிம்கள் அல்ல. இஸ்லாமிய நெறிமுறைகளை விட்டுக்கொடுக்க முடியாது. அவற்றிற்கு முற்றுப் புள்ளி வைத்துவிடமாட்டோம். அமெரிக்கா எங்களைத் தாக்கலாம். எங்களுக்கு உதவிட யாருமில்லை. அல்லாஹ்வைத் தவிர!

VOA-கேள்வி: அமெரிக்கா தன் முழுபலத்தையும் பயன்படுத்தி உங்களைத் தாக்கினால், அமெரிக்கா உங்களை அழித்துவிடும். இதில் உங்கள் மக்கள் இன்னும் அதிகமாக கஷ்டப்படமாட்டார்களா?

உமர்-பதில்: அமெரிக்கா அப்படி முடிவெடுக்காது எனக் கருதுகின்றேன். தயவுகூர்ந்து ஒன்றை குறித்துக் கொள்ளுங்கள். அல்லாஹ்வை நம்பி நிற்பதைத்தவிர எங்களுக்கு வேறு வழியில்லை. ஒருவர் அல்லாஹ்வையே முழுமையாக நம்பி நின்றால் அல்லாஹ் அவனுக்கு நிச்சயமாக உதவி செய்வான். அவன்மீது கருணைகாட்டுவான். அவனை வெற்றிக்கு இட்டுச் செல்வான்.

**வெற்றியின் இரகசியம்**

முல்லா உமர்(ரஹ்) அவர்களின் இந்தப் பேட்டியைப் படிப்பவர்கள், என்ன இப்படி அல்லாஹ்... அல்லாஹ்... என்கின்றாரே நடைமுறையில் இதெல்லாம் எப்படி ஒத்துவரும் என எண்ணலாம்.

அவர் அல்லாஹ்வின் மீது வைத்த நம்பிக்கயானது எந்த அளவிற்கு உதவி செய்திருக்கின்றது என்பதை இப்போது கண்கூடாகக் கண்டுகொண்டோம்.

முல்லா உமருக்கு மட்டுமல்ல இதற்கு முன் வல்லரசுகளை வீழ்த்திய முஜாஹித்களுக்கும் (அல்லாஹ்வின் வழியில் போர் செய்பவர்களுக்கும்) அல்லாஹ் இதே வெற்றியைக் கொடுத்திருக்கின்றான் என்பது இங்கே நினைவு கூரத்தக்கது.

அடுத்து முல்லா உமர் எந்த அல்லாஹ்வை நம்பி நிற்கின்றாரோ, அந்த அல்லாஹ்வும், அந்த நம்பிக்கையும்தான் காலகாலமாக முஸ்லிம்களுக்கு வெற்றியைக் கொடுக்கின்றது என்கின்றார்கள் இஸ்லாத்திற்கு வெளியே நின்று முஸ்லிம்களின் வெற்றித் தோல்விகளை ஆய்வு செய்தவர்கள். இவர்கள் முஸ்லிம்கள் அல்ல. இன்னுஞ்சொன்னால் இஸ்லாத்தை வெறுக்கக் கற்றுக்கொண்டு மற்றவர்களுக்கும் அந்த வெறுப்பைக் கற்றுக் கொடுப்பவர்களின் பூமியில் பிறந்து வாழ்ந்தவர்கள்.

அவர்களில் ஒருவர்தான் டேவிட்செல்போன்ட் என்பவர்."DAVID SELBOURNE "

இவர் ஒரு நீண்ட ஆராய்ச்சியை மேற் கொள்கின்றார். அதில் எங்கெல்லாம் இஸ்லாம் தலைதூக்கிட தலைப்பட்டதோ அங்கெல்லாம் அதற்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்கள் என்கின்றார். இந்தக் கொலைகளை செய்யும் வழியில் (TARGETTED KILLING) அப்பாவி முஸ்லிம்கள் ஏராளமானோர் கொலை செய்யப்பட்டார்கள். பல கோடி முஸ்லிம்கள் பலியானார்கள்.

தனியாக இஸ்லாத்தின் எழுச்சிக்கு வித்திடுபவர் களை கொலை செய்த அடுத்தகட்டத்தில் முஸ்லிம் நாடுகளின் ஆட்சிமாற்றங்கள், அந்த வகையில் முஸ்லிம் நாடுகள் மேல் குண்டுமழைகளைப் பொழிவது. இந்த வகையில் ஆப்கானிஸ்தானில் இவர்கள் வீசிய குண்டுகளில் இறந்தவர்கள் ஒபாமாவின் ஆட்சிகாலத்தில் மட்டும் மூன்று லட்சம் இதனை FRONT LINE ஏடு தொடர்ந்து வெளியிட்டது.

டேவிட் செல்போன்ட்டின் கருத்துப்படி மூன்றாவது உலகப்போர் தொடங்கி நடந்து கொண்டேதான் இருக்கின்றது. அது இரண்டாவது உலகப்போர் முடிந்த உடனேயே தொடங் கிவிட்டது. 1948 இஸ்ரேல் உருவாக்கப்பட்டபோது அது ஒரு புதுவேகத்தைப் பெற்றது.

1979ல் ரஷ்யா ஆப்கானிஸ்தானுக்குள் நுழைந்து

அந்த பூமியை மயானக்காடாக மாற்றியது. 1989ல் ஆப்கானிஸ்தானில் தோற்றுப்போய் அது வெளியே வந்தது.

1991-1992ல் அமெரிக்கா ஒரே வல்லரசு என்ற பெருமையைப் பேசி பீற்றிக்கொண்டது.

1992ல் உலகில் தன் ஆதிக்கத்தையும், தன் மேலைநாட்டுக் கலாசாரத்தையும், உலகின் இதர நாடுகளின்மேல் நிலைநாட்டிடும் திட்டத்தை வகுத்தது. உடனேயே தன் திட்டத்தை செயல் படுத்திட முனைந்தது. PNAC - PROJECT FOR NEW AMERICAN CENTUARY

அதன் போர்த் திட்டங்கள் ஆப்கானிஸ்தான், ஈராக் ஆகிய நாடுகளில் சிக்கிக்கொண்டன. இப்படி உலகின் பல்வேறு போர் அரங்கங்களிலும், ஆதிக்க சக்திகள் அதிகமான படைபலமும், பணபலமும் கொண்டநாடுகள், முஸ்லிம்களிடம் எப்படித் தோற்றுப்போகின்றன என்பதை ஆய்வு செய்கின்றார்.

அதை ஒரு நூலாகத் தருகின்றார். அதுதான் THE LOOSING BATTLE WITH ISLAM இஸ்லாத்தோடு போரிட்டுத் தோற்றது எப்படி? இதில் இஸ்லாத்தைத் தூக்கிப் பிடிப்பவர்கள் எப்படி? வெற்றி கொள்கின்றார்கள் என்பதை, ஒரு அத்தியாயத்தில் குறிப்பிடுகின்றார். அந்த அத்தியாயத்தின் பெயரே "THE FORCE OF FAITH" நம்பிக்கையின் ஈமானின் ஆற்றல்.

ஆக, முல்லா உமர்(ரஹ்) அவர்கள் எந்தப் பலத்தைக்கொண்டு தன் முஜாஹித்களை பலப்படுத்தினாரோ அந்த பலம்தான் எல்லா வல்லரசுகளையும் வீழ்த்தி இருக்கின்றது என்பது முஸ்லிமல்லாத ஆய்வாளர்களும் ஒத்துக் கொண்டுள்ள பலம்...

இந்த பலம் இஸ்லாத்தை நிலைநாட்டிட முனைவோரிடம், எப்போதும் இருந்துகொண்டே இருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை**

**2001 செப்டம்பர் 11:**

அமெரிக்காவின் இரட்டைக்கோபுரங்கள் தகர்க்கப்பட்டன.

எந்த விசாரணையும் இல்லாமல் அமெரிக்கா "அல்கொய்தா" என்ற அமைப்பின் பெயரைச் சொன்னது. பின்லேடன்(ரஹ்) அவர்களை குற்றவாளி எனப்பிரகடனப்படுத்தியது.

அவர்கள் ஆப்கானிஸ்தானில் அடைக்கலம் புகுந்ததாக அறிவித்தது.

ஆப்கானிஸ்தானை ஆண்டுகொண்டிருந்த முஜாஹித்களிடம், பின்லேடன் அவர்களையும்

# "தாலிபன்" என்ற சொல் நீக்கம்: ஐநா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா போட்ட யூ-டர்ன்

தாலிபன்கள் காபூலை கைப்பற்றிய ஒரு நாளுக்குப் பிறகு அதாவது ஆகஸ்ட் 16 அன்று,, ஐக்கிய நாடுகள் சபையின் இந்தியாவின் நிரந்தரப் பிரதிநிதி டி.எஸ். திருமூர்த்தி , யுஎன்எஸ்சி சார்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டார்.

"பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் பயங்கர வாதத்தை எதிர்த்துப் போராடுவதன் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர். ஆப்கானிஸ்தானின் எந்தப் பகுதியையும் எந்த நாட்டையும் அச்சுறுத்தவோ அல்லது தாக்கவோ பயன்படுத்தக் கூடாது என்பதையும், தாலிபன்கள் அல்லது ஆஃப்கன் குழுக்கள் அல்லது எந்த தனிநபரோ, வேறு எந்த நாட்டிலும் செயல்படும் பயங்கர வாதிகளுக்கு ஆதரவளிக்கக் கூடாது என்பதையும் உறுதி செய்ய வேண்டும்,"என்று அந்த அறிக்கையில் குறிப்பிட்டார்.

ஆகஸ்ட் மாதத்தில் ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் இந்தியாவின் தலைமையில் உள்ளது என்பதும் இந்த அறிக்கையில் இந்தியா கையெழுத்திட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

சர்வதேச சமூகத்தில் தாலிபன்கள் இனி நீண்ட காலத்திற்கு தனிமைப்படுத்தப்பட மாட்டார்கள் என்ற உணர்வுஇதன்மூலம்ஏற்பட்டுள்ளது.

அடுத்தஅறிக்கையில்'தாலிபன்'காணவில்லை

காபூல் விமான நிலையத்தில் நடந்த குண்டுவெடிப்பில் 170-க்கும்மேற்பட்டோர்கொல்லப்பட்டசம்பவம்நிகழ்ந்த மறுநாள் அதாவது ஆகஸ்ட் 27 அன்று, ஐநா பாதுகாப்பு கவுன்சில் தலைவர் திருமூர்த்தி மீண்டும் கவுன்சில் சார்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டு இந்தத் தாக்குதலை கண்டனம் செய்தார்.

இந்த அறிக்கையில் ஆகஸ்ட் 16 அறிக்கையின் ஒரு பத்தியும் இடம்பெற்றிருந்தது. ஆனால் அதில் 'தாலிபன்' என்றசொல்இடம்பெறவில்லை.

"பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் பயங்கர வாதத்தை எதிர்த்துப் போராடுவதன் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தினர். ஆப்கானிஸ்தானின் எந்தப் பகுதியையும் எந்த நாட்டையும் அச்சுறுத்தவோ அல்லது தாக்கவோ பயன்படுத்தக் கூடாது என்பதையும், ஆப்கன் குழுக்கள்அல்லது எந்ததனிநபரோ,வேறு எந்தநாட்டிலும் செயல்படும்பயங்கரவாதிகளுக்குஆதரவளிக்கக்கூடாது என்பதையும் உறுதி செய்ய வேண்டும்," என்று இந்த அறிக்கைதெரிவிக்கிறது.

தாலிபன் என்ற வார்த்தை நீக்கப்பட்டிருப்பது,இந்தியா உள்பட ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் உறுப்பினர்கள் தாலிபன்களை ஒரு 'அரசு அமைப்பாக' பார்க்கிறார்கள் என்பதைக்காட்டுகிறது.

**- நன்றி-பிபிசி**

இன்னும் 20பேரையும் நிபந்தனையின்றி ஒப்படைக்க வேண்டும் என்றது.

ஆதாரங்களைத் தராவிட்டால், ஒப்படைக்க மாட்டோம் என்றது ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் அரசு.

### 2001 அக்டோபர் 07:

அன்று தாக்குதலைத் தொடங்கியது அமெரிக்கா இதற்கு "AWE AND SHOCKS" எனப்பெயர் வைத்தது .அதாவது "அச்சமும் அதிர்ச்சியும்" அத்தோடு "MODERN CRUSADE HAS STARTED " என்றார் ஜார்ஜ் புஷ்.

பல பைபிள் வசனங்களை அப்போது அவர் பைபிளின் பெயரைச் சொல்லாமல் சொன்னார்.

IF YOU ARE NOT WITH US YOU ARE AGAINST US என்பது அவரது மிகப்பெரிய பிரகடனங்களுள் ஒன்று. இதன் பொருள், "நீங்கள் எங்களோடு இல்லை என்றால் நீங்கள் எங்கள் எதிரிகளோடு இருக்கின்றீர்கள்."

இது பைபிளில் புதியஏற்பாடு மத்தேயு 12:30ல் இடம்பெற்ற பைபிள் வசனம். அங்கு கிறிஸ்தவ பிரச்சாரங்கள் முழுவீச்சாக நடைபெற்றது. முஸ்லிம்களை இஸ்லாத்திலிருந்து பிறழச் செய்து, கிறிஸ்தவத்திற்கு மாற்றிடும் பணி பெரிய அளவில் நடைபெற்றது. அங்கு வேலைசெய்த கிறிஸ்தவ மிஷினெரியைச் சார்ந்தவர்களும், பட்டாளத்து சிப்பாய்களும், "எங்களை அனுப்பியது தேவாலயங்கள் அல்லாமல் அரசாங்கம் அல்ல." என்றார்கள்.

"IT IS A MISSION FROM OUR GOD

NOT FROM OUR GOVERNMENT"

(AL JAZEERA ,5th MAY - 2009 FOOTAGE )

இப்படித் தங்கள் இலக்கை அமைத்துக் கொண்டார்கள். இவர்கள் செலவு செய்த 3 ஆயிரம் கோடி டாலர்களில் பெரும்பகுதி இந்த பிரச்சாரங்களுக்காக பயன்படுத்தப்பட்டவையே!

இதனை அவர்கள்,

"WE HUNT PEOPLE FOR JESUS, WE HUNT THEM DOWN "

நான் மக்களை இயேசுவுக்காக வேட்டையாடு கின்றோம். நாங்கள் வேட்டையாடிக்கொண்டே இருப்போம் .

2004ல் அமெரிக்க அதிபர் புஷ், தான் இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட போது இப்படிக் கூறினார்.

"THIS WAR WILL FOUGHT FOR ANOTHER 60 OR 70 YEARS"

அதாவது, இந்தப்போர் இன்னும் 60 அல்லது 70 வருடங்களுக்குத் தொடரும். அதாவது 2064-2074 வரைத் தொடரும்.

> அல்லாஹ்விற்கு நன்றி!
> ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கப்படைகள் வெளியேறியவுடன், ஆப்கானிஸ்தான் முஷாஹித்கள்(தாலிபான்கள்) ஆணவம் கொள்ளவில்லை. தங்களுக்கு வெற்றியைத் தந்த அனைத்து ஆற்றலும் ஒருங்கே பெற்ற அல்லாஹ்வுக்கு 'சஜ்தா' செய்து நன்றி செலுத்தினார்கள். அதாவது தலையை தரையிலே வைத்து நன்றி செலுத்தினார்கள்.
> அகிலத்திலுள்ள மக்களுக்கெல்லாம் வழிகாட்டிட வந்த இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியாகும் இது.
> (ஆதாரம்: அல் ஹாக்கிம் 4/291)

ஆக இப்போது அவர்கள் பின்வாங்கி இருக்கின்றார்கள், என எண்ணிட வேண்டாம். அவர்கள் ஏதாவது ஒரு வழியில் மீண்டும் இதைத் தொடர்வார்கள். அதற்காக ஒரு பெரும் தீவிரத் தாக்குதலை நடத்தலாம். அமெரிக்காவிலேயே அல்லது உலக மக்களின் கருத்தை கவரும் வண்ணம் ஏதேனும் ஓர் அழிவை ஏற்படுத்தலாம். பழியை முஸ்லிம்கள் மீது போடலாம் பொறுத்திருந்து பார்ப்போம்.

### 2010 முதல் 2015

இந்தக் காலகட்டங்களில் அமெரிக்க இராணுவ வீரர்கள் அதிகளவில் மடிந்தார்கள். அவர்கள் எப்படி யெல்லாம் மடிந்தார்கள் என்பதன் ஒரு பகுதியை அபூ அஃப்ரா தந்துள்ளார்கள், இந்த இதழில் படியுங்கள்.

அதிகமான பிணங்கள் அமெரிக்கா செல்லவே, இனி ஆப்கானிஸ்தான் முஜாஹித்களை வெல்ல முடியாது என்ற முடிவுக்கு வந்தார்கள். ஆப்கானிஸ்தானிலிருந்து பின்வாங்கிடுவதை தேர்தல் வாக்குறுதியாக அமெரிக்க மக்களுக்குத் தந்தார்கள்.

இங்கே சற்று நின்று நிதானித்துச் சிந்திக்க வேண்டும். அமெரிக்காவின் வீதிகளில் ஆப்கானிஸ் தானிலிருந்து, படைகளை பின் வாங்கிட வேண்டும் எனக்கோரி யாரும் போராடிடவில்லை.

நாடாளுமன்றத்தில் போரின் போக்கை விவாதித்தார்கள். ஆனால் படைகளை பின்வாங்கிட வேண்டும் என்று யாரும் பேசிடவில்லை. ஒரேயொரு பெண்ணைத் தவிர! அவர் பெயர் தான் பார்பரா லீ. அவரைப்பற்றி தனிக்கட்டுரை ஒன்றை தந்துள்ளோம்.

அமெரிக்காவின் பின்வாங்கலுக்கு பின்னால் இருப்பது, அங்கே இழந்த படைவீரர்களின் எண்ணிக்கை. இறந்தவர்களின் அதாவது இறந்த

இராணுவ வீரர்களின் பிரச்னை புதைத்ததோடு புதைந்து போனது. ஆனால் போரில் காயம்பட்ட இராணுவ வீரர்கள், தங்களுடைய கடைசி நாள்வரை இன்னொருவரின் உதவியோடு வாழ்ந்திடும் நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.

அடுத்து ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் பைத்தியம் பிடித்தவர்களாக அலைந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்கு மேல் 89,100 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள். காலந்தாழ்ந்தே புத்தி வந்தது. முட்டாள் தனங்களை முழு நீள திட்டங்களாக தீட்டி வைத்திருந்த அமெரிக்காவுக்கு!

**2015 முதல் 2018**

(தாலிபான்களோடு) முஜாஹித்களோடு பேசிட திரிந்தார்கள் அமெரிக்கர்கள். காரணம், யார் தாலிபான்களின் பிரதிநிதிகள் என்பது அமெரிக்காவுக்குத் தெரியவில்லை. இதில் அமெரிக்காவுக்கு வருவோருக்கு பல ஆயிரம் டாலர்களை சன்மானமாகத் தருவோம் என அறிவித்தார்கள். பலர் “புரோக்கர்கள்” போல வந்தார்கள். தாலிபான்களின் பிரதிநிதிகளை எங்களுக்கு தெரியும் என்று அமெரிக்கா கொடுத்த டாலர்களை பெற்றுக் கொண்டார்கள். ஆனால் தாலிபான்களின் பிரதிநிதிகளை கண்ணில் கூட காட்டிடவில்லை.

இப்படி பல ஆயிரம் டாலர்களை இழந்த பின் “கத்தார்” நாட்டின் காலைப் பிடித்தது அமெரிக்கா. பின்னர் கத்தார் நாட்டின் தலைநகரில் - தோகாவில் நாங்கள் எங்கள் செலவில் அலுவலகம் அமைத்து தருகின்றோம். தயவுகூர்ந்து பேச வாருங்கள் எனக் கூறியது அமெரிக்கா.

பேச்சுவார்த்தை எதிரியோடு என்றால் பேசுங்கள். அதில் வாக்குறுதிகளைத் தந்தால் நேர்மையாக நிறைவேற்றுங்கள். எதிரிகள் பேச்சுவார்த்தை என்ற பெயரில் கீழறுப்பு வேலைகளில் ஈடுபட்டால், அல்லாஹ் அவர்களின் சூழ்ச்சிகளை முறியடிப்பான் என்பது அல்லாஹ்வின் வான்மறையாம், இஸ்லாம் காட்டும் வழிமுறைகள்.

அதன்படி பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்கள், அல்லாஹ்வின் வழியில் போர் செய்து கொண்டிருந்த முஜாஹித்கள்.

பேச்சுவார்த்தையின் போது, ஆப்கானிஸ்தானில் அமெரிக்கப்படைகளின் மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்றது அமெரிக்கா. முடியாது, பேச்சுவார்த்தைகளில் முடிவு எட்டப்படும் வரை போர் நிறுத்தம் இல்லை என்று கூறிவிட்டார்கள் முஜாஹித்கள்.

முஜாஹித்கள் இட்ட அத்தனை கட்டளைகளையும் அமெரிக்கா ஏற்றுக் கொண்டது. அமெரிக்கா விதித்த


Subscribe →

The Guardian

News website of the year

News | Opinion | Sport | Culture | Lifestyle

World news

## George Bush: ‘God told me to end the tyranny in Iraq’

President told Palestinians God also talked to him about Middle East peace

Ewen MacAskill

Fri 7 Oct 2005 02.28 EDT

எந்த நிபந்தனைகளையும், ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

இறுதியில் மே 1ம் நாளுக்குள் அமெரிக்கப் படைகளின் பெரும் பகுதி வெளியேறிட வேண்டும் என்பது முஜாஹித்களின் நிபந்தனை. ஆனால் அமெரிக்கா ஏற்றுக்கொள்ளவில்லை. ஒரேயடியாக எல்லாப்படை வீரர்களையும் அள்ளிக் கொண்டு போக எங்களிடம் வசதியில்லை. மூன்று, நான்கு கட்டமாகத்தான் நாங்கள் வெளியேறுவோம் என்றது. கடைசி கட்டம் செப்டம்பர் 11, 2021 என்றது.

செப்டம்பர் 11ஐ அமெரிக்கா சொன்னதற்கு காரணம், இரட்டை கோபுரங்கள் தகர்க்கப்பட்ட நாளைக் குறிப்பிடத்தான்.

தாலிபான்கள் மே 01. 2021க்கு முன் படைவீரர்கள் அனைவரும் போய்விட வேண்டும். பாதுகாப்பிற்காக நிறுத்தப்படும் படைகள் ஆகஸ்டு 31க்குள் போய்விட வேண்டும் என்றார்கள். அப்படியே செய்கின்றோம், என அப்படியே செய்தது அமெரிக்கா.

**மு.குலாம் முஹம்மது**

# 89,100 அமெரிக்க வீரர்கள் தற்கொலை வெளிவந்த இரகசியம்

செப்டம்பர் 11 என்று அறியப்படும் அமெரிக்க இரட்டை கோபுர தாக்குதலுக்கு பிறகு அமெரிக்கா தீவிரவாதத்திற்கு எதிரான தாக்குதல் என்ற பெயரில் தாலிபான்கள் உடன் நடத்தி வரும் போரில் இதுவரை ஆயிரக்கணக்கான அமெரிக்க வீரர்கள் கொல்லப்பட்டதும் அவர்களின் சடலங்கள் தொடர்ச்சியாக அமெரிக்காவுக்கு அனுப்பப்பட்டு வந்ததும் இதுவரை மேற்கத்திய ஊடகங்களால் மறைக்கப்பட்ட செய்தி. இதில் இறந்தவர்களின் எண்ணிக்கையை இதுவரை அமெரிக்கா குறைத்தே காட்டி வந்தது. ஆனால் தற்போது இந்தப் போரில் அமெரிக்கா இழந்துள்ள போர் வீரர்கள் காயம்பட்ட போர்வீரர்கள் அதுமட்டுமன்றி இந்தப் போரின் உக்கிரம் எதிரிகளின் வீரம் இவற்றை தாங்க இயலாமல் போர்க்களத்தில் இருந்து புறமுதுகு காட்டி ஓடி வந்து தற்கொலை செய்து கொண்ட அமெரிக்க வீரர்கள் என ஒரு மிகப்பெரிய பட்டியலை அமெரிக்க பாதுகாப்பு படையின் தற்கொலை தடுப்பு இயக்குனரகம் வெளியிட்டுள்ளது. இது குறித்த ஒரு ஆய்வறிக்கை போஸ்டன் யூனிவர்சிட்டியில் இருந்து வெளிவந்துள்ளது.

20 YEARS OF WAR
A COSTS OF WAR RESEARCH SERIES

WATSON INSTITUTE
INTERNATIONAL & PUBLIC AFFAIRS
BROWN UNIVERSITY

BOSTON UNIVERSITY — The Frederick S. Pardee Center for the Study of the Longer-Range Future

***High Suicide Rates among United States Service Members and Veterans of the Post-9/11 Wars***

***Thomas Howard Suitt, III[1]***
***Boston University***

***June 21, 2021***

**Summary**

Suicide rates among the United States public have been increasing for the past twenty years, but among active military personnel and veterans of the post-9/11 wars, the suicide rate is even higher, outpacing average Americans. The "post-9/11 wars" refers to ongoing U.S.-led military operations around the world that grew out of President George W. Bush's "Global War on Terror" and the U.S. invasion of Afghanistan in 2001. **This paper estimates 30,177 active duty personnel and veterans of the post 9/11 wars have died by suicide, significantly more than the 7,057 service members killed in post-9/11 war operations.** These high suicide rates are caused by multiple factors, some inherent to fighting in a war and others unique to America's "war on terror" framework. Partially, they are due to risks common to fighting any war: high exposure to trauma, stress, military culture and training, continued access to guns, and the difficulty of reintegrating into civilian life. In the post-9/11 era, the rise of improvised explosive devices (IED), the attendant rise in traumatic brain injuries (TBI), the war's protracted length, advances in medical treatment that keep service members in the military longer, and the American public's disinterest in the post-9/11 wars, have greatly contributed to increased suicide rates. High suicide rates mark the failure of the U.S. government and U.S. society to manage the mental health costs of our current conflicts.

[1] Thomas Howard "Ben" Suitt, PhD, is a recent graduate of the Graduate Program in Religion at Boston University. Email: bensuitt@bu.edu. The author would like to thank Neta Crawford, Stephanie Savell, and Heidi Peltier for their time, support, and detailed feedback on earlier drafts. He is also indebted to the courageously honest veterans who contributed their firsthand experiences in service to this project.

தாலிபான் போராளிகளுக்கு எதிரான போரில் தன்னுடைய தோல்வியை ஒப்புக்கொண்டு அமெரிக்கா ஆப்கானிஸ்தானத்திலிருந்து வெளியேறியுள்ளது. இப்போது வெளியேறாவிட்டால் இனி எப்போதும் ஆப்கானிஸ்தானத்தை விட்டு வெளியேற நல்ல நேரம் கிடைக்க போவதே கிடையாது என்று அமெரிக்க அதிபர் கூறியதிலிருந்து தாலிபான் போராளிகள் அமெரிக்காவிற்கு கொடுத்துள்ள அடி எப்படிப்பட்டது என்று அனைவராலும் உணர்ந்து கொள்ள முடியும். பிரிட்டன், ரஷ்யா போன்ற வல்லரசுகளை வீழ்த்திய ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் தற்போது அமெரிக்காவையும் அதன் நேச நாடுகளையும் ஒருசேர வீழ்த்தி அவர்களை புறமுதுகிட்டு ஓட செய்துள்ளது,

அமெரிக்கா இப்போரில் கடந்த ஜூலை ஆறாம் தேதி பக்ராம் விமானத் தளத்தை விட்டு யாருக்கும்

சொல்லாமல் கொள்ளாமல் இரவோடு இரவாக அங்கிருந்த பொருட்களை அப்படியே விட்டு விட்டு ஓடியது. இதுகுறித்த செய்தி பிபிசி செய்தி அறிக்கையில் வெளிவந்தது.

https://www.bbc.com/news/world-asia-57682290

இதன் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக அமெரிக்கா மற்றும் அதன் நேச படைகள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறின. கடைசியாக ஒட்டுமொத்த ஆப்கானிஸ்தான் தாலிபான்கள் வசம் வந்தது.

அமெரிக்கா மற்றும் அதன் நேச நாடுகளின் இந்த தோல்விக்கும் அமெரிக்கா ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறியதற்கும் பல்வேறு காரணங்கள் கூறப்பட்டாலும் முக்கியமான காரணம் இப்போரில் அமெரிக்க படையினரின் உயிரிழப்பே என்று கூறப்படுகிறது. அதனை போஸ்டன் யுனிவர் சிட்டியின் ஆய்வறிக்கை உறுதிப்படுத்துகிறது.

2001ஆம் ஆண்டு ஜார்ஜ் புஷ் ஆரம்பித்து வைத்த தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போரில் இதுவரை கிட்டத்தட்ட 7057 ராணுவ வீரர்கள் கொல்லப்பட்டதாக போஸ்டன் யூனிவர்சிட்டியில் வெளிவந்த ஆய்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இது அதிகாரப்பூர்வமான அறிவிப்பு களில் அடிப்படையில் தெரிவிக்கப்பட்டுள்ள எண்ணிக்கை ஆனால் உண்மையில் இதை போன்று பல மடங்கு அதிக எண்ணிக்கையில் அமெரிக்க வீரர்கள் இறந்திருக்கக்கூடும் என்று கணிக்கப் படுகிறது. அதேபோல் பணியிலிருந்த போது தற்கொலை செய்துகொண்ட அமெரிக்க வீரர்களின் எண்ணிக்கையோ இதை போன்று நான்கு மடங்கு அதிகம். அதாவது அதிகாரப்பூர்வ அறிவிப்பு என்னவென்றால் 30,177 பேர் பணியிலிருந்த போது தற்கொலை செய்து கொண்டு இறந்துள்ளனர். இதையும் அந்த ஆய்வறிக்கை தெரிவிக்கிறது. இவ்வளவு அதிகமான எண்ணிக்கையில் அமெரிக்க பாதுகாப்பு படையினர் தற்கொலை செய்து கொண்டது ஏன் என்பதையும் அந்த ஆய்வறிக்கை விவரிக்கிறது.

இவர்கள் அனைவரும் போரில் ஈடுபடுத்தப்பட்ட பின்னர் இங்கு நடந்த தாக்குதல்களினால் ஏற்பட்ட காயங்களை தொடர்ச்சியாக கண்ணால் கண்டு கண்டு மன விரக்தியுற்று பின்னர் சாதாரண வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல் மன அழுத்தம் ஏற்பட்டு தற்கொலை செய்து கொண்டவர்கள். இராணுவ கலாச்சாரம், அங்கு தரப்படும் பயிற்சிகள், துப்பாக்கிகளை தொடர்ச்சியாக கையாளுதல் போன்றவையும் இந்தக் தற்கொலைகளுக்கு காரணமாக கூறப்பட்டாலும் மிக முக்கியமான காரணம் தங்களுடன் உடன் பயணித்தவர்கள், அவர்களுடைடைய சகாக்கள் போரில் காயம்பட்டு கைகளையும் கால்களையும் இழந்து அலறி துடித்த வண்ணம் போர்க்களத்தில் இருந்து மீட்கப்பட்டதும் போர்க்களத்தில் சக தோழர்கள் உடல்கள் தசைகள் பிய்த்து எறியப்பட்டு துண்டு துண்டாகி உயிரற்ற சடலமாக கிடந்ததை கண்களால் காண நேர்ந்ததும் அதற்கு முக்கிய காரணம். மேலும் நீண்ட நாட்கள் அவர்களை போரில் ஈடுபடுத்தியது போன்றவை அவர்களை ஒருவிதமான விரக்தி நிலைக்கு தள்ளி அவர்கள் மனநிலையை பாதித்தது. பின்னர் அவர்கள் சொந்த வீடுகளுக்கு திரும்பிய பின்னர் தற்கொலை செய்து கொண்டனர்.

இதைத் தவிர்த்து ஐஈடி எனப்படும் மேம்படுத்தப்பட்ட வெடிகுண்டு சாதனங்களால் ஏற்பட்ட மூளை அதிர்ச்சி காயங்களால் பணிக்கு திரும்ப இயலாமல் நடைபிணங்களாக ஆனவர்கள் ஆயிரம் ஆயிரம். இந்தப் போரினால் நிரந்தர காயமுற்றவர்கள் அதாவது கைகளை இழந்தவர்கள், கால்களை இழந்தவர்கள், பார்வைகளை இழந்தவர்கள், கேட்கும் திறனை இழந்தவர்கள் போன்றோர் லட்சத்திற்கும் அதிகம். இந்த இழப்புகளை சீர்செய்ய அமெரிக்காவால் இயலாமல் போனது என்கிறது அந்த ஆய்வறிக்கை.

## டொமினிக் மெக்டானியல்


இந்த அளவுக்கு அதிகமான தற்கொலை விகிதம் அமெரிக்க அரசாங்கத்தின் தோல்விக்கான அடையாளம். ஈராக்கில் போரிட்டவர்களின் நிலையும் இந்த ஆய்வறிக்கையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. உதாரணத்திற்கு ஒரு சம்பவம். டொமினிக் மெக்டானியல் ஒரு சார்ஜன்ட். அவர் ஒரு காலாட்படையின் சிறிய பிரிவிற்கு தலைவர். அவர் தரை மார்க்கத்தில் படையை நடத்திச் செல்வதில் வல்லவர். அவருடைய நிபுணத்துவத்தை பயன்படுத்தி அவர் சரியான இடங்களில் துல்லியமாக எதிரிகளை தாக்க வேண்டும்.

2005ல் இராக்கில் உள்ள சதர் நகரத்தில் அவருடன் இளவயதை கொண்ட ராணுவ வீரர்களுடன் எதிரிகளை தாக்கி கொண்டிருந்தபோது அவர்கள் எதிரிகளின் தாக்குதலில் மோசமான காயம் அடைந்தனர். மெக்டானியல் பிராத்தனை செய்தார், கடவுளை உதவிக்கு அழைத்தார். ஆனால் எதுவும் பலனளிக்கவில்லை. கடைசியில் அவர்கள் தனித்து விடப்பட்டதை அவர் உணர்ந்தார். ஒரு மேம்படுத்தப்பட்ட வெடிகுண்டு சாதனம் அவர் உடலையும் ஊனமாக்கியது. அவருடைய மூளைக்கும் கடுமையான பாதிப்பை உண்டாக்கியது. அவர் அந்த பாதிப்பிலிருந்து வெளிவர முடியவே இல்லை. அவர் தனிமைப்படுத்தப்பட்டதாக உணர்ந்தார். அவரை குற்றவுணர்வு துரத்தியது. அவர் செய்த தவறின் காரணமாகவே அவருடைய சகாக்கள் காயப்பட்டதாக ஊனம் அடைந்ததாக அவர் கருதினார். அவருடைய சகாக்கள்

ஒவ்வொருவராக தற்கொலை செய்து கொள்ள ஆரம்பித்தனர். அவருடைய சகாக்களில் 9 பேர் போரில் இறந்தனர். 15 பேர் போருக்குப் பின்னர் காயப்பட்டு ஊனமாகி வீட்டுக்கு திரும்பி தற்கொலை செய்து கொண்டு இறந்தனர் என்கிறார் மெக்டானியல். அவர் அந்த குற்ற உணர்வில் இருந்து மீளவே இல்லை. பின்னர் போதை மருந்துகளை உட்கொண்டு போதைக்கு அடிமையானார். அவருடைய மனைவி அவரை விட்டு விலகி விவாகரத்து வாங்கிக் கொண்டு பிரிந்து சென்றார். இவர் இப்போது உயிருடன் தான் இருக்கிறார், ஆனாலும் ஒரு நடைபிணமாக, மனநோயாளியாக. இவராவது உயிருடன் இருக்கிறார். ஆனால் இங்கே பலர் இந்த மன அதிர்வுகளில் இருந்து மீள்வதில்லை, மாள்கிறார்கள் என்கிறது அந்த ஆய்வறிக்கை.

தீவிரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போரில் ஈடுபடுத்தப்பட்ட அமெரிக்க போர் வீரர்களில் 20 சதவீதம் பேர் மேம்படுத்தப்பட்ட வெடி சாதனங்களால் அதிர்ச்சிகரமான மூளை காயங்களை அடைந்துள்ளனர். இதில் பலர் ஒரு தடவைக்கு மேல் இந்த மேம்படுத்தப்பட்ட வெடி சாதனங்களினால் காயமடைந்துள்ளனர். பாதிப்படைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் பலர் மீண்டும் மீண்டும் அதே போர் தளங்களுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சிக்குள்ளாகி அவர்கள் நடைப்பிணங்களாக வீடுகளுக்கு திரும்பிய பின்னர் தற்கொலை செய்து கொண்டனர். இவையெல்லாம் இந்த தற்கொலை விகிதங்கள் அதிகமாவதற்கு காரணம் என்று அந்த ஆய்வறிக்கை கூறுகிறது.

பணியில் இருந்த போது தற்கொலை செய்து கொண்டு இறந்தவர்கள் 30,177 என்றால் பணியிலிருந்த மற்றும் வீட்டிற்கு திருப்பி அனுப்பப்பட்ட வீரர்கள் ஒட்டுமொத்தமாக 89,100 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இவர்கள் 2005ம் ஆண்டிலிருந்து 2018ம் ஆண்டுக்குள் தற்கொலை செய்து கொண்டவர்கள். சராசரியாக ஒரு வருடத்திற்கு 6,364 பேர் என்ற விகிதத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதே அடிப்படையில் கணக்கிட்டால் 2019 வரை சற்றேறக்குறைய 95,460 பேர் தற்கொலை செய்து கொண்டதாக கணக்கிட இயலும்.




2018, 2019, 2020ம் ஆண்டுகளில் இந்த தற்கொலை எண்ணிக்கை மிகவும் அதிகமாகிப் போனது. எனவே அரசு இது குறித்து அதிகம் விவாதிக்கவில்லை.

ஆனால் இந்த எண்ணிக்கை எல்லாம் குறைத்து காட்டப்பட்ட எண்ணிக்கை என்று அந்த அறிக்கை கூறுகிறது. தற்போது வெளியிடப்பட்டுள்ள எண்ணிக்கைகள் பாதி அளவே. உண்மையில் தற்கொலை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை இது போல இரண்டு மடங்கு இருக்கக்கூடும் என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

ஏனெனில் அரசின் அறிக்கையில் அளவுக்கு

அதிகமான மருந்துகள் எடுத்து இறந்தவர்கள், தனியாக வாகனத்தில் சென்று விபத்துக்குள்ளாகி இறந்தவர்கள், தவறுதலாக ஆயுதங்களை பிரயோகித்தவர்கள் போன்றவற்றை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை. ஒருவேளை இதுவும் தற்கொலை முயற்சிகளாக இருக்கக்கூடும்.

### தற்கொலைக்கான காரணங்கள் என்னென்ன?

வியட்னாம் போரில் கலந்துகொண்ட அமெரிக்க வீரர்களை குழந்தைகளைக் கொன்ற மாபாதகர்கள் என்று போரை விரும்பாத மக்கள் அழைத்தனர். அதேபோலவே 9/11 தாக்குதலுக்காக போர் செய்த போர் வீரர்களையும் பொதுமக்கள் வெறுத்தனர். அவர்களை விரும்பவில்லை. இது அவர்கள் மனதில் மிகப் பெரிய காயத்தை ஏற்படுத்தியது. 2018ல் எடுக்கப்பட்ட ஒரு வாக்கெடுப்பில் மத்திய கிழக்கு நாடுகளில் தீவிரவாதத்திற்கு எதிரான போர் முடிந்து விட்டது என்றே அமெரிக்கர்களில் 42% வாக்களித்தனர். இந்த மனோநிலை போர் செய்து கொண்டிருந்த வீரர்களுக்கும் ஏற்பட்டது. தாங்கள் தேவையற்ற ஒரு போரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர்கள் நினைத்தனர். தங்கள் உடனிருந்தவர்கள் காயப்படும் போதும் கொல்லப்பட்ட போது இந்த மனோநிலை அவர்களுக்கு அதிகரித்தது. ஆனாலும் அமெரிக்கா இந்தப் போரை தொடர்ந்தது. இதேபோல் போரில் காயப்பட்டு ஊனமான பின்னர் இராணுவத்திற்கு இனி இலாயக்கில்லை என்று கூறி திருப்பி அனுப்பப்பட்டதும் அவர்களின் தற்கொலை உணர்ச்சியை தூண்டியது.

அதேபோல் காலவரையின்றி நடத்தப்பட்ட போர் அவர்கள் உளவியலை பெரிதும் தாக்கியது. இந்தப் போரை முடித்து எப்போது தாங்கள் சொந்த ஊருக்கு திரும்புவோம் என்ற எண்ணம் அவர்கள் மனதில் தொடர்ந்து வந்து கொண்டே இருந்தது. இந்த போர் இன்று முடிந்துவிடும், நாளை முடிந்து விடும் என்று எண்ணிக்கொண்டிருந்த அவர்களுக்கு போர் முடியாமல் இரண்டு தசாப்தங்களுக்கு தொடர்ந்தது கடும் மன உளைச்சலை ஏற்படுத்தியது. கடுமையான காயம்பட்ட வீரர்கள் தொடர்ந்து போர் முனையில் நிறுத்தப்பட்டதும் தற்கொலைக்கான ஒரு முக்கிய காரணம். 9/11 போரில் ஈடுபடுத்தப்பட்ட வீரர்களில் காயம்பட்டவர்களின் சதவீதம் வியட்னாம் போரிலோ அல்லது வளைகுடா போரிலோ ஈடுபட்டு காயம் பட்டவர்களின் எண்ணிக்கையை விட அதிகம்.

இன்றைய மருத்துவ உலகத்தின் முன்னேற்றத்தினால் காயம்பட்டவர்களின் உயிர்களை வேண்டுமானால் காப்பாற்றிவிடலாம். ஆனால் இந்த காயங்களினால் ஏற்படும் வலிகள் அவர்களை தற்கொலை சிந்தனைக்கு கொண்டு சென்றது.

இவற்றையெல்லாம் தாண்டி மேம்படுத்தப்பட்ட வெடிகுண்டு சாதனங்களால் ஏற்பட்ட கடுமையான மூளை சேதங்கள் அல்லது காயங்களால் தற்கொலை செய்து கொண்டவர்கள் கிட்டத்தட்ட பாதிக்குப் பாதி.

### வில்லியம் பஸ்பி

வில்லியம் ஒரு சுறுசுறுப்பான இளைஞன். அமெரிக்க போர் வீரன். வில்லியம் தன்னுடைய பயணத்தை ஆப்கானிஸ்தானத்தில் முடித்துக் கொண்டு வீட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட போது அவனுடைய நிலைமை வேறு விதமாக இருந்தது. அவன் தன் கைகளை அடிக்கடி தேய்ந்து கொண்டே இருந்தான். அந்த கைகளை அடிக்கடி கழுவிக் கொண்டே இருந்தான்.

"அம்மா! அம்மா! என் கைகளை விட்டு இந்த கறைகள் போகவே மாட்டேன் என்கிறது" என்று அடிக்கடி கூறிக் கொண்டே இருந்தான்.

நீ எதைப் பற்றி கூறுகிறாய் என்று அவருடைய தாய் அவனிடம் கேட்டபோது, "என் கைகள் முழுவதும் இரத்தம். அது என் கைகளை விட்டு வரமாட்டேன் என்கிறது" என்று கதறிக்கொண்டே இருந்தான்.

கடந்த வருடம் மார்ச் மாதம் 20ம் தேதி அவனுடைய கதறல்கள் நின்றுவிட்டன. அவன் கை கழுவுவதும் நின்றுபோனது. அவன் தன் தாய் மற்றும் இரண்டு சகோதரிகளின் கண்ணுக்கு முன்னால் காரின் கதவுகளை பூட்டி கொண்டு தன் துப்பாக்கியால் தலையில் சுட்டு தற்கொலை செய்து கொண்டான். அவனுக்கு அப்போது வயது 23. அவன் விருப்பப்பட்டுதான் அமெரிக்க படையில் தன்னை இணைத்துக் கொண்டான். அப்போது



அவனுக்கு வயது 17. இராணுவத்தில் பெரிதாக சாதிக்க வேண்டும் என்ற வெறி அவனிடம் இருந்தது. அவன் தேர்வாகி ஆப்கானிஸ்தானுக்கு அனுப்பப்பட்டான். அது அவனுடைய கனவு தான். ஆனால் அங்கு நடந்ததோ வேறு. அங்கு அவன் பல முறை அவன் தாக்கப்பட்டான். ஒரு குறிப்பிட்ட வெடிகுண்டு சம்பவத்தில் அவன் மாட்டிக்

கொண்டபோது அவனுக்கு பலத்த மூளை காயம் ஏற்பட்டது. அதுமட்டுமன்றி அவனுடைய உடல் முழுதும் உலோகங்களின் பிசிறுகள் துளைத்து அங்கேயே தங்கி விட்டன. அவற்றை அறுவை சிகிச்சை செய்து எடுக்க முடியவில்லை. இதன் காரணமாக அவன் விமான நிலையத்தின் பாதுகாப்பு அறைகளை கடக்கும்போது மெட்டல் டிடெக்டர் எனப்படும் உலோகம் கண்டுபிடிக்கும் கருவி அலற ஆரம்பித்து விடும். இதற்காகவே அதனை நிறுத்தி விட்டு அவனைக் கடக்க செய்வார்கள்.

தன் வீட்டுக்குத் திரும்பிய பிறகு அவனால் சாதாரணமாக வெளியில் நடமாட முடியவில்லை. அவனால் சாதாரண மக்களுடன் பழக முடிய வில்லை. அவன் அவர்களை தன்னை சார்ந்தவர்கள் இல்லை என்று கருத ஆரம்பித்து விட்டான்.

ஒரு நாள் காரில் வெளியே சென்றபோது அருகில் சென்ற ரயில் ஒன்று ஹாரன் அடித்தபோது அவனால் அந்த ஒலியை கேட்க இயலாமல் காரிலிருந்து வெளியே குதித்து விட்டான். அதன் பிறகு அவன் காரை வெளியில் எடுத்துச் செல்வதே கிடையாது.

இரவு நேரங்கள் இன்னும் மோசமானவை. மோசமான கனவுகள் அவனை கடுமையான துன்பத்தில் ஆழ்த்தி விடும். ஒருநாள் இரவு அவன் தன் முகத்தை கத்தியால் சிதைத்து கொண்டிருந்தான். வில்லியம் சிலநேரங்களில் தன் தாயிடம் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தான் "நான் அங்கே என்னென்ன செய்து கொண்டிருந்தேன் என்பதை நீங்கள் அறிந்தால் நீங்கள் என்னை வெறுத்து விடுவீர்கள் அம்மா."

"நான் உன்னை வெறுக்க மாட்டேன் மகனே, நீ எனக்கு அதே மகன் தான்", என்று அவன் தாய் அவனை தேற்றினாள்.

"இல்லை. இல்லை. நீங்கள் நேசித்த உங்கள் மகன் அங்கேயே இறந்து விட்டான்." இதுதான் அவன் அளித்த கடைசி பதில்.

இதுதான் அமெரிக்க இராணுவ வீரர்கள் பலரின் நிலைமை. அப்பாவி மக்களின் மீது ராணுவம் நிகழ்த்தும் கொடுமைகளை கண்டு இதில் பங்கேற்று அதன் காரணமாக தங்களின் மீதே வெறுப்பை ஏற்படுத்திக் கொண்டவர்கள் இவர்கள்.

https://www.theguardian.com/world/2013/feb/01/us-military-suicide-epidemic-veteran

## தாலிபான்களின் மனோநிலை

மூன்று லட்சம் ஆப்கான் துருப்புகள், ஆயிரக்கணக்கான அமெரிக்க துருப்புகள் அவர்களுடன் சேர்த்து நேட்டோ படைகள் இவர்கள் அனைவரையும் எதிர்கொண்டது 75,000 தாலிபான்கள் படையினர் தான். தங்களையும் தங்கள் இன்னுயிரையும் இறைவனுக்கு அர்ப் பணித்துக் கொண்டு களத்தில் துணிச்சலுடனும் நெஞ்சுரத்துடனும் எதிரிகளை எதிர் கொண்டனர் தாலிபான்கள். அவர்களில் யாரும் தற்கொலை செய்து கொள்ளவில்லை. களத்தில் ஏற்பட்ட காயங்களினால் மனமுடைந்து விடவில்லை. மாறாக அவர்கள் உறுதி பெற்றுக் கொண்டே வந்தனர்.

இறுதியில் அவர்கள் வல்லரசு என பெருமை அடித்துக் கொண்டிருந்த அமெரிக்காவையும் அதன் நேச படைகளையும் தவிடுபொடியாக்கி இன்று இறுதி வெற்றி பெற்றுள்ளனர். இவற்றிற்கெல்லாம் காரணம் நாங்கள் இறைவனின் அடிச்சுவட்டை பின் பற்றியதுதான். இந்த வெற்றிக்கு உரியவன் இறைவன் ஒருவனே என்று அடக்கத்துடன் கூறுகின்றனர். பிரிட்டன், ரஷ்யா போன்ற வல்லரசுகளை வீழ்த்திய பின்னர் இன்று அமெரிக்காவையும் அதன் கூட்டு நாடுகளையும் வீழ்த்தி ஆப்கானிஸ்தானை இன்றைய உலக நாடுகளின் வல்லரசு என்பதை நிரூபித்துக் காட்டியுள்ளனர் என்றால் மிகையல்ல.

75,000 தாலிபான்களை எதிர்கொண்ட அமெரிக்க வீரர்களில் தற்கொலை செய்து கொண்டவர்கள் மட்டுமே கிட்டத்தட்ட ஒரு லட்சம் பேர், எனில் அவர்களின் வீரம் உலகறியும். இதுமட்டுமன்றி இறந்தவர்கள், நிரந்தர ஊனமுற்றவர்கள் என இந்தப் பட்டியல் பல லட்சங்களை கடக்கின்றது. உலகின் அதிகபட்ச தொழில்நுட்பத்தை கையில் வைத்துக்கொண்டு போர் செய்த மேற்கத்திய நாடுகளின் கொட்டத்தை எந்தவித தொழில்நுட்ப வல்லமையும் கொண்டிராத தாலிபான்கள் வீழ்த்தியுள்ளனர். இதன் மூலம் அமெரிக்காவின் சண்டித்தனத்திற்கும் மேற்கத்திய நாடுகளின் சண்டித்தனத்திற்கும் கடிவாளம் போட்டு அடக்கி உள்ளனர் தாலிபான்கள்.


1. Thomas Howard "Ben" Suitt, PhD, is a recent graduate of the Graduate Program in Religion at Boston University. Email: bensuitt@bu.edu. போஸ்டன் யுனிவர்சிட்டி ஆய்வறிக்கை

2. டாக்டர். காரின் ஏ ஆர்விஸ், இயக்குனர் பாதுகாப்பு படையின் தற்கொலை தடுப்பு அலுவலகம்

3. Britch, Ryan. (2020). 10th Annual IAVA Member Survey: Perceptions and Views of Iraq and Afghanistan Veterans on the Challenges and Successes of the Next Greatest Generation of Veterans (Report). Iraq and Afghanistan Veterans of America (IAVA). https://iava.org/survey2020/IAVA-2020-Member-Survey.pdf

4. U.S. Department of Defense. (2021). Casualty

Status as of 10 a.m. EDT May 10, 2021. https://www.defense.gov/casualty.pdf

5. Lopez, C. T. (2019, September 26). DOD Releases Report on Suicide Among Troops, Military Family Members. U.S. Department of Defense. https://www.defense.gov/Explore/News/Article/Article/1972793/dod-releases-report-on-suicide-among-troops-military-family-members/

6. Office of Mental Health and Suicide Prevention. (2020). 2020 National Veteran Suicide Prevention Annual Report (Report). U.S. Department of Veterans Affairs. https://www.mentalhealth.va.gov/docs/data-sheets/2020/2020-National-Veteran-Suicide-Prevention-Annual-Report-11-2020-508.pdf, p.16 for reported numbers.

7. Under Secretary of Defense for Personnel and Readiness (2019, September 13). Annual Suicide Report - CY 2018 (Rep. No. D-30C1C14). Department of Defense. https://www.dspo.mil/Portals/113/2018%20DoD%20Annual%20Suicide%20Report_FINAL_25%20SEP%2019_508c.pdf, p. 34. See also, Pruitt D., Smolenski, D. J., Bush, N. E., Tucker, J., Issa, F., Hoyt, T. V., & Reger, M. A. (2019). Suicide in the Military: Understanding Rates and Risk Factors Across the United States' Armed Forces. Military Medicine, 184(Suppl 1), 432-437.

8. Ibid. and Orvis, K. A. (2020). Department of Defense (DoD) Quarterly Suicide Report (QSR) 4th Quarter, CY 2020. Department of Defense: Defense Suicide Prevention Office. https://www.dspo.mil/Portals/113/Documents/2020QSRs/TAB%20A_20210309_OFR_Rpt_Q4%20CY%202020%20QSR.pdf?ver=UKN194rEw5MhM_vaGy0j0w%3d%3d

9. Data comes from surveys of over 1200 U.S. citizens and over 600 current and former military personnel found in Charles Koch Institute. (2018, October 8). Seventeen Years On, Americans-Including Veterans-Want Out of Afghanistan. https://www.charleskochinstitute.org/news/afghanistan-17-anniversary-poll/

10. Data produced from a survey of over 1000 U.S. citizens found in Charles Koch Institute. (2020, January 23). New Poll: Americans Want Troops Home from Afghanistan, Iraq; Opposed to More Military Engagement. https://www.charleskochinstitute.org/news/new-poll-americans-want-troops-home-from-afghanistan-iraq-opposed-to-more-military-engagement/

**அபூ அப்ராஹ்**

முஸ்லிம்களின் வீழ்ச்சியால் உலகம் இழந்தது என்ன?

வாங்கிவிட்டீர்களா?

உலகெங்கும் அதிர்வுகளை ஏற்படுத்தியது. அரபுலகின் மிகச் சிறந்த சிந்தனையாளர்களெல்லாம் இந்த நூலிலிருந்து மேற்கோள் காட்டி எழுதவும் பேசவும் செய்தார்கள்.

விலை: 300/-

#Courier Charge

8072773868

Vergal Pathippagam | 8148129887



# அமெரிக்க போர்க்குற்றங்களை அம்பலப்படுத்தியவருக்கு நான்கு ஆண்டு ஜெயில்



Operation Haymaker - ஹேமேக்கர் நடவடிக்கை - ஆப்கானிஸ்தானில் வடகிழக்கு எல்லைப்பகுதியில் உயர்ந்து நிற்கும் சிகரங்களிலும் செங்குத்தான பள்ளத்தாக்குகளிலும் பதுங்கியிருக்கும் தலிபான்களையும், அல்கொய்தா இயக்கத்தவர்களையும் தீர்த்துக்கட்ட அமெரிக்கா ஒரு நடவடிக்கையை மேற்கொண்டது.

ஹெலிகாப்டரில் சென்று மலைப்பாங்கான பகுதிகளில் இறங்கி சண்டையிடுவதன் அபாயத்தை அமெரிக்க இராணுவம் உணர்ந்திருந்தது. ஏனெனில் அங்கே மலைகளில் மோதி பல ஹெலிகாப்டர்கள் வெடித்து சிதறி உள்ளன. அங்கே நின்றுகொண்டு போராளிகளிடம் சண்டையிட்டு வெல்வது கடினம். எனவேதான் ஆள் இல்லாத சிறிய ரக விமானங்களை(Drones) கொண்டு இலக்கை தாக்கி விடலாம் என்று ஹேமேக்கர் நடவடிக்கையை 2011-2013 வரை மேற்கொண்டது அமெரிக்கா.

அமெரிக்காவிற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பவர்கள் என்று கருதப்படுபவர்கள் முதலில் கண்காணிப்பு வளையத்திற்குள் கொண்டு வரப்படுவார்கள். அவர்கள் பெயர் அடங்கிய பட்டியல் ஒன்று தயாரிக்கப்படும். அவர்களின் மொபைல் போன் சிக்னல்கள் தொடர்ந்து கண்காணிக்கப்படும். கொல்லப்பட வேண்டிய - வர்கள் என்று முடிவு செய்யப்பட்டவுடன் தாக்குதலுக்கான கட்டளை பிறப்பிக்கப்படும். அவ்வளவுதான், பல மைல்கள் தொலைவில் இருந்து ஒரு பட்டனை அழுத்தியவுடன் ட்ரோனில் இருந்து சீறிப்பாயும் ஏவுகணைகள் (Hellfire missiles) இலக்கை தாக்கும்.

2009ஆம் ஆண்டு அமெரிக்க விமானப் படையில் சேர்ந்த டேனியல் ஹேல் (Daniel Hale) 2012ம் ஆண்டு ஆப்கானிஸ்தான் சென்றார். 2013ம் ஆண்டு தேசிய பாதுகாப்பு முகமையின் கீழ் பணியாற்றினார். ஆப்கானிஸ்தான் பாக்ரம் விமான தளத்தில் இருந்து கொண்டு எதிராளிகளின் இருப்பிடத்தை அறிய மொபைல் போன் சிக்னல்களை கவனித்து ஆராய வேண்டும். இதுதான் அவருக்கான பணி.

ட்ரோனின் தாக்குதல் எல்லைக்குள் எதிராளியின் சிக்னல் நிலையாக கிடைக்கப்

பெற்றவுடன், தாக்குதலுக்கான தகவல் பரிமாற்றப் படும். இலக்கு தாக்கப்பட்ட உடன் அவரும் அவருடன் இருந்தவர்களும் கைதட்டி வெற்றி ஆரவாரம் செய்வார்கள். 2014ம் ஆண்டு ராணுவத்தில் இருந்து வெளியேறியபின் ட்ரோன் தாக்குதல் சம்பந்தப்பட்ட 17 ஆவணங்களை தி இன்டர்செப்ட் (The Intercept)பத்திரிகையாளர் ஒருவரிடம் பகிர்ந்தார் டேனியல் ஹேல்.

அதனை ட்ரோன் ஆவணங்கள் (Drone papers) என்று தலைப்பிட்டு தொடர்ச்சியாக செய்திகளை வெளியிட்டது தி இன்டர்செப்ட் . ஜனவரி 2012 முதல் பிப்ரவரி 2013 வரை அமெரிக்கா மேற்கொண்ட வான்வழி தாக்குதல்களில் 200 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதில் 35 பேர் மட்டுமே இலக்கு என்று தீர்மானிக்கப்பட்டவர்கள் (Intended targets).

அதாவது அமெரிக்க பாசையில் அமெரிக்காவுக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்கள். மீதி கொல்லப்பட்ட அனைவரும் அப்பாவி பொதுமக்கள். வெளியிடப்பட்ட ஆவணத்தின் படி ஒரு குறிப்பிட்ட ஐந்து மாதங்களில் நடந்த நடவடிக்கையில் கொல்லப்பட்டவர்களில் 90 சதவிகிதம் பேர் "இலக்கு என்று தீர்மானிக்கப்பட்டவர்கள்" அல்ல. எனினும் கொல்லப்பட்ட அனைவரையும் எதிராளிகள் என்ற பட்டியலில் இணைத்துவிடுவார்கள். இது ஒரு பைத்தியக்காரத்தனமான முறைதான் எனினும் நாங்கள் இதில் ஆசுவாசப்பட்டுக் கொண்டோம் என்று ஒப்புக் கொண்டுள்ளார் டேனியல் ஹேல்.

கொல்லப்பட்ட அப்பாவிகளின் எண்ணிக்கையை எவ்வளவு குறைக்க முடியுமோ அவ்வளவு குறைத்தே அரசு ஆவணங்கள் குறிப்பிடும். ஒபாமா ஆட்சியில் இருக்கும் பொழுதுதான் ஹே மேக்கர் நடவடிக்கைக்கு ஒப்புதல் வழங்கப்பட்டது. ட்ரோனை பயன்படுத்துவதன் மூலம் அப்பாவிகள் கொல்லப் படுவது குறையும் என மக்களை நம்ப வைத்தார் ஒபாமா.

போர் அறிவிக்கப்படாத இடங்களில் யாரையேனும் கொல்ல வேண்டுமெனில் இந்த மொபைல் போன் சிக்னல்களைதான் அமெரிக்கா பெரிதும் சார்ந்து நின்றது. இப்படி எதிராளிகளின் மொபைல் போன்கள், கணினிகள், மற்றும் இதர தகவல் பரிமாற்ற சாதனங்களைக் கொண்டு சிக்னல்களை கண்டறிந்து கொல்லும் முறையானது மட்டமான ஒரு செயல்முறை. ஏனெனில் இதற்கென்று ஒரு எல்லை உண்டு.



அதாவது, தொழில்நுட்பத்தை மட்டுமே நம்பி எடுக்கப்படும் பெரும்பாலான தகவல்கள் தவறாகவே அமையும். அதை என் சொந்த அனுபவத்திலேயே கண்டேன். அப்பாவிகள் கொல்லப்படுவதற்கு இது முக்கிய காரணம். பல மாதங்களுக்குப் பின் அல்லது வருடத்திற்கு பின் இதுவரை முக்கியமான இலக்கு என்று நாம் பின்தொடர்ந்த மொபைல் அவருடையது அல்ல அவரின் தாயார் உடையது என்று நமக்கு திடீரென தெரியவரும். இப்படி தவறான இலக்கை பின் தொடர்ந்து தாக்குதல் நடத்தியதால் அப்பாவிகளும் பலியானார்கள். இலக்கு என்று தீர்மானிக்கப்பட்டவர்களின் அருகில் இருப்பவர்களும் எந்தவித தயவு தாட்சண்யம் இல்லாமல் கொல்லப்பட்டார்கள். இவையெல்லாம் டேனியல் ஹேல் தி இன்டர் செப்டிடம் ஆவணங்களை வெளியிட்ட பின் தெரிய வந்தவை.

தனக்கு 07 ஜூலை 2021 அன்று டேனியல் ஹேலுக்கு 45 மாதங்கள் ஜெயில் தண்டனை வழங்கப்பட்டது. ஜெயில் தண்டனை வழங்கிய நீதிபதிக்கு ஒரு கடிதத்தையும் எழுதியுள்ளார் டேனியல். அதில் நாம் நடத்திய யுத்தம் எந்தவகையிலும் அமெரிக்காவிற்கு வரும் தீவிரவாதத்தை தடுத்து விடாது. ஆனால் ஆயுத உற்பத்தியாளர்களின் இலாபத்தை சரிந்து விடாமல் பாதுகாக்கும்.




**ஈராக்கில் கொல்லப்பட்ட 2 பத்திரிகையாளர்கள்**

ட்ரோன் தாக்குதல் நம்மை பாதுகாப்பாக வாழ வழிவகை செய்கின்றது என பொதுமக்கள் தவறாக நம்ப வைக்கப்படுகிறார்கள் என நான் கருதினேன். ராணுவத்தில் இருந்து வெளியேறினேன். போருக்கு எதிரான செயற்பாடுகளில் பங்கெடுக்க ஆரம்பித்தேன் எனக் கூறியுள்ளார்.

உங்கள் பணியை தொடர்ந்து செய்திட மனசாட்சியின் ஒரு பாதியை கொன்றுவிட வேண்டும் என நீதிமன்றத்தில் ஒரு முறை தெரிவித்தார். (அதாவது, அப்பாவிகள் கொல்லப் படுகிறார்கள் என்று தெரிந்தும் வேலையில் நீடிக்க வேண்டுமென்றால் மனசாட்சியைக் கொன்று புதைத்து விட்டு தான் செய்ய வேண்டும் என்ற நோக்கில் அவர் இதைக் கூறினார்).

## Collateral Murder - அப்பாவிகளை கொலை செய்தல்

ஆப்கானிஸ்தானின் மட்டுமல்ல ஈராக்கிலும் தனது அடாவடித்தனங்களை அரங்கேற்றியது அமெரிக்கா. ஆனால் இவையெல்லாம் உலக அரங்கில் தெரியாமல் பார்த்துக் கொண்டது. ரகசிய ஆவணங்களை வெளியிட்டதன் மூலம் விக்கிலீக்ஸ் இணையதளம் அமெரிக்காவின் கோர முகத்தை வெளிச்சம் போட்டு அன்று மக்களிடத்தில் காட்டியது. அதிலும் முக்கியமாக Collateral Murder என்று தலைப்பிட்டு 39 நிமிடம் ஓடக்கூடிய வீடியோ ஒன்றை 2010ம் ஆண்டு ஏப்ரலில் வெளியிட்டது.

உலக அரங்கில் இது அதிர்வுகளை ஏற்படுத்தியது.

ஈராக் புதிய பாக்தாத் நகரில் 8 பேர் சாதாரணமாக நின்று கொண்டிருந்தனர். அதில் இரண்டு பேர் ராய்ட்டர் செய்தி நிறுவனத்தில் பணிபுரிபவர்கள். அதில் ஒருவர் வைத்திருந்த கேமராவை ஆயுதம் என நினைத்துக்கொண்டு குருவிகளை சுடுவது போல் ஹெலிகாப்டரில் இருந்து கொண்டு சுட்டு தள்ளினர் அமெரிக்க ஜனநாயக வாதிகள். ஒருவர் மட்டும் காயம்பட்டு தவழ்ந்து கொண்டிருந்தார்.

சிதறிக்கிடந்த உடற் பாகங்களை கண்டு ஒருவருக் கொருவர் வாழ்த்துக்களை போனில் பரிமாறினர். காயம் பட்டவரை மீட்டு மருத்துவமனை அழைத்து செல்வதற்காக ஒரு வேன் வந்து நின்றது. அவர்களையும் சேர்த்து மீண்டும் சுட்டுத்தள்ளினர் அமெரிக்க ராணுவத்தினர்.

மொத்தமாக 12 பேர் இந்த தாக்குதலில் கொல்லப்பட்டனர். 12 ஜூலை 2007ம் ஆண்டு நடந்த இதயத்தை பதற வைக்கும் இந்த சம்பவம் ஹெலிகாப்டரிலிருந்து படம் பிடிக்கப்பட்டது தான். அதைத்தான் விக்கிலீக்ஸ் வெளியிட்டது.

அமெரிக்கா நடத்திடும் கொலை பாதக செயல்களை கேட்பதற்கு நாதிஅற்றவர்களாக ஆகிப் போனார்கள் ஈராக் வாசிகள். கொலைகளை நியாயப்படுத்த தீவிரவாதி என்ற முத்திரையை குத்தும் அமெரிக்கா. அவர்கள் பெண்களை அடிமைப்படுத்துகின்றனர் என்று குருட்டு நியாயம் கற்பிக்கும்.

உலக நாடுகள் வேண்டுமென்றால் அமெரிக்காவை எதிர்க்க வல்லமை இல்லாமல் போகலாம். ஆனால் இரண்டு வல்லரசுகளை வீழ்த்திய ஆப்கன் முஜாஹிதீன்களிடம் அது நடக்காது.

Key words: Daniel Hale, The intercept, Drone papers, Wikileaks, operation Haymaker, Collateral Murder

**அபூ ஹாசின்**

# அமெரிக்காவிற்கு அவமானம் அவனி எங்கும்..?

# இனி அமெரிக்கா நடை பிணமே!



அமெரிக்கா, வல்லரசாக ஆப்கானிஸ்தானுக்குள் 2001ல் நுழைந்தது. ஆனால், ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்தை வல்லரசாக ஆக்கிவிட்டு வந்தது. மானங்கெட்ட அமெரிக்கா தன்னை நம்பி நின்ற அத்தனை பேரையும் ஆப்கானிஸ்தானில் காலை வாரிவிட்டது.

20 ஆண்டுகளாக அது பயிற்றுவித்த ஆப்கானிஸ்தான் இராணுவம் 20 மணிநேரம் கூட தலைநகர் காபூலைக் காத்திடவில்லை. தன்னால் ஜனநாயகம் என்ற பெயரால் நியமிக்கப்பட்ட அஷ்ரஃப் கனிக்கு குறைந்தபட்சம், அமெரிக்காவில் அடைக்கலம் கொடுத்திருக்கலாம். எக்கேடும் கெட்டுப்போ என நட்டாற்றில் விட்டு விட்டார்கள்.

தனது படை வீரர்களை மட்டும் சொல்லாமல் கொள்ளாமல் இரவோடு இரவாக அழைத்துச் சென்றது.

இப்படித்தான் 1975ல், வியட்நாமில் தோற்று புறமுதுகுகாட்டி ஓடியபோது அங்கு அமெரிக்காவை நம்பி நின்றவர்களையும், அமெரிக்காவுக்குத் தகவல் தந்தவர்களையும் நட்டாற்றில் விட்டுவிட்டு ஓடியது.

அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் வீழ்ந்ததும் விழுந்தடித்துக்கொண்டு ஓடியதும், அங்கு அமெரிக்காவுக்கு உதவி செய்து கொண்டிருந்தவர்களிடையே பீதியை ஏற்படுத்தி விட்டது. எங்கே தாலிபான்கள் தங்களைக் கண்டு பிடித்துவிடுவார்களோ எனப் பீதிவயப்பட்டு ஒளிந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால், ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்தை சார்ந்தவர்கள் பொது மன்னிப்பை வழங்கிவிட்டார்கள்.

சந்தடி இல்லாமல் சரணடைந்தவர்களிடம் இப்படித்தான் நடந்து கொண்டார்கள், இறைவனால் இந்த உலக மக்களுக்காக அனுப்பப்பட்ட இறுதி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள். அன்று மக்கத்து மாநகரம் சண்டையில்லாமல் சரணடைந்தபோது இப்படித் தான் பொது மன்னிப்பைப் பிரகடனப் படுத்தினார்கள். (ஆனாலும், சிலர் மன்னிக்க முடியாத குற்றத்தைச் செய்திருந்ததால் அவர்களைத் தண்டித்தார்கள்.)

இப்போது யாரெல்லாம், அமெரிக்காவுக்கு வேவு பார்க்கும் வேலையையும், ஆட்காட்டும் வேலையையும் செய்தார்களோ அவர்களெல்லாம் அல்லாடிபோய் நிற்கின்றார்கள். இந்த அளவுக்கு தம்மை நம்பி நின்றவர்களைக் காப்பாற்றிடவோ, அடைக்கலம் தரவோ இயலாத வல்லரசா, இந்த அமெரிக்கா எனக் காறி உமிழ்கின்றார்கள்.

ஆப்கானிஸ்தானில் அன்றைய காலந்தொட்டே, சில தனிநபர்களும், குழுக்களும் உண்டு, (பணத்திற்காக எதையும் செய்பவர்கள்). அவர்களை சாதாரண சொல்லாட்சியில் War Lords அதாவது, தாதாக்கள் என்பார்கள்.

இவர்கள் அன்று (1979-1989) ரஷ்யாவிடம் பணம் வாங்கிக் கொண்டு அன்றைய முஜாஹித்களை எதிர்த்துப் போர் செய்தார்கள். இவர்கள் தங்கள் சொந்த நாட்டுமக்களையே கொள்ளை அடிப்பார்கள், எதிர்த்தால் கொலை செய்வார்கள். அழகிய பெண்களைத் துப்பாக்கி முனையில் ஆசை நாயகிகளாக ஆக்கிக் கொள்வார்கள். ஆனால், பழியை ஊடகங்களின் உதவிகளோடு முஜாஹித்களின் மேல் போட்டுவிடுவார்கள்.

அன்று 1989ல் ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள் அறுதி வெற்றியைப் பெற்றபின் இவர்களைத் தண்டித்தார்கள். அவர்கள் செய்த குற்றங்களின் அளவுக்குத் தண்டனை வழங்கப்பட்டது.

இப்போது அமெரிக்காவும் அதுபோன்ற தாதாக்களைத் தன் பக்கத்தில் வைத்திருந்தது. அவர்களின் கைகளில் ஆயுதங்களைத் தந்து விரும்புவதையெல்லாம் செய்யச் சொல்லியது.

அமெரிக்காவை எதிர்த்துப் போராடியவர்களை, இரகசியமாகவும், பகிரங்கமாகவும் கொலை செய்தார்கள். இந்த தாதாக்கள் அவர்களின் குடும்பங்களையும் சீரழித்தார்கள். பெண்களை மானபங்கப்படுத்தினார்கள். அமெரிக்க இராணுவத்துடன் இணைந்து இளைஞர்களைக் கடத்திச் சென்று காணாமலாக்கினார்கள். இவர்களையும், "அம்பேல்" என விட்டுவிட்டது அமெரிக்கா. தாலிபான்கள் அதாவது, ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகம் வழங்கிய பொது மன்னிப்பு இவர்களுக்குப் பொருந்துமா? என்பது சந்தேகமே!

### இதர நாடுகளின் அமெரிக்காவின் ஆதரவாளர்கள்..?

ஆப்கானிஸ்தானுக்கு வெளியே வீற்றிருக்கும் பல ஆட்சியாளர்கள், இப்போது பீதிவயப்பட்டவர்களாகச் செய்வதறியாது திணறி வருகின்றார்கள். ஈராக்-ல் ஒரு பொம்மை அரசை வைத்து ஆட்டிப்படைத்து வருகின்றது அமெரிக்கா. சந்தடி இல்லாமல் அதன் பெட்ரோல் வளத்தை சுரண்டி வருகின்றது. அங்கே பல குழுக்களை தயாரித்து ஆயுதங் களையும் தந்து மோதவிட்டு, தினமும் விழும் முஸ்லிம்களின் பிணங்களைக்கண்டு "சபாஷ்" போட்டு சந்தோஷப்பட்டு வருகின்றது அமெரிக்கா.

இவர்களில் பலர் ஈராக்-ஐ சார்ந்த இளைஞர்கள். அமெரிக்காவின் சிறைச் சாலைகளில் ஆயுள் கைதிகளாக அகப்பட்டுக் கிடந்தவர்கள். அவர்களை ஈராக்கிற்கு கொண்டுவந்து, ஒரு அமைப்புப் பெயரையும் தந்து போராட பணித்துள்ளது. இவர்கள் ஈராக், சிரியா ஆகிய நாடுகளில் போராடிக் கொண்டிருக் கின்றார்கள். இந்தக் குழுக்கள் தங்கள் எதிர் காலத்தைப் பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டன. குறிப்பாக

ஈராக்கில் குருது மக்களுக்கு ஒரு தனி நாட்டைப் பெற்றுத் தருவோம் எனக்கூறி அந்த மக்கள் கையில் ஆயுதங்களைத் தந்து போராட பணித்துள்ளது. இனிமேல் அவர்களின் நிலை..? அமெரிக்கா எந்த நேரத்திலும் காலை வாரிவிடும் என்ற முடிவுக்கு வந்துவிட்டார்கள். இதனால் முஸ்லிம்களை முஸ்லிம்கள் சுட்டுக் கொல்லும் நிலை குறையலாம். இன்ஷா அல்லாஹ்.

இன்னும் சில நாடுகளில், அமெரிக்கா தன் ஆட்களை ஆட்சியில் அமர்த்தி இருக்கின்றது. ஈராக்-ஐ பற்றி குறிப்பிட்டோம். அதேபோல்தான் எகிப்திலும். "சிசி" என்ற இராணுவ தளபதியை தன்னால் தயாரிக்கப்பட்டவரை - ஆட்சியில் அமர்த்தி இருக்கின்றது.

இவர்களை ஜனநாயகம் ரீதியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டதைப் போல், ஒரு தோற்றத்தை உருவாக்கி வைத்திருக்கின்றார்கள். நம் நாட்டில் EVMS என்ற மின்னணு வாக்கு இயந்திரத்தால் ஆட்சியைப் பிடித்தார்கள் அல்லவா? அதேபோல் அவர்களும் இப்போது, தங்களைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். ஆக அமெரிக்காவின் "Credibility" என்ற நம்பகத்தன்மை, உலக அரங்கில் அமிழ்ந்து போனது. இனி அமெரிக்கா ஓர் நடமாடும் பிணம்..

(Inputs : From AL Jazeera : MEM)

**- மு.குலாம் முஹம்மது**

# ஆப்கானிஸ்தான் அரசின் தூதுவராக "யுவான்னி ரிட்லி"



இந்தச் சகோதரி சாதிக்க சாடினார் 2001ம் ஆண்டு ஆப்கானிஸ்தானுக்குள் - சிறைபட்டார். சிறையிலிருந்தபடியே ஆப்கானிஸ்தான் முஜாஹித்களுக்கு (தாலிபான்களுக்கு) எல்லா வகையான கஷ்டங்களையும் கொடுத்து சித்திரவதைச் செய்தார்.

அந்தச் முஜாஹித்களை ஆத்திரமூட்டினார். அவர்கள் அத்தனைக்கும் பதிலாக ஒரு சிரிப்பையே தந்தார்கள். வெளியே வந்தார். அந்த முஜாஹித்களுக்காக வக்காலத்து வாங்கி வாதாடினார். உலக அரங்கங்களில் (அத்தனையும், ஐரோப்பாவில்தான். அதாவது அமெரிக்காவுக்கும் பக்க துணையாக நின்ற நோட்டோ நாடுகளில்) இப்போது யுவான்னி ரிட்லியை சிறையில் வைத்திருந்தவர்கள், ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்த உலகில் ஒரே வல்லரசு, அமெரிக்காவை வீழ்த்திக்காட்டி விட்டார்கள்.

15-8-2021ல் அன்று முதல், ஆப்கானிஸ்தான் முஜாஹித்களைப் பற்றி எழுதிக்கொண்டே இருக்கின்றார். அத்தோடு நில்லாமல் அவர்களுக்கு அறிவுரைகளையும் வழங்குகின்றார். மிக்க அக்கறையுடன்.

இவற்றிற்கெல்லாம் மேலாக, ஆப்கானிஸ்தானுக்குள் என்ன நடக்கின்றது, என்பதை அவ்வப்போது எழுதுகின்றார். தனக்குத் தகவல் தருகின்ற பல பெண்களை அங்கே நியமித்திருக்கின்றார். (Middle East Monitor) அவர்கள் வழி சரியான தகவல்களைத் திரட்டித் தருகின்றார்.

சர்வதேச அளவில் ஆப்கானிஸ்தானின் இப்போதைய அரசாகிய ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்தின், வெளிநாட்டு தூதுவர் போல் செயல்படுகின்றார். இந்தப் பெணிமணியின் சேவை பாராட்டுக்குரியது.

**ரஷ்யாவும் ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகமும்**

முறையாக ஆப்கானிஸ்தான் அரசு அமைந்தவுடன் முழு அங்கீகாரத்தை ரஷ்யா தரவிருக்கின்றது. இப்போது தன்னுடைய தூதரகத்தை மூடப்போவதில்லை,




ஆப்கானிஸ்தான் முஜாஹித்கள், (தாலிபான்கள்) நம்பிக்கைக்கு உரியவர்கள். நாங்கள் நம்புகின்றோம் எனச்சொல்லி இருக்கின்றது. அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களை வீழ்த்திய தாலிபான்களை நல்லவர்கள் எனக் கூறி இருக்கின்றது ரஷ்யா. 2018ல் ரஷ்யா அமெரிக்காவை, காப்பாற்றிட தாலிபான்களுடன் ஒரு பேச்சுவார்த்தை நடத்தியது. அப்போதிருந்தே ரஷ்யா ஆப்கானிஸ்தான் விடுதலைப் போர் வீரர்களுடன் நல்லுறவு வைத்து வருகின்றது. (Front Line : Dec.7,2018)

**சீனா**

சீனாவும், ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்துடன் நல்லுறவு கொள்வதாகக் கூறி இருக்கின்றது. ஆனால் சீனா தொடக்க நாளிலேயே ஓர் நிபந்தனையை விதித்திருக் கின்றது. அது உய்குர் முஜாஹித் என்ற (சீனா உய்குரில் நடத்தும் கெடுபிடிகள், கொலைகள், இவற்றிற்கெதிராக போர் செய்யும்) போராளி களை ஆதரிக்கக்கூடாது என்பதே! இந்த நிபந்தனையைப் பற்றி இஸ்லாமிய அமீரகம் இன்னும் எதுவும் தெரிவிக்கவில்லை.

**ஈரான்**

ஈரான் தனக்கும் ஆப்கானிஸ்தானுக்கு மிடையே உள்ள எல்லைப் பகுதியைத் திறந்து விட்டிருக்கின்றது. 950கி.மீ. அங்கே ஆப்கானிஸ் தானிலிருந்து தப்பிவந்த மக்களுக்கு முகாம்களை அமைத்துக் கொண்டிருக்கின்றது. ஏற்கெனவே நடந்த பல்வேறு அமெரிக்க அடாவடித் தனங்களுக்குப் பயந்து ஈரான் சென்ற மக்கள் ஏராளம். அந்த மக்களை அரவணைத்துக் கொண்டது ஈரான் ஆணையம். இந்த மக்களுக்கு ஈரான் உதவ முடியாமல் திணறிக் கொண்டிருக்கின்றது. காரணம், அமெரிக்கா, ஈரான் மீது தொடர்ந்து போட்டு வரும் பொருளாதாரத் தடையாகும்.

ஆனாலும் ஈரான் இப்போது வரும் ஆப்கானிஸ்தான் மக்களையும் வரவேற்கக் காத்திருக்கின்றது. ஈரானோடும் ஆப்கானிஸ் தானின் இஸ்லாமிய அமீரகம் பேசிக் கொண்டிருக்கின்றது. ஈரானுடன் சுன்னத் ஜமாஅத்தைச் சார்ந்த முஜாஹித்கள் பேசுவதால், இனி அமெரிக்கா ஷியா - சன்னி பிளவை வைத்து வியாபாரம் செய்ய முடியாது என்கின்றார் யுவான்னி ரிட்லி.

**துருக்கி**

துருக்கி, முஸ்லிம் நாடுகளிலேயே சிறந்த ஒற்றுமையையும், உலக முஸ்லிம்களின் பிரச்னைகளில் அக்கறைக் கொண்ட நாடாக இயங்கி வருகின்றது. இதனால் துருக்கியும், ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்துடன் நல்லுறவு கொண்டுள்ளது.

ஆக, இன்னும் அதிகமான நாடுகளுடன் நல்லுறவு கொள்ள வேண்டும் ஆப்கானிஸ்தான் அமீரகம் என ஆலோசனை கூறியுள்ளார் யுவான்னி ரிட்லி. இப்போது ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகத்தின் தூதுவரைப் போல் இயங்கத் தொடங்கிவிட்டார் யுவான்னி ரிட்லி. ஆப்கானிஸ்தானுக்குள் அமரிக்க 2001ல் புகுந்ததை யுவான்னி ரிட்லி இப்படிக் கூறுகின்றார்: “They Bombed, invaded and destroyed.”

இதன் பொருள்: “அமெரிக்கர்கள் குண்டு போட்டார்கள், ஆக்கிரமித்தார்கள், அழித்தார்கள்.”

யுவான்னி ரிட்லி தனது எழுத்துக்களில், ஆப்கானிஸ்தான் எனக் குறிப்பிடுவதில்லை. வல்லரசுகளின் கல்லறை என்றே குறிப்பிடுகின்றார். மொத்த நிகழ்விலும் சவூதி அரேபியாவும் இஸ்ரேலும் மிகுந்த கவலையுடன் இருக்கின்றன. (Source: Middle East Monitor)

மு.குலாம் முஹம்மது

# பார்பாரா லீ



அன்று அமெரிக்க நாடாளுமன்றத்தில் தனித்து நின்றாள் அந்தப் பெண்மணி! அவருடைய பெயர் பார்பாரா லீ - Barbara lee

அவர், அமெரிக்க நாடாளுமன்றத்தின் உறுப்பினர். அமெரிக்க நாடாளுமன்றத்தின், மறுபெயர், காங்கிரஸ்.

2001ம் ஆண்டு ஆப்கானிஸ்தானில் போர்த்தொடுக்க அனுமதி கேட்டு, அமெரிக்க அதிபர் புஷ் ஓர் மசோதாவைக் கொண்டு வந்தார். அந்த மசோதாவை ஆதரித்து எல்லா அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஓட்டுப் போட்டார்கள். இந்தப் பெண்மணி பார்பாரா லீயைத் தவிர. இந்தப் பெண்மணி எதிர்த்து ஓட்டுப் போட்டார்.

இந்தப் பெண்மணி தன் ஓட்டை நியாயப்படுத்திட, அன்று வியட்நாம் மீது போர்த்தொடுக்க அமெரிக்க அதிபர் லிண்டன் ஜான்சனுக்கு நாடாளுமன்றம் எல்லை அற்ற அதிகாரத்தை வழங்கியதையும், அந்தப் போரின் முடிவில் ஏற்பட்ட தோல்வியையும் விரித்துரைத்தார்.

ஆனால், இந்தப்பெண்மணியை தகாத சொற்களால் சுட்டார்கள் அமெரிக்கர்கள்.

மட்டுமல்ல, அமெரிக்காவின் தலைசிறந்த பத்திரிகைகளுந்தான்!

வாஷிங்டன் போஸ்ட் என்ற பத்திரிகை "நீ அன்று இரட்டை கோபுரங்களில் நின்று இடிபாடுகளில் சிக்கி செத்துத் தொலைந்திருக்க வேண்டும்" என்றது.

வால் ஸ்டீரிட் ஜர்னல் "Wall Streeet Journal" என்ற பத்திரிகை "திக்கற்ற பெண்" "அமெரிக்காவின் பரம்பரை எதிரி" எனச் சாடியது.

"அமெரிக்காவின் எதிரிகளோடு நெடும்நாள்களாகக் கொஞ்சி குலாவி வாழும் பெண்" என கொச்சைப்படுத்தியது இன்னொரு பத்திரிகை.

அவரை வைதும், மிரட்டியும் அவருடைய அலுவலகத்திற்கு தொலைபேசி அழைப்புகள் வந்துகொண்டே இருந்தன. (நமது சங்கிகளைப் போன்றவர்கள் அமெரிக்காவிலும் இருக்கின்றார்கள்) இதனால் தொலை பேசிகளையெல்லாம் துண்டித்துக் கொண்டார், சில நாள்களுக்கு!

அவருக்கு கொலை மிரட்டல்கள் பல கடிதங்களாக அவருடைய அலுவலகத்திற்கு வந்தன. (மொத்தம் 3,000). மிகச்சில அவருடைய முடிவைப் பாராட்டின.

ஒரு கடிதம், "வீரமிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே, நீ ஒரு கோழை. எப்படி முளைத்தாய்?" எனக் கேட்டது. இன்னொன்று "நீ வரலாறு முழுவதும், கோழைகள் பட்டியலில் நிரந்தரமாக இடம் பெறுவாய்" என்றது.

இன்னொருவர் தன்னுடைய தரத்தைத் தரைமட்டத்திற்குத் தாழ்த்திக் கொண்டார்.

இப்படிப் பேசினார். "நீ ஒரு நாய். அமெரிக்க நாயல்ல. கறுப்பு நாய்."

தீய சக்திகளில் நீ தனித்து நிற்கவில்லை. மாறாக, "உன்னுடன் பின்லேடனும் ஹிட்லரும்

ஜூடாக்களும் இருக்கின்றார்கள்." இது இன்னும் சிலர் பாடிய வசைப் பாட்டு.

இப்படி வந்த 3,000 கடிதங்களும் இப்போது, அமெரிக்காவின் "மில்ஸ் கல்லூரியில் Mills College" இருக்கின்றது.

இவை போன்ற வசைகளால் வாடிப் போகவில்லை நங்கை பார்பாரா லீ! பத்திரிகைகளுக்கும், காட்சி ஊடகங்களுக்கும் பேட்டிகளைக் கொடுத்துக் கொண்டிருந்தார் தன்னுடைய நிலைப்பாட்டை நியாயப்படுத்தி.

அதன்பின் தொடர்ந்து ஆப்கானிஸ்தானில் போரை நிறுத்திட வேண்டும் என நாடாளுமன்றத்தில் பேசி வந்தார்.

இனி அவர் நாடாளுமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படவே மாட்டார் என்றே எல்லோரும் அடித்துக் கூறினார்கள். ஆனாலும் தொடர்ந்து நாடாளுமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதன்பின் ஒவ்வொரு நாடாளுமன்ற கூட்டத் தொடரிலும், ஆப்கானிஸ்தானில் போரை நிறுத்திட வேண்டும் என மசோதாக்களை கொண்டுவந்தார், தோற்றார்.

2019ல், அவர் கொண்டுவந்த போர் நிறுத்த மசோதா வென்றது. 268 ஓட்டுக்கள் ஆதரவாகவும் 161 ஓட்டுக்கள் எதிராகவும் வீழ்ந்தன.

போர் நின்றது. அமெரிக்கா அவமானப்பட்டு, ஆப்கானிஸ்தானைவிட்டு வெளியேறியது.

அன்று ஆப்கானிஸ்தான் மீது போர்த்தொடுக்க எல்லையற்ற அதிகாரத்தை அன்றைய அதிபர் ஜார்ஜ் புஷ்-க்கு வழங்கிடும் மசோதாவுக்கு வாக்களித்தவர்களில் ஒருவர், இன்றைய அமெரிக்க அதிபர் ஜோ பைடன் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், அமெரிக்கா பாடம் படிப்பதற்குள் 3000 கோடி டாலர்களை இழந்தது.

பல ஆயிரம் (அதிபர் பிடன் கணக்குப்படி 22,500) அமெரிக்க இராணுவத்தினரை இழந்தது. 35,000 அமெரிக்க இராணுவத்தினர் தற்கொலை செய்து கொண்டார்கள். பலருக்குப் பைத்தியம் பிடித்தது.


Source : Gillian Brockell, August-17,2021

"Listen to Article"

– மு.குலாம் முஹம்மது


ஐந்தாம் பதிப்பு

''ஆப்கானிஸ்தான் வல்லரசுகளின் கப்ரிஸ்தான்'' கல்லறை / சவக் குழி




₹140

8072773868

20 வருடங்கள் (2001-2021) ஆப்கானிஸ்தானை ஆக்கிரமித்து அங்கிருந்த வளங்களைச் சுரண்டிவிட்டு, அப்பாவி மக்களை [Civilians] லட்சக்கணக்கில் கொன்று குவித்துவிட்டு, ஐந்து லட்சம் குழந்தைகளையும் கொன்றுவிட்டு (இது 2015 வரை உள்ள கணக்கு) மார்த்தட்டியது அமெரிக்கா. ஆனாலும் வீழ்ந்து போனது.

# CRUSADE 2.0 BY JOHN FEFFER

# சிலுவைப் போர் 2.0



**தமிழ் வடிவம்: மு. குலாம் முஹம்மது.M.A.,**

இன்றைய நாள்களில் மேலை நாட்டவர்கள் அமெரிக்காவின் தலைமையின் கீழ் இஸ்லாத்தின் மீதும் முஸ்லிம்களின் மீதும் ஒரு பெரும் போரைத் தொடுத்து வருகின்றார்கள். இந்தப் போரை அவர்கள் சிலுவைப் போர் 2.0 என அழைக்கின்றார்கள். சுருக்கமாகச் சொன்னால் நாங்கள் முஸ்லிம்கள் மேல் தொடரும் இரண்டாவது சிலுவைப் போர் என்கின்றார்கள். சிலுவைப் போர்கள் என்றாலே அது முஸ்லிம்களுக்கும் கிருஸ்தவர்களுக்கும் இடையே நடந்த போர் என்று பொருள். இப்போது நடப்பது இரண்டாவது சிலுவைப் போர் என்றால் முதல் சிலுவைப் போர் எப்போது தொடங்கியது? எப்போது முடிந்தது?

முதல் சிலுவைப் போர் 1095இல் தொடங்கி 1274இல் முடிந்தது. அவை 9 போர்களாக நடந்தன. அவற்றை சிலுவைப்போர் 1.0 என்று கிருஸ்தவ உலகம் அழைக்கின்றது. சிலுவை யுத்தம் 2.0 என்ற இரண்டாவது சிலுவைப்போர் 1991இல் தொடங்கியது என்பது வரலாற்று வல்லுநர்களின் கணிப்பு. இதனை முதல் வளைகுடா போர் என அழைப்பார்கள். இந்த சிலுவைப் போர் 2.0வை எப்படி நடத்திக் கொண்டிருக்கின்றோம் என்பதை ஜான் பெஃபர் என்பவர் ஒரு நூலாகத் தருகின்றார். அந்த நூலின் பெயர் CRUSADE 2.0 THE WEST'S RESURGENT WAR ON ISLAM அதாவது சிலுவைப் போர் 2.0 மேலை நாடுகள் இஸ்லாத்தின் மீது தொடுக்கும் மறு உயிர் பெற்ற போர்.

இந்த நூலின் தமிழ் வடிவமே இந்தத் தொடர். முஸ்லிம்கள், முஸ்லிம் நாடுகள், இஸ்லாம், இவற்றின் மேல் இன்றைய நாட்களில் நடக்கும் தாக்குதல்களைப் புரிந்திட இந்தத் தொடரைப் படியுங்கள். இது தொடரல்ல. பயன் பயக்கும் பாடம். வரலாற்றுத் தொகுப்பு.

# துனிசியாவும், இஸ்லாமிய ஆட்சியும்

அன்பார்ந்த வாசகர்களே!

உலகத்தில் இஸ்லாமோபோப்ஸ் (எ) இஸ்லாத்தை வெறுப்பவர்கள், எப்படி இஸ்லாமும், இஸ்லாமிய ஆட்சியும் தலைதூக்கிவிடமால் பார்த்து வருகின்றார்கள் என்பதை சென்ற இதழில் குறிப்பிட்டோம். எகிப்தில் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முஹம்மத் முர்ஸியின் ஆட்சியை எப்படி கவிழ்த்தார்கள் என்பதை தெளிவுபடுத்தியிருந்தோம். அவரை கொலையும் செய்தார்கள்.

இஸ்லாத்தின் எதிரிகள் உலகில் எங்கே இஸ்லாமிய ஆட்சி தலைதூக்கினாலும் அதனை அகற்றிவிட்டு தேவையானால் இராணுவ ஆட்சியையே கொண்டு வருவார்கள். பின்னர் தேர்தல் என்ற பெயரில் தங்கள் கைப்பாவையான இந்த இராணுவ ஆட்சியாளர்களை, தேர்தல் முறை மூலம் தேர்ந்தெடுத்துவிட்டதாக அறிவிப்பார்கள். அதற்கு தேவையான தகிடுதத்தங்களைச் செய்திட வாய்ப்பிருப்பதால் தான் இவர்கள் ஜனநாயகத்தைத் தூக்கிப்பிடிக்கின்றார்களோ என்ற ஐயப்பாடு எழுகின்றது.


இதைத்தான் அவர்கள் 1978களில் துனிசியாவிலும் செய்தார்கள். இந்தத் துனிசியா இன்னொரு வகையில் நமக்கு முக்கியமானது. காரணம் 2010ம் ஆண்டு ஏற்பட்ட அரபு எழுச்சி - Arab Spring என்பது துனிசியாவில் தான் தொடங்கியது.

17 டிசம்பர் 2010ல் துனிசியாவில் ஒரு சலசலப்பாக எழுந்த இந்த எழுச்சி 14 ஜனவரி 2011ல் மாபெரும் மக்கள் எழுச்சியாக ஆனது. அரபு உலகில் விரிந்து, பரந்தது. ஆனால் இறுதியில் என்ன நடந்தது என்பதை கண்கூடாக கண்டோம். 61000 பேரை இழந்தும் இந்த அரபு எழுச்சி தன் இலக்கை அடைந்ததா? இல்லை என்பதே தெளிவான பதில்!

இங்கே நாம் இந்த அரபு எழுச்சி தொடங்கிய துனிசியாவைப் பற்றி சற்று விரிவாக பார்ப்போம்.

துனிசியா

துனிசியா என்பது ஒரு தென் ஆப்பிரிக்க நாடு. இதன் மொத்த மக்கள் தொகை, ஒரு கோடியே பத்து லட்சம். மக்கள் தொகையில் 99 சதவிகிதம் முஸ்லிம்கள். அரபு மொழியை தாய் மொழியாகக் கொண்டவர்கள். இவர்களை அரபுக்கள் என்றே




அழைப்பார்கள்.

ஒரு பக்கம் மத்திய தரைக்கடல், இன்னொரு பக்கம் அல்ஜீரியா, லிபியா ஆகிய நாடுகளை பக்கத்து நாடாகக் கொண்டது. "துனிஸ்" நகரம் அதன் தலைநகரம். அரபு "பேபர்ஸ்" என்ற மக்கள் அதன் பூர்வீக மக்கள். இந்த நாட்டின் மொத்த பரப்பளவு 1,63,610 சதுர கிலோமீட்டர்கள்.

தலைநகர் "துனிஸ்"க்கு பக்கத்தில் கார்தேஜ் என்றொரு புராதன இடம் உள்ளது. இங்கே பழைமைக்கால (கி.மு) கட்டிடக்கலையில் அமைந்த பல கட்டிடங்கள் இருக்கின்றன. அவை இன்றளவும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. "கார்தனியன்" என்ற சாம்ராஜ்யத்தின் பீடமாக இந்த "கார்தேஜ் இருந்தது.

கி.மு. இரண்டாம் நூற்றாண்டில் ரோமர்கள் இதனை ஆக்கிரமித்தார்கள். இந்தப்பகுதியையும், அதன் கட்டிடங்களையும் அழித்தார்கள். ஆனாலும் அரங்கங்கள், குளியலறைகள் இவைகளெல்லாம் இன்னும் இருக்கின்றன.

"வண்டல்கள்" என்ற குரூரக்குணம்

கொண்டவர்கள் இந்த பூமியை கி.பி. 6ம் நூற்றாண்டில் ஆக்கிரமித்து வைத்திருந்தார்கள். இவர்கள் ஜெர்மனியைச் சார்ந்தவர்கள். இவர்களின் குரூர குணத்தால் ஆங்கில அகராதியில் “Vandals” என்றொரு சொல்லே அமைந்தது. இவர்கள் அதாவது “வண்டல்ஸ்” ரோம சாம்ராஜ்யத்தை அழித்ததால், ஆங்கில அகராதியில் இவர்களை இப்படி குத்திக்காட்டுகிறார்கள்.

கி.பி. 7ம் நூற்றாண்டில் பைசாந்தியர்கள் இந்த பூமியை ஆக்கிரமித்தார்கள். அதன்பின் தொடர்ந்து அவர்களே ஆட்சியாளர்களாக இருந்தார்கள். இதே ஏழாம் நூற்றாண்டில்தான் இஸ்லாம் துனிஸியாவுக்குச் சென்றது. அந்த மக்கள் அணியணியாக இஸ்லாத்தில் இணைந்தார்கள். இந்த துனிசியாவை மையமாகக் கொண்டுதான் மத்திய தரைக்கடல் பகுதிகளில் இஸ்லாத்தை முஸ்லிம்கள் பரப்பினார்கள்.

1535ல் ரோம பேரரசன் கார்ழ் என்பவர் அந்த இடத்தை கைப்பற்றினார். உதுமானிய கிலாபத் தன்னுடைய எல்லைகளை விரிவாக்கிக் கொண்டிருந்த காலம். அவர்கள் ரோமானியர்களை 1574ல் வென்றார்கள். துனிசியாவை உதுமானிய பேரரசில் இணைத்தார்கள்.

1869ல் பிரிட்டன் என்கின்ற ஆங்கில நாடு, பிரான்ஸ், இத்தாலி ஆகிய நாடுகள் தங்கள் பொருளாதார பிடியின் கீழ் துனிசியாவைக் கொண்டு வந்தன. முஸ்லிம்களை இஸ்லாத்திலிருந்து தடம் பிறழச்செய்யும் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். 1883ல் பிரான்ஸ் படிப்படியாக துனிசியாவை தனது ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வந்தது.



ஹபீப் போர்க்கிபா

1907-முதலே பிரான்ஸ் நாட்டின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறும் இயக்கங்கள் தொடங்கின. இளம் துனிசிய இளைஞர்களால் ஆன தஸ்தூர் கட்சி இதில் முக்கிய இடத்தைப் பிடித்தது. இதனிடையே முதல் உலகப்போர் ஜூலை 28 - 1914 முதல் நவம்பர் 11 - 1918 வரை நடந்து முடிந்தது. அதன் பின் பிரான்ஸ் நாடு, துனிசியா மீதான தனது பிடியை இன்னும் இறுக்கமாக்கியது.

பிரான்ஸ் நாட்டின் பிடியிலிருந்து விடுபடும் இயக்கங்களால் இரண்டாம் உலகப்போர் (செப்டம்பர் 13-1939 முதல் செப்டம்பர் 03-1945) முடியும் வரை எதுவும் செய்திட இயலவில்லை.

1950க்குப்பின் ஹபீப் போர்க்கிபா என்பவரின் தலைமையின் கீழ் விடுதலைப் போர் தீவிரமடைந்தது. ஜூலை 25, 1957ல் துனிசியா பிரான்ஸ் நாட்டின் பிடியிலிருந்து முற்றாக விடுதலையடைந்தது. துனிசியா - The Republic of Tunisia என்றானது. அதாவது துனிசிய குடியரசு என்றானது. ஹபீப் போர்க்கிபா அதன் முதல் குடியரசு தலைவர் ஆனார்.

ஹபீப் போர்க்கிபா-வின் தலைமையின் கீழ் என்ன நடந்தது என்பதைப் பார்ப்போம். இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.






# 34 வருடங்கள்
# நடந்தே பயணமா?

சீனாவில் 23 ஆண்டுகளாக இருசக்கர வாகனத்தில் பயணம் செய்து, 1997ல் காணாமல் போன தனது மகனை கண்டுபிடித்த பாசக்கார தந்தையைப் பற்றி அண்மையில் செய்தித்தாள்களில் வெளியான தகவலும் பார்த்திருப்பீர்கள்.

இஸ்லாமிய வரலாற்றில் இவ்வாறு பயணம் செய்த ஒரு நபரைப்பற்றித் தெரியுமா? தெரிந்து கொள்ளுங்கள்.

ஆனால் அதற்கும் இதற்கும் சில வித்தியாசங்கள் உள்ளன.

இவர் பயணம் செய்தது 23 ஆண்டுகள் அல்ல. 34 ஆண்டுகள்.

இந்த பயணம் குழந்தையைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான பயணம் அல்ல.

தனது குழந்தையை விட, இல்லை தனது உயிரை விட நேசிக்கும் இறைத்தூதர் முஹம்மது( ஸல்) அவர்களது பொன்மொழிகளை தேடிக் கற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட பயணம்.

இன்னும் இந்த பயணம் வாகனத்தின் மூலம் மேற்கொள்ளப்படவில்லை, மாறாக கால்களால் நடந்தே மேற்கொள்ளப்பட்டது.

இந்த பயணம் அந்தலுஸிலிருந்து தொடங்கியது. பிறகு அல்ஜீரியா, துனிசியா, லிபியா, எகிப்து, பலஸ்தீன், ஜோர்டான் வழியாக ஈராக்கில் உள்ள பக்தாத்தில் பயணம் நிறைவுற்றது.

### யார் அந்த நபர்?

இமாம் பகீஃ இப்னு மக்லத்(ரஹ்) அவர்களே அந்த சாதனைப் பயணத்தை மேற்கொண்ட நபர். ஹதீஸை தேடி நமது முன்னோர்கள் நெடுந்தூரம் பயணம் செய்ததை நாம் அறிந்திருப்போம்.

இப்படியான பயணம் மேற்கொண்டவர்களில் இமாம் பகீஃ(ரஹ்) அவர்கள் வித்தியாச மானவர்கள். ஏனென்றால் ஹதீஸை தேடி பயணம் செய்த அனைவருமே தங்களது பயணத்தை குதிரை அல்லது ஒட்டகத்தின் மூலம் மேற் கொண்டார்கள். ஆனால் இமாம் அவர்கள் வாகன வசதிகள் பெற்றவரல்ல.

### கடுமையான வறுமையில் உழன்றவர்கள்

தனது வயிற்றை நிரப்பிக்கொள்ளக் கூட உணவில்லை பிறகு கால்நடைக்கு எவ்வாறு உணவளிக்க இயலும்! அதை எங்கனம் பராமரிப்பது!

ஆனால் ஹதீஸை கற்க வேண்டும் என்ற தீராத ஆசை மட்டும் தணியவே இல்லை அன்னாருக்கு.

வாகனங்கள் இல்லாவிட்டாலென்ன! கால்கள் உள்ளனவே!

ஆற்றல் என்னும் உரமிட்டு நடந்தே சென்றாவது ஹதீஸை கற்க வேண்டும் என்ற உத்வேகத்தை பெற்றார்கள். இந்த உத்வேகம் இமாம் அவர்களை அல்ஜீரியா, துனிசியா, லிபியா, எகிப்து, பலஸ்தீன், ஜோர்டான் கடைசியில் ஈராக்கில் உள்ள பாக்தாத் வரை சென்று ஹதீஸை தேடி சுமார் 34 வருடம் பயணத்தை தொடர வைத்தது.

இந்தப் பயணத்தில் இமாம் அவர்கள் மேற்கொண்ட சிரமங்களோ பல .

ஒரு ஊருக்கு நடந்து சென்று ஹதீஸை கற்கும் அதே வேளையில் அடுத்த ஊருக்கு பயணம் செய்வதற்கு தேவையான பணத்தை ஏதேனும் வேலை செய்து சம்பாதித்து ஏற்பாடுச் செய்துக் கொள்வார்களாம். இன்னும் ஒருபடி மேலாக, ஒரு முறை தனது மாணவர்களிடத்தில் இவ்வாறு கூறினார்களாம்:

“நீங்கள் அனைவரும் ஹதீஸை மிக எளிமையாக கற்கிறீர்கள். ஒரு மனிதரோ(இமாம் அவர்களே அந்த மனிதர்) இந்த ஹதீஸை கற்க நாடிச் சென்ற போது தனது பசியைப் போக்கிக் கொள்ள மக்கள் குப்பைத் தொட்டியில் எரியும் முட்டைகோஸ் தோல்களை கூட தனது உணவாக்கினார்.ஏன் தனது கீழ் அங்கியை கூட தனது உணவிற்காக விற்று அவர் ஹதீஸை கற்றார்.”

பக்தாதிற்கு மட்டும் இவர் சென்றடைய எடுத்து கொண்ட கால அவகாசம் இரண்டு வருடம்.

அஹ்மத் இப்னு ஹன்பல்(ரஹ்) அவர்களிடம் எப்படியாவது ஹதீஸை கற்றுக்கொள்ள வேண்டும் என்று தீராத ஆசை கொண்டிருந்த இமாம் பகீஃ இப்னு மக்லத் அவர்கள் பக்தாதை அடைந்த நேரம் இமாம் அஹ்மத் இப்னு ஹம்பல்(ரஹ்) அவர்கள் வீட்டுச் சிறையில் வைக்க ப்பட்டிருந்தார்கள். இமாம் அவர்களிடம் கல்விகற்பதற்கும் தடை வியீக்கப்பட்டிருந்தது. இதனால் மிகப்பெரிய ஏமாற்றம் அடைந்தார்.

வேறுயாரிடமாவது ஹதீஸை கற்றுக் கொள்ள இயலுமா என்று விசாரித்து ஹதீஸ் கலையின் மற்றொரு ஜாம்பவானான இமாம் யஹ்யா இப்னு மஈன் (ரஹ்)அவர்களிடம் ஹதீஸை கற்பதற்கு மாணவராக சேர்ந்தார்.ஆனால் ஆசிரியரை நெருங்குவது கடினமாக இருந்தது. ஏனென்றால் ஆயிரக்கணக்கான மாணவர்கள் இமாம் அவர்களிடம் ஹதீஸை கற்றுக் கொண்டிருந்தனர்.

எந்த அளவிற்கென்றால் அடுத்த நாள் காலை வகுப்பில் அமர்வதற்கு முதல்நாள் அசருக்கு பிறகே இடத்தை பிடித்து விட வேண்டும்.

இதனால் பல நாட்களுக்கு பிறகே தனது ஆசிரியரான யஹ்யா இப்னு மஈன்(ரஹ்) அவர்களை இமாம் பகீஃ (ரஹ்) அவர்களால் நெருங்க முடிந்தது. நெருங்குவதற்கான வாய்ப்பு கிடைத்ததும் ஹதீஸ் அறிவிப்பாளர்களைக் குறித்து பல்வேறு கேள்விகளை எழுப்பினார். ஆசிரியரும் சலிக்காமல் மாணவர் கேட்கும் ஒவ்வொரு கேள்விக்கு பதிலளித்துக் கொண்டிருந்தார். ஆனால் அடுத்தடுத்து சந்தேகம் கேட்பதற்காக வரிசையில் காத்திருந்த மாணவர்கள் சலிப்படைந்து “போதும் நாங்களும் சில கேள்விகளை கேட்க வேண்டும்” என்றார்கள் அதற்கு இமாம் பகீஃ (ரஹ்)அவர்களோ நான் இரண்டு வருடம் நடந்தே இந்த இடத்திற்கு

ஹதீஸை கற்க வந்திருக்கிறேன் என்று பதிலளித்தார்.

இத்துனைப் பெரிய ஜாம்பவானிடம் ஹதீஸ் கற்றப் பிறகும் கூட அஹ்மத் இப்னு ஹன்பல்(ரஹ்) அவர்களிடம் ஹதீஸை கற்றாக வேண்டும் என்ற தாகம் அடங்கியதாக இல்லை.

ஆனால் அந்த சமயத்தில் இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல்(ரஹ்) அவர்கள்

ஹதீஸ் பாடம் நடத்த தடைவிதிக்கப் பட்டிருந்தது.

ஆனாலும் எப்படியாவது கற்றாகவேண்டும் என்பதனால் (இதற்காக இரண்டு வருடமல்லவா நடந்திருக்கிறார்) யாசகம் கேட்பவரைப் போல் தன்னை உருமாற்றிக் கொண்டு வீட்டிற்குள் சென்று இமாம் அவர்களை சந்தித்தார். இப்படியான சந்திப்பிற்கும் கூட சில மணித்துளிகளே அனுமதி வழங்கப்பட்டது.

இதனால் (இரண்டு வருடம் நடந்தே வந்திருந்தும் கூட) ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு ஹதீஸைத் தான் கற்க முடிந்தது.

முஸ்னத் அஹ்மத் என்ற நூலில் இமாம் ஹன்பல்(ரஹ்) அவர்கள் பதிவு செய்த ஹதீஸின் எண்ணிக்கை 30,000 என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஆதாரம்: டாக்டர் ராஹிப் சர்ஜானீ எழுதிய, “கைஃப துஸ்பிஹு ஆலிமா” எனும் நூல்.

தமிழில்: **மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி**



மகளீர் மன்றம்

# இஸ்லாத்தில் பெண்களின் நிலை

முந்தைய தொடர்களில் பெண்களை உலக அரங்கில் உலாவரும் பல்வேறு கொள்கைகளும் எப்படி பார்க்கின்றன, நடைமுறை வாழ்க்கையில் எப்படி நடத்துகின்றன என்பதை பார்த்தோம். இனி இஸ்லாம் பெண்களை எப்படி பார்க்கிறது என்பதை பார்ப்போம்.

இஸ்லாம் பெண்கள் பாவம் செய்யத் தூண்டியவர்கள் என்றோ, அவர்கள் ஷைத்தானின் குணங்களை கொண்டவர்கள் என்றோ, பாவங்களை தீமைகளை செய்திட தூண்டுபவர்கள் என்றோ, பார்ப்பதில்லை. நடத்துவதில்லை.

பெண்கள் பாவம் செய்யக்கூடியவர்கள் என்றால், அதேபோல் ஆண்களும் பாவம் செய்யும் தன்மைகளை கொண்டவர்கள்.

ஆண்கள் நன்மைகளையும், நல்லவற்றையும் செய்ய முடியும், செய்யக்கூடியவர்கள் என்றால் அதேபோல் பெண்களும் நல்லவற்றையும், நன்மை பயக்கக்கூடியவற்றையும் செய்பவர்கள். செய்யும் தகுதியும், திறமையும் உடையவர்கள். இது இஸ்லாத்தின் பார்வை. இது மட்டுமே நடைமுறை வாழ்க்கையை நலமாய் நகர்த்திட இருக்கும் ஒரே வழி.

இறைவன் இந்த உலகுக்கு அனுப்பிய அறுதி வேதத்தில் இப்படி பிரகடனப்படுத்துகிறான்.

*“மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆன்மாவிலிருந்தே படைத்தான். அவரிலிருந்தே அவருடைய மனைவியையும் படைத்தான். பின்னர் அவ்விருவரில் இருந்து அனைத்து ஆண்களையும், பெண்களையும் வெளிப்படுத்தி, உலகில் பரவச்செய்தான். ஆகவே அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள். அவனை கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் தமக்குரிய உரிமைகளை கேட்டு கொள்கின்றீர்கள். மேலும் உங்களுடைய ரத்த கலப்புகளையும், உறவினர்களையும் ஆதரியுங்கள். நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாக இருக்கின்றான்.”(அல்குர்ஆன் 4:1)*

கண்ணியத்திற்குரிய கிறிஸ்தவ அருட்தந்தைகள் சொல்வதைப் போல், "பெண்கள் ஆன்மா இல்லாதவர்கள். அதனால் அவர்கள் மரணத்திற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் காம உணர்வே இல்லாதவர்களாக இருப்பார்கள்." என்பதை இஸ்லாம் ஏற்பதில்லை மறுக்கின்றது. திருக்குர்ஆனின் சொற்களால் சொல்லுவதாக இருந்தால்,

"நீங்களும் உங்கள் மனைவியும் சொர்க்கத்திற்குள் நுழையுங்கள் யாரெல்லாம் நன்மைகளை செய்கின்றார்களோ, அவர்கள் ஆண்களோ பெண்களோ அவர்களின் மகிழ்வான வாழ்வின் பக்கம் விரைந்து அனுப்புவோம்.

நிச்சயமாக முஸ்லிமான ஆண்களும், முஸ்லிமான பெண்களும், நம்பிக்கை கொண்ட ஆண்களும், நம்பிக்கை கொண்ட பெண்களும், அல்லாஹ்வுக்கு வழிபடும் ஆண்களும், அல்லாஹ்வுக்கு வழிபடும் பெண்களும், உண்மையையே பேசும் ஆண்களும், உண்மையையே பேசும் பெண்களும், பொறுமையுள்ள ஆண்களும், பொறுமையுள்ள பெண்களும், அல்லாஹ்வுக்கு அஞ்சிய ஆண்களும், அல்லாஹ்வுக்கு அஞ்சிய பெண்களும், தர்மம் செய்யும் ஆண்களும், தர்மம் செய்யும் பெண்களும், நோன்பு நோற்கும் ஆண்களும், நோன்பு நோற்கும் பெண்களும், தங்கள் வெட்கத்தலங்களை காத்திடும் ஆண்களும், தங்கள் (கற்பை) வெட்கத்தலங்களை காத்திடும் பெண்களும், அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் ஆண்களும், அல்லாஹ்வை அதிகமதிகம் தியானம் செய்யும் பெண்களும் ஆகிய அவர்களுக்கு அல்லாஹ் மன்னிப்பையும், நற்கூலியும் சித்தப்படுத்தி இருக்கின்றான்."(அல்குர்ஆன் *33 : 35)*

பைபிள் பெண்களை பற்றி சொல்லும் முதல் கதையை இஸ்லாம் மறுக்கின்றது. அந்தக் கதை, "ஆதாமும், ஏவாளும் சொர்க்கத்தில் இருக்கும் போது ஏவாள் தான் முதலில் தூண்டப்பட்டு கனியை புசித்தாள். பின்னர் ஆதாமையும் புகைக்கத் தூண்டினாள். இதனால் ஆதாமின் வீழ்ச்சிக்கு அவளே வித்திட்டாள்." என்பதே.

இஸ்லாம் இதனை அடியோடு மறுக்கின்றது. இஸ்லாம் எந்த ஐயத்திற்கும் அப்பால் நின்று கூறுகின்றது. ஆதம்(அலை) அவர்களும் ஹவ்வா (ஏவாள்)(அலை) அவர்களும் ஒன்றுபோலவே தூண்டப்பட்டார்கள். தீண்டத்தகாத மரத்தை, கனியை தீண்டினார்கள். இருவருமே சரிசமமாக அந்தப் பாவத்தை செய்தார்கள். எந்த கூடுதல் குறையுமின்றி இருவருமே சரிசமமாக அந்த தவறை, பாவத்தை செய்தார்கள். பின்னர் இருவருமே இறைவனிடம் மன்னிக்க மன்றாடினார்கள். இருவருமே மன்னிக்க பட்டவர்களாக பூமிக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்கள் மன்னிக்கப்பட்டு அப்பழுக்கற்றவர்களாக பூமிக்கு அனுப்பப்பட்டார்கள். எந்த ஆதி பாவமும் அவர்கள் எவர் மீதும் ஒட்டிக் கொண்டு வரவில்லை. அவர்கள் பாவிகள் அல்ல. படைத்தவனின் படைப்புகளில் அழகானவர்கள்.

திருக்குர்ஆன் சொர்க்கத்தில் நடந்ததை இப்படி பதிவு செய்கின்றது. பெண்களை ஆதி பாவத்தின் முதற்படி என பழிப்பவர்கள் பாடம் படித்திட.

"மேலும் நாம், ஆதமே நீரும் உம் மனைவியும் இச்சுவனபதியில் குடியிருங்கள். நீங்கள் இருவரும் விரும்பியவாறு அதிலிருந்து தாராளமாக புசியுங்கள். ஆனால் நீங்கள் இருவரும் இம்மரத்தை நெருங்க வேண்டாம். அவ்வாறு செய்தால் நீங்கள் இருவரும் அக்கிரமக்காரர்களாகிவிடுவீர்கள். என்று சொன்னோம்."

"இதன்பின் ஷைத்தான் அவர்கள் இருவரையும் அதிலிருந்து வழிதவற செய்தான். அவர்கள் இருவரும் இருந்த சொர்க்கத்தில் இருந்து வெளியேறுமாறு செய்தான்."(அல்குர்ஆன் *2:35-36)*

கிறிஸ்தவம் சொல்வதைப்போல் ஆண்களுக்காக பெண்கள் படைக்கப்படவில்லை. அல்லது பெண்கள் ஆண்களுக்காக படைக்கப்படவில்லை. இருவரும் ஒருவருக்கொருவர் ஆடையாக படைக்கப்பட்டார்கள்.

திருக்குர்ஆன் கூறுகின்றது,

"அவர்கள் உங்களுக்கு ஆடையாகவும், நீங்கள் அவர்களுக்கு ஆடையாகவும் இருக்கின்றீர்கள்." (அல்குர்ஆன் *2:187)*

இன்ஷா அல்லாஹ் தொடரும்....

**மு.குலாம் முஹம்மத்**

தலையங்கம்

# "ஷரீஅத்"

# மக்களுக்கான பாதுகாப்பு

ஆப்கானிஸ்தானை தாலிபான்கள் கைப்பற்றியவுடன் உலக நாடுகளில் ஒரு விதமான பதற்றம் ஏற்பட்டுள்ளது. தாலிபான்கள் மேல் கொண்டுள்ள அச்சத்தைவிட தாலிபான்கள் கொண்டுவர இருக்கும் ஷரீஅத் அடிப்படையிலான ஆட்சியைக் கண்டுதான் இன்று உலகமே பதற்றம் அடைகிறது. அவர்களுடைய பதட்டத்தினால் வாய்க்கு வந்தபடியெல்லாம் ஷரீயாவிற்கு எதிராக உளறுகிறார்கள். இனி அங்கு பெண்களுக்கு கல்விகிடையாது, சுதந்திரம் கிடையாது, மக்கள் தாங்கள் விரும்பியபடி நடந்து கொள்ளமுடியாது, கல்வி என்பது இருக்காது என பல குற்றச்சாட்டுகளை எந்தவித ஆதாரமும் இல்லாமல் இஸ்லாமிய ஷரீயத்திற்கு எதிராக பரப்புகிறார்கள்.

உண்மையில் ஷரீயத் என்பது நம்மை படைத்த இறைவன் இந்த உலகில் நாம் எப்படி வாழ்ந்தால் நீதியாக, நிம்மதியாக வாழ முடியுமோ அதற்குண்டான வழிமுறைகள் இறைவன் நமக்குத் தந்துள்ளான். அதுதான் ஷரீயத். இதில் தலையிடுவதற்கு யாருக்கும் எந்த ஒரு அதிகாரமும் கொண்டவருக்கும் உரிமையில்லை மாறாக இறைவனின் கட்டளைகளை நிறைவேற்றுவதுதான் ஆட்சியாளருக்கு உண்டான வேலை.

இதற்கு மாறாக உலகில் மனிதனால் ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டங்கள் அந்தந்த ஆட்சியாளர்களின் மனோ இச்சைக்கு ஏற்ப நடைமுறைப்படுத்தப்படுகிறது.

ஆட்சியாளர் மதுவை விரும்பினால் மது அருந்துவது சரி எனப்படும். விபச்சாரத்தை விரும்பினால் அனுமதிக்கப்படும், வட்டியை விரும்பினால் அனுமதிக்கப்படும்.

இஸ்லாமிய ஷரீயத் அடிப்படையில் திருமணம் முடிக்க விரும்பும் ஓர் ஆண் பெண்ணிற்கான மஹர் கொடுத்துத்தான் திருமணம் முடிக்க முடியும்.

உமர்(ரலி) ஆட்சிகாலத்தில் பெண்கள் அதிகமாக மஹர் தொகையை கேட்பதால் ஆண்களுக்கு சிரமம் ஏற்படுவதாக புகார் வருகிறது. உமர்(ரலி) அவர்கள் கலந்தாலோசித்த பிறகு ஒரு குறிப்பிட்ட தொகையை மஹராக நிர்ணயம் செய்கிறார்கள். அதை பொதுவெளியில் அறிவிப்பு செய்கிறார்கள். அப்போது ஒரு வயதான பெண் உமர்(ரலி) அவர்களை மேடையிலிருந்து கீழே இறங்கச் சொல்கிறாள். இறைவனின் சட்டத்தைக் கூறுகின்றாள் :

"மனைவிக்கு நீங்கள் ஒரு பொற்குவியலைக் கொடுத்திருந்தாலும் அதிலிருந்து நீங்கள் எதனையும் எடுத்துக் கொள்ளாதீர்கள்."(அன்னிஸா -20)

இதைக் கேட்டவுடன் ஆட்சியாளராய் இருந்த உமர் (ரலி) அவர்கள் தான் இட்டக் கட்டளையைத் திரும்பப் பெற்றுக்கொண்டு அந்த வயதான பெண்ணிற்கு பிரார்த்தனை செய்தார்கள்.

ஷரீயத் பெண்களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. ஆட்சியாளரையே கேள்வி கேட்கக்கூடிய அளவிற்கு உரிமையைத் தருகிறது.

நம் நாட்டின் குடிமக்களாகிய விவசாயிகள் இவர்களுக்கு எதிரான வேளாண்சட்ட திருத்த மசோதாவை எதிர்த்துப் பலமாதங்கள் போராடியும் விடிவு இல்லை.


பல குடும்பங்களை வறுமைக்கும் சீரழிவிற்கும் உண்டாக்குவதே மது, இந்த மதுவை ஒழிக்க ஆண்டுக்கணக்கில் பலரும் போராடினார்கள். ஆனாலும் நாளுக்குநாள் மதுவிற்பனை அதிகமாகிக்கொண்டே தான் இருக்கிறது. ஏன் அரசாங்கம் மதுவை விற்கிறது. ஆனால் ஷரீயத் இதை தடை செய்கிறது.

"நிச்சயமாக ஷைத்தான் விரும்புவதெல்லாம் மதுபானத்தைக் கொண்டும், சூதாட்டத்தைக் கொண்டும் உங்களிடையே பகைமையையும் வெறுப்பையும் உண்டு பண்ணி அல்லாஹ்வின் நினைவிலிருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்துவிடத்தான் எனவே அவற்றை விட்டும் நீங்கள் விலகிக் கொள்ளமாட்டீர்களா?" (அல்மாயிதா : 91)

பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகளுக்கு தீர்வாக இஸ்லாமிய ஷரீயத் அடிப்படையிலான தண்டனை கொடுக்க வேண்டும் என பெரும்பாலான மக்கள் விரும்புகின்றார்கள்.

ஷரீயத் தான் மக்களுக்கான பாதுகாப்பு. இஸ்லாத்திற்கு எதிரானவர்கள் ஷரீயத்பற்றி அவதூறுகளை பரப்பிவருகின்றார்கள். ஷரீயத் பற்றி அறிந்து கொள்ள குர்ஆனைப் படியுங்கள்.( மாற்றுமத சகோதரர்களுக்கு குர்ஆனை இலவசமாக வழங்கி வருகிறோம் தேவைப்படுபவர்கள் எங்களைத் தொடர்பு கொள்ளலாம்.)

# அபாரமான ஆற்றல் பெற்ற பெகாசஸ் பறவை



உஸ்மானிய்யா பேரரசின் கடினமான காலங்களில் அரியணை ஏறியவர் இரண்டாம் சுல்தான் அப்துல்ஹமீத் (ரஹ்)அவர்கள்.

இவர் ஒரு விலங்குப் பிரியர். நாட்டு விவகாரங்களை நிர்வகிப்பதில் முழு நேரத்தை செலவழித்தாலும் இந்த அலுவல்கள் சுல்தான்கள் அவர்களை விலங்குகள் மீது அன்பு செலுத்துவதை விட்டும் தடுக்கவில்லை.

மனிதர்களை விட விலங்குகளும் பறவைகளுமே சுல்தான் அவர்களுடைய 'யில்திஸ்' அரண்மனையை அலங்கரித்தன.

இந்த வரிசையில் சுல்தான் அவர்களது அரண்மனையில்

அதிசயமான வெள்ளைக்கிளி ஒன்றிருந்தது.

பொதுவாக கிளிகள் தான் அடிக்கடி செவியேற்கும் சொற்களை அப்படியே திரும்பக் கூறும். சொன்னதை சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்ற சொல்வழக்கு அனைவரும் அறிந்ததே.

ஆனால் இந்தவெள்ளைக் கிளியின் சிறப்பு என்னவெனில் தான் ஒரேயொரு முறை கேட்டதையும் பார்த்ததையும் கூட சரியாக சுல்தானிடம் தெரிவித்துவிடும் அப்படியொரு அபாரமான ஆற்றலைப் பெற்றிருந்தது. எதையும் மீண்டும் மீண்டும் அதனிடம் கூற வேண்டிய அவசியமில்லை.


இந்த திறமையான கிளியைப் பற்றி, சுல்தான் அவர்களது மகள் ஷாதியா சுல்தான் கூறுகிறார்: "இந்த வெள்ளைக் கிளி என் தந்தையிடம் வந்து, அவருக்கு தெரியாமல் அவரது அறைக்கு வெளியே பேசப்படும் விஷயங்களை அப்படியே கூறிவிடும். அதன் உச்சரிப்பு மிகத் தெளிவாக இருக்கும்".

Reference:

Yedik tıa Magazine (February 2021)

தமிழில்: மௌலவி நியாசுதீன் புகாரி நத்வி

**வைகறை வெளிச்சம் வாசகர்கள் தங்களது சந்தாக்களை புதுப்பித்துக் கொள்ளுமாறு அன்போடு கேட்டுக் கொள்கிறோம்.**



# நூல் அரங்கம்

வாசிக்க வாசிக்க அடுத்து என்ன? அடுத்து என்ன? என்ற எதிர்பார்ப்போடு 160 பக்கங்கள் வாசித்து மனதில் ஏத்திவிட்டேன் இன்னும் 40 பக்கங்களே பாக்கி..

கற்பனை,கட்டுக்கதைகள், புனைவு இல்லாத முழுக்க முழுக்க உண்மையான வரலாற்று சம்பவங்கள் நிறைந்த ஒரு பிரபல சர்வதேச பெண் பத்திரிக்கையாளர் நிகழ்காலத்தில் சந்தித்த, கடந்த பாதைகளை வார்த்தைகளால் வடித்திருக்கிறார்.

உலகமே கொதிநிலையில் இருந்த (11/9) இருபது வருடங்களுக்கு முன்பே லண்டனில் பத்திரிக்கை துறையில் கோலேச்சிய ஒரு பெண், பாகிஸ்தான் வழியாக ஆப்கானுக்குள் புகுந்து தாலிபான்களிடம் பிடிபட்டு மீண்டும் நாடு திரும்பிய பத்தே பத்துநாள் தான். நடந்த சம்பவங்களை அழகாக தொகுத்து தனக்கே உரிய பாணியில் புத்தகமாக்கிருக்கிறார் ஆங்கிலத்தில்.

அதை தமிழில் அற்புத மொழிநடையோடு சுவாரஸ்யம் சற்றும் குன்றிவிடாமல் மொழியாக்கம் செய்துள்ளார் ஆசிரியர். இந்த புத்தகத்தை இன்றைய பத்திரிக்கையாளர்கள் என்றும், ஊடகவியலாளர்கள் என்றும், அரசியல் விமர்சகர்கள் என்றும் பீற்றிக்கொள்ளும் அதிமேதவிகள் ஒரு முறையாவது படிக்கச் சொல்லுங்கள்.

ஒரு பத்திரிகையாளர் எப்படி இயங்க வேண்டும் என்பதற்கு ஓர் முன்னோடி "யுவன்னி ரிட்லி"

முகநூலில் கம்பு சுத்துவதை விட்டுவிட்டு வரலாறுகளை தேடி படியுங்கள்...

ஆங்கிலத்தில் - In The Hands Of Taliban

தமிழில் - தாலிபானின் பிடியில்

வாசிக்க மறவாதீர்!

YouTube இவருடைய முழுப்பேட்டியும் குவிந்து கிடக்கிறது ஆங்கிலத்தில் தேடி கேளுங்கள்..

- Adiyan Riyas

(19/08/21)

# பாலியல் ஜல்சா பார்ட்டி

## பா.ஜ.க.-விரிவான அலசல்



1.பிப்ரவரி 7, 2012-ம் நாள் அன்று, கர்நாடக சட்டப் பேரவையில் பாஜக அமைச்சர்கள் லக்ஷ்மண் சாவடி, சி.சி.படீல் மற்றும் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் கிருஷ்ணா பாலேமர் ஆகியோர் ஆபாசப் படம் பார்த்ததை நிருபர்கள் படம் பிடித்து தொலைக்காட்சியில் ஒளிபரப்பினர். இதனால் எழுந்த கடும் எதிர்ப்பினை அடுத்து, மூவரும் பதவி விலகினர்.

2.மார்ச் 20, 2012-ம் தேதி குஜராத் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர்கள் சங்கர் சவுத்ரி, ஜீத்தாபாய் பர்வத் இருவரும் சட்டபேரவையில் ஆபாசப் படம் பார்த்ததை செய்தியாளர்கள் கண்டு, அது ஊடகங்களில் வெளியாகி, பெரும் அமளியானது.

3.அஸ்ஸாம் மாநில பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் ராமகந்த தேவ்ரி, விடுதி ஒன்றில் ஒரு பெண்ணுடன் அந்தரங்கமாக இருந்த காணொளி 18, பிப்ரவரி 2017 அன்று தொலைக்காட்சிகளிலும், சமூக வலைத்தளங்களிலும் வெளியானது. ஏற்கனவே அவர் மீது 34 வழக்குகள் நிலுவையில் இருந்த போதிலும், அவர் பதவி விலகவில்லை. பாஜக அவர் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

4.மே 19, 2017ம் நாள் அன்று, மத்தியப் பிரதேசத்தில் பாஜக தலித் அணியின் செய்தித் தொடர்பாளர் நீரஜ் சாக்யா, விபச்சாரத் தொழில் செய்து வந்தது கண்டுபிடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டார். இதனையடுத்து அவரைக் கட்சியிலிருந்து நீக்குவதாக மாநிலத் தலைமை அறிவித்தது.

5.இமாச்சலப் பிரதேசத்தில் நட்சத்திர விடுதி ஒன்றில் பெண் ஒருவருடன் விபச்சாரத்தில் ஈடுபட்டதாக பாஜக மூத்த தலைவர் ராஜிந்தர் ராணாவின் பெயர் அடிபட்டது, எதிர்க்கட்சிகளின் போராட்டத்திற்குப் பிறகு செப்டம்பர் 09, 2009ம் தேதி, தான் வகித்து வந்த ஊடக அறிவுரைக்

குழுமத்தின் தலைவர் பொறுப்பிலிருந்து விலகினார்.

6.மத்தியப் பிரதேச நிதி அமைச்சரும், பாஜக மூத்த தலைவருமான ராகவ்ஜி மீது, வீட்டு வேலைக்காரியைப் பாலியல் துன்புறுத்தல் செய்ததாக ஜூலை 5, 2013ம் தேதி காவல் நிலையத்தில் புகார் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து அவர் கட்சியிலிருந்து நீக்கப்பட்டதோடு, பின்னர் கைதும் செய்யப்பட்டார்.

7.குஜராத் மாநில பாஜக செயலாளராக இருந்த சஞ்சய் ஜோஷி ஒரு பெண்ணுடன் ஆபாசமாக இருந்ததாக ஆபாசக் காணொளி 2005ம் ஆண்டு வெளியானது. இதனையடுத்து கட்சியின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் அவர் நீக்கப்பட்டார். பின்னர் அந்தக் காணொளி போலியானது என்று நிரூபிக்கப்பட்டது. இந்தக் காணொளியின் பின்புலமாக மோடியின் குழு இருந்ததாக ஜோஷியின் ஆதரவாளர்கள் குற்றம் சாட்டினர்.

8.மகாராஷ்டிராவில் ஓடும் பேருந்தில் ஒரு பெண்ணுடன் பாஜக மாவட்டச் செயலாளர் ரவீந்தர பவந்தாதே பாலியல் சில்மிஷங்களில் ஈடுபட்ட காணொளி வெளியானதை அடுத்து, அந்தப் பெண் காவல் நிலையத்தில் பாலியல் வன்புணர்வுப் புகார் அளித்தார். வேலை வாங்கித் தருவதாகவும், திருமணம் செய்து கொள்வதாகவும் கூறி, தன்னை ஏமாற்றி விட்டார் என்று அந்தப் புகாரில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து ஜூலை 4, 2017ம் தேதி அவர் கைது செய்யப்பட்டார். ஆனால், அவர் கட்சியில் எந்தப் பொறுப்பிலும் இல்லை என பாஜக மறுத்தது.

9.ஜார்க்கண்ட் மாநில பாஜக மகளிர் பிரிவுத் தலைவர் கீதா சிங் என்பவரின் ஆபாசக் காணொளி டிசம்பர் 27, 2016ம் தேதி வெளியாகி, பெரும் பரபரப்பு கிளம்பியது. முதலில் அதனை மறுத்த கீதா சிங், பின்பு பதவி விலகினார்.

10.பாஜகவின் திருப்பூர் வடக்கு மாவட்ட துணைத் தலைவராக இருந்த முத்து என்கின்ற மாரிமுத்து, 2017, ஜனவரி 27ம் தேதி தற்கொலை செய்து கொண்டார். அவரது தற்கொலையை முஸ்லிம்கள் செய்த கொலையாக சித்தரித்து, பாஜக கலவரம் ஏற்படுத்த முயன்றது. இறுதியில், கள்ளக்காதல் விவகாரம் காரணமாக அவர் தற்கொலை செய்து கொண்டது காவல் துறை விசாரணையில் தெரிய வந்தது.

11.இந்து முன்னணியின் செந்துறை கிழக்கு ஒன்றியச் செயலாளர் மணிகண்டன், நந்தினி என்ற தலித் பெண்ணை காதலித்து கர்ப்பமாக்கினார். நந்தினி தன்னைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தியபோது, நண்பர்களுடன் சேர்ந்து மணிகண்டன நந்தினியைக் கூட்டு பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி, கொடூரமாகக் கொலை செய்து பாழுங் கிணற்றில் வீசினார். ஜனவரி 14, 2017ம் தேதி மணிகண்டனும், அவனது கூட்டாளிகளும் கைது செய்யப்பட்டனர்.

12.ஆர்.ஆர்.எஸ். மூத்த தலைவரும், மேகாலயா ஆளுனராக பாஜக-வால் நியமனம் செய்யப்பட்டவருமான தமிழகத்தைச் சேர்ந்த சண்முகநாதன், டிசம்பர் 7, 2016ம் தேதி நேர்முகத் தேர்விற்காக வந்த பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாக பிரச்சினை வெடித்தது. இதனையடுத்து, ஆளுனர் மாளிகையில் பணியாற்றிய 100க்கும் மேற்பட்டோர், ஆளுநர் மாளிகையை இளம்பெண்கள் கிளப்பாகவே மாற்றிவிட்டார் சண்முகநாதன் என பிரதமர், குடியரசுத் தலைவருக்குப் புகார் அனுப்பியதோடு, அவருக்கு எதிராகப் போராட்டமும் நடத்தினர். இறுதியில் அவர் பதவி விலகினார்.

13.வெளிநாட்டுப் பாலியல் தொழிலாளிகளுடன் விபச்சாரம் செய்து மாட்டிக் கொண்டு, அந்தப் புகைப்படங்கள் வெளிவராமல் இருப்பதற்காக இந்திய இராணுவ ரகசியங்களைக் கசிய விட்டதாக 2016ம் ஆண்டு பாஜக இளம் தலைவர் வருண் காந்தி மீது குற்றம் சாட்டப்பட்டது.

14.ஜூலை 21, 2017-ம் தேதி சிறுமியைக் கடத்தி, பாலியல் வல்லுறவு கொண்டதாக திருவனந்தபுரம் ஆர்.எஸ்.எஸ். அமைப்பைச் சேர்ந்த ஜெயதேவ் ஆகஸ்ட் 17, 2017ல் கைது செய்யப்பட்டான்.

15.பிப்ரவரி 27, 2017ம் தேதி மேற்கு வங்காள பாஜக மகளிர் அணித் தலைவர் ஜூஹி சவுத்ரி, 17க்கும் மேற்பட்ட சிறுமிகளைக் கடத்தி பாலியல் தொழிலுக்கு விற்றதாக கைது செய்யப்பட்டார்.


Hindustan Times
E-Paper
Home Latest Most Read Premium
Web Stories Education Videos Trending

**BJP removes leader Juhi Chowdhury arrested for alleged child trafficking in Bengal**

Firstpost

POLITICS

## Assam: BJP leader Ramakanta Dewri's alleged sex video goes viral; MLA cries conspiracy to defame him

A BJP MLA from Assam is at the centre of a political storm after a sex video allegedly involving him went viral over several local television channels.

FP Politics | February 19, 2017 18:38:27 IS



*16.*மோடி முதல்வராக இருந்தபோது, *2002*ம் நடந்த குஜராத் கலவரத்தில் *250*க்கும் மேற்பட்ட முஸ்லிம் பெண்கள் பாஜக, சங் பரிவார் அமைப்புகளால் கொடூரமான பாலியல் வன்புணர்வுக்கு ஆளாயினர்.

*17.*குஜராத் மாநிலம் கட்ச் மாவட்டத்தில் நலியா நகர பாஜக தலைவர் சாந்திபாய் சோலங்கி, *2015* ஆகஸ்ட் மாதம் தன்னிடம் வேலை பார்த்த *25* வயது பெண்ணை (திருமணம் ஆனவர்) மயக்க மருந்து கொடுத்து கெடுத்ததோடு, அதை வீடியோ எடுத்து மிரட்டி, தனது நண்பர்களுடனும் உறவு கொள்ளச் சொல்லி வற்புறுத்தி இருக்கிறார். பல முறை கட்டாய பாலியல் உறவுக்கு உள்ளான அந்தப் பெண் மூன்று முறை தற்கொலைக்கும் முயன்று இருக்கிறார். இறுதியில் *2015*, ஜனவரி *25*ம் தேதி அவர் அளித்த புகாரின் அடிப்படையில் *3* பாஜக பிரமுகர்கள் உட்பட *5* பேர் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட பாஜக பிரமுகர்களை சஸ்பெண்ட் செய்வதாக மாநிலத் தலைமை அறிவித்தது.

*18.*உத்தரப் பிரதேசம், உன்னா மாவட்டம் பங்கர்மாவ் தொகுதி பா.ஜ.க. சட்டமன்ற உறுப்பினர் குல்தீப் சிங்கும், அவரின் சகோதரரும் *17* வயது இளம் பெண்ணை *2017* ஜூன் மாதம் பாலியல் வன்புணர்வு செய்தனர். அதை வெளியே சொன்ன குற்றத்திற்காக அவரின் தந்தையைக் காவல் நிலையத்தில் வைத்து *2018* ஏப்ரல் *3*ம் தேதி கொலை செய்தனர். குல்தீப் சிங்கின் சாதி செல்வாக்கிற்கு அஞ்சி, மாநில முதல்வர் நடவடிக்கை எடுக்காமல் இருந்த நிலையில், ஏப்ரல் *14, 2018*ல் மத்திய புலனாய்வுப் பிரிவு போலிசார் குல்தீப் சிங்கை கைது செய்தனர்.

*19.*இதன் உச்சகட்டமாக, காஷ்மீர் மாநிலத்தில் *2018* ஜனவரி *10*ம் தேதி, குதிரை மேய்த்துக் கொண்டிருந்த *8* வயது சிறுமி ஆசிஃபா-வை *8* பேர் கொண்ட இந்துத்துவ கும்பல் கடத்தி, மூன்று நாட்கள் தொடர்ச்சியாக கோவிலுக்குள் வைத்து பாலியல் வன்புணர்வு செய்து கொடூரமாக கொலை செய்திருக்கிறது. குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்கக் கூடாது என ஆர்.எஸ்.எஸ்.யைச் சார்ந்த ‘இந்து ஏக்தா மஞ்சு’ என்ற அமைப்பு போராட்டமும் நடத்தியுள்ளது. இந்தப் போராட்டத்தில் பாஜகவைச் சேர்ந்த வனத்துறை அமைச்சர் லால்சிங் மற்றும் தொழிற்துறை அமைச்சர் சந்தர் பர்கஷ் கங்கா போன்றோரும் பங்கெடுத்திருக்கின்றார்கள். இருப்பினும் காவல் துறை அந்த *8* பேரையும் கைது செய்திருக்கிறது. பிரச்சினை பெரிதாகவே, குற்றவாளிகளுக்கு ஆதரவாகப் போராட்டம் செய்த பாஜக அமைச்சர்கள் பதவி விலகியுள்ளனர்.

*20.*ஏப்ரல் *22, 2018*ம் தேதி திரிபுரா மாநிலத்தில் 'அகில பாரத அகண்ட விகாஸ் பரிஷத்' என்ற

IndiaToday Malayalam Business Today DailyO

NEWS • LIVE TV INDIA TODAY APP MAGAZINE

News / Mail Today / Did Varun Gandhi spill defence secrets for foreign girls?

## Did Varun Gandhi spill defence secrets for foreign girls?

*India Today TV has accessed an explosive letter written to the prime minister's office (PMO) by lawyer C Edmonds Allen who had an epic falling out with his former client, Verma, four years ago.*

indiatoday.in

NEWS •LIVE TV INDIA TODAY APP MAGAZINE

News / India /

## Man who fought polls on BJP ticket held for sexually assaulting minor girl in train

*Prem Anand, an advocate, was arrested by the Erode Railway Police under the POCSO Act after the minor girl complained about Anand's assault.*

இந்துத்துவ அமைப்பின் தலைவர் கோஷ் (58 வயது), 14 வயது சிறுமியை பல முறை பாலியல் வன்புணர்வு செய்ததாக,பாதிக்கப்பட்ட சிறுமி கொடுத்த புகாரின் பேரில் நிஷிசிளி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

**21.**ஏப்ரல் 22, 2018ம் தேதி திருவனந்தபுரத்தில் இருந்து சென்னை சென்ற தொடர்வண்டியில் 9 வயது சிறுமியிடம் பாலியல் அத்துமீறல் செய்ததாக பாஜக பிரமுகர் பிரேம் ஆனந்த் நிஷிசிளி சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். இவர் 2006ம் ஆண்டு தேர்தலில் பாஜக வேட்பாளராக ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டவர்.

**22.**கேரளாவில் 'புல்லட் சாமியார்' என்று பிரபலமாக அறியப்பட்டவர் சாமியார் ஹரி. இவர் தொடர்ச்சியாக ஒரு பெண்ணுடன் பாலியல் வல்லுறவு கொண்டிருந்தார். இவரின் பாலியல் கொடுமைகளைப் பொறுக்க முடியாத அந்தப் பெண், சாமியாரின் ஆணுறுப்பைத் துண்டித்து எறிந்தார். இந்த சாமியாருக்கும், பாஜக மாநிலச் செயலாளர் கும்மனம் இராஜசேகரனுக்கும் நெருங்கிய தொடர்பிருந்தது. ஆனால், ஆணுறுப்பு துண்டிப்பு நாடு முழுவதும் பேசப்பட்டபோது, தனக்கும் சாமியாருக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று இராஜசேகரன் நழுவிக் கொண்டார்.

**23.**மறைந்த காஞ்சி சங்கர மடச் சாமியார் ஜெயேந்திரன், தன்னை பாலியல் உறவுக்கு வற்புறுத்தியதாக எழுத்தாளர் அனுராதா ரமணன் எழுதியதும், காஞ்சி சங்கர மடத்தில் இருந்து ஏராளமான ஆபாச குறுந்தகடுகள் கைப்பற்றப் பட்டதும், ஒரு பிரபல நடிகையுடன் ஜெயேந்திரன் தொடர்புபடுத்திப் பேசப்பட்டதும் தமிழகம் அறிந்ததே. ஆனாலும், கடைசி வரை ஜெயேந்திரனுக்கு ஆதரவாகவே பாஜக, இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட இந்துத்துவ அமைப்புகள் செயல்பட்டன.

**24.**நடிகை ரஞ்சிதாவுடன் நித்தியானந்தா பாலியல் உறவு கொள்ளும் காணொளி வெளிவந்து, தமிழகம் முழுவதும் அவரது பெயர் நாறிய பின்னும், அவர் அண்மையில் நடத்திய நிகழ்ச்சியில் பாஜக தேசியச் செயலாளர் ஹெச்.ராஜா கலந்து கொண்டு சிறப்பித்தார்.

**25.**ஜோத்பூர் ஆசிரமத்தில் 16 வயது பள்ளிச் சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்ட சாமியார் ஆஷ்ரம் பாபு, பின்னர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவருடன் பாஜக மூத்த தலைவர்கள் வாஜ்பாய், அத்வானி, மோடி, முரளி மனோகர் ஜோஷி, சிவ்ராஜ் சவுகான், ராமன் சிங் உள்ளிட்டோருக்கு நட்பு இருந்தது.

**26.**பாலியல் வல்லுறவு மற்றும் கொலை வழக்கில் 20 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட பிரபல சாமியார் ராம் ரஹிம் சிங்கிற்கும், பாஜகவுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது. 2014 அரியானா தேர்தல் பிரச்சாரத்தின்போது ராம் ரஹிம் சிங்-ஐ பிரதமர் மோடி புகழ்ந்து பேசினார். 1995ம் ஆண்டு அரியானா பாஜக பொறுப்பாளராக நியமிக்கப்பட்டபோதே, தான் சாமியாரைச் சந்தித்து வணங்கியதாகத் தெரிவித்தார். மோடியின் இந்தப் பேச்சிற்குப் பின்னர், அரியானா தேர்தலில் ராம் ரஹிம் சிங், பாஜகவுக்கு ஆதரவு அளித்தார். பின்னர் டெல்லி, பிஹார் சட்டமன்றத் தேர்தல்களின்போதும் ராம் ரஹிம் சிங்கின் ஆசிரம பக்தர்கள், பாஜகவுடன் இணைந்து பிரச்சாரம் செய்தார்கள். ராம் ரஹிம் சிங் மீது பாலியல் வல்லுறவுக் குற்றச்சாட்டு வழக்கு விசாரணையில் இருந்த காலத்தில்தான் அவருடன் பாஜக நட்பு பாராட்டியது கவனிக்கத்தக்கது.

**27.**தற்போது கேடி ராகவன் வீடியோ வந்துள்ளது.

**28.** பெங்களூர் நட்சத்திர ஹோட்டலில் நடந்தது என்ன என்று அண்ணாமலை விளக்க வேண்டும்.

பாஜக மதவெறி மட்டுமல்ல சதவெறியும் கூடிய கட்சி.

**சூர்யா சேவியர்** - 24-08-21

# முதல் சிலுவைப் போர் வெற்றி வீரர் சுல்தான்
# நூருத்தீன் ஸங்கி(ரஹ்)



அபூ அப்ரஹ்

## இமாதுத்தீன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்), சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஓர் அறிமுகம்

வரலாற்றில் முஸ்லிம்கள் மறக்கக்கூடாத நபர்களில் முக்கியமானவர்கள் இமாதுத்துன் ஸங்கி (ரஹ்), நூருத்தீன் ஸங்கி (ரஹ்) மற்றும் ஸலாஹுத்தீன் அய்யூபி (ரஹ்) ஆகியோர். ஆனால் மறக்கப்பட்டு விட்டவர்கள்.

நபி(ஸல்) அவர்களுக்கு பின்னர் நேர்வழி பெற்ற கலீபாக்களாலும் அதன் பின்னர் வந்த இஸ்லாமிய ஆட்சியாளர்களாலும் இஸ்லாம் வேகமாக வளர்ந்தது. உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் ஜெருசலேம் இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

ஜெருசலேம் யூதர்களுக்கும் கிறித்தவர்களுக்கும் முக்கியமான பூமி. குறிப்பாக கிறித்தவர்களுக்கு அது ஏசு பிறந்த மண். எனவே, அவர்கள் இந்த மண்ணை கைப்பற்ற எல்லா விதமான முயற்சிகளையும் செய்து வந்தனர். அதற்காக போப் அர்பன் 2 என்பவர் உத்தரவின் பேரில் ஐரோப்பிய நாடுகளில் உள்ள கிறித்தவர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலிருந்தும் ஒருவர் என பங்கேற்று முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு போரை தொடங்கினர். இதன் பெயர் சிலுவைப்போர். இப்படி பல சிலுவைப்போர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தப்பட்டன.

இப்படி நடத்தப்பட்ட அனைத்து சிலுவைப்போர்களிலும் சிலுவைப்படையினர் முஸ்லிம்களுக்கு எதிராக பல்வேறு கொடுமைகளை அரங்கேற்றினர். இந்த சிலுவைப்படையினர் படையெடுத்து வந்த வழி நெடுகிலும் பல்வேறு அநியாயங்களை முஸ்லிம்களுக்கு செய்தனர். தம் சொந்த மக்களையும் கூட அவர்கள் கொலை செய்தனர். சிலுவைப்படையினரின் குதிரைகளின் முழங்கால்கள் ரத்தத்தில் மூழ்கும் அளவிற்கு ரத்த சகதி இருந்தது என வரலாற்றில் பதியப்பட்டது. அந்த அளவிற்கு வெறி கொண்ட கூட்டமாக அவர்கள் இருந்தனர்.. சிறுவர்களோ பெரியவர்களோ யாரையும் அவர்கள் உயிரோடு விட்டு வைத்ததில்லை. கண்ணில் காண்வர்களை எல்லாம் கொன்று, பார்வையில் பட்டதை எல்லாம் கொள்ளையடித்து சென்றனர்.

அப்படிப்பட்ட சிலுவைப்படையினரின் தாக்குதல்களை தடுக்கவே முடியாத நிலையில் முஸ்லிம்கள் இருந்து வந்த வேளையில் முதன்முதலில் அவர்களை நோக்கி தாக்குதலை தொடுத்தவர் இமாதுத்தீன் ஸங்கி அவர்கள். முஸ்லிம்களை ஒரு தலைமைக்குள் கொண்டு வர முயன்றவர். ஜிஹாதை மறந்து இருந்த சமுதாயத்திற்கு ஜிஹாதை மீண்டும் நியாபகப்படுத்தியவர். கிறித்தவர்களின் கையில் இருந்து எடெஸ்ஸா போன்ற முக்கியமான பகுதிகளை கைப்பற்றியவர்.

இதன் பின்னர் இந்த பணிகளை அடுத்த நிலைக்கு எடுத்து சென்றவர் நூருத்தீன் ஸங்கி அவர்கள். சிலுவைப்படையினரை சின்னாபின்னப்படுத்தியவர். இன்று சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி(ரஹ்) அவர்களை தெரியாதவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள். ஆனால் சுல்தான் சுல்தான் ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் தலைவராக, வழிகாட்டியாக இருந்தவர் சுல்தான் நூருத்தீன் ஸங்கி அவர்கள்.

இஸ்லாத்தை பின்பற்றுவதிலும் அதனை செயல்படுத்துவதிலும் நேர்வழி நின்று ஆட்சி செய்த, சொர்க்கத்திற்கு நன்மாராயம் கூறப்பட்ட நான்கு கலீஃபாக்கள், அவர்களுக்கு பின்னர் உமர் இப்னு அப்துல் அஜீஸ்(ரஹ்), இவர்களுக்கு பின்னர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்களை தான் இந்த பெருமக்களுக்கு இணையாக கூறமுடியும்.

மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக முஸ்லிம் ஆட்சியாளர்களுடன் குறிப்பாக வடக்கு ஈராக் போன்ற நாடுகளுடன் இணைந்து ஒரு திறமையான இஸ்லாமிய தடுப்பு படையை உருவாக்கியவர் நூருத்தீன் ஸங்கி (ரஹ்) அவர்கள். நூருத்தீன் ஸங்கி அவர்களின் கனவு ஒன்று தான். முஸ்லிம்கள் ஒன்றிணைய வேண்டும். ஈப்ரடீஸிலிருந்து நைல் வரை உள்ள இஸ்லாமிய பகுதிகள் அனைத்தையும் இணைத்து சிலுவைப்படையினருக்கு எதிராக ஓர் ஒருங்கிணைந்த இஸ்லாமிய படையை உருவாக்க வேண்டும் என்பதே அந்த கனவு.

நூருத்தீன் ஸங்கிக்கு பிறகு அந்த பணியை தொடர்ந்தவர் ஸலாஹுத்துன் அய்யூபி அவர்கள். இவர் காலத்தில் தான் ஜெருசலேம் முஸ்லிம்களின் கையில் வந்தது. இந்த வடு ஆறாத வடுவாக கிறித்தவர்களுக்கு இருந்தது. முதலாம் உலகப்போரின் போது பிரெஞ்சு தளபதி ஹென்றி ஜோசப் ஈகுவின் கௌராட் என்பவன் சலாஹுத்தீன் அய்யூபி அவர்களின் அடக்கஸ்தலத்தை எட்டி உதைத்து "எழுந்திரு, ஸலாஹுத்தீன் நாங்கள் திரும்பி வந்து விட்டோம். பிறையை சிலுவை வெற்றி கொண்டு விட்டது" என்று சொன்னதிலிருந்து ஸலாஹுத்தீன் அய்யூபி அவர்கள் கொடுத்த அடி எப்படிப்பட்டது என்பதை உலகம் அறியும். கிறித்தவ உலகம் கிட்டத்தட்ட எண்ணூறு வருடங்களுக்கு பிறகு வரலாற்றை நினைவில் வைத்து இஸ்லாமிய உலகத்தை பழி தீர்த்து கொண்டது. ஆனால் இஸ்லாமியர்கள் தங்களது வரலாற்று நாயகர்களை மறந்து விட்டது தான் வேதனை. இனி உள்ளே...

# ஃபிரான்குகளின் எகிப்து முற்றுகையும் நூருத்தீன் அவர்களின் தந்திரமும்

▼▼▼

*மீதமிருந்த தன்னுடைய படையினருடன் நூருத்தீன் அவர்கள் பிராங்குகளின் மற்ற பகுதிகளை தாக்கத் தொடங்கினார். அங்கிருந்த படையினர் ஏற்கனவே எகிப்திற்கு படையெடுத்துச் சென்று விட்ட காரணத்தினால் தற்போது அந்த பகுதிகள் போதிய பாதுகாப்பின்றி இருந்தன. இது நூருத்தீன் அவர்களுக்கு வசதியாக போய்விட்டது. இதில் இரண்டு விதமான பலன்கள் நூருத்தீன் அவர்களுக்கு கிடைத்தன. ஒன்று நூருத்தீனின் இந்தத் தாக்குதல்களால் சிலுவைப் படையினரின் பல்வேறு நகரங்கள் தாக்கப்பட்டு சிலுவைப் படையினரின் செல்வங்கள் நூருத்தீன் வசமாயின. மற்றொன்று நூருத்தீன் அவர்களின் படையினர் ஸலாஹுதீன் அவர்களின் படைக்கு உதவி செய்ய வரும் செய்தியையும் நூருத்தீன் சிலுவைப் படையினரின் நகரங்களை தாக்கிய செய்தியும் கிடைக்கப் பெற்றவுடன் சிலுவைப் படையினர் அலறி அடித்துக்கொண்டு எகிப்தை விட்டு வெளியேறி தங்கள் நகரங்களுக்கு திரும்பினர். ஆனால் அவர்கள் திரும்பியபோது அவர்களுக்கு காணக்கிடைத்தது அவர்களுடைய நகரங்கள் கொள்ளை போன காட்சிகள் தான்.*

*டாமியட்டா பகுதி முற்றுகையிடப்பட்ட போது நூருத்தீன் அவர்கள் மிகுந்த கவலை கொள்ளலானார். இந்த முற்றுகையின் காரணமாக*

பாதிக்கப்பட்டிருந்த முஸ்லிம்கள் குறித்து மிகவும் வருந்திக் கொண்டிருந்தார். இந்த சமயத்தில் ஒரு நாள் அவருக்கு முன்னால் நபிமொழியின் ஒரு பகுதி வாசித்து காண்பிக்கப்பட்டது. பொதுவாக அவருடைய சபைகளில் குர்ஆனுடைய வசனங்களும் நபிமொழிகளும் வாசித்து காண்பிக்கப்படுவது வழக்கம். அதன்படியே அன்றும் அவ்வாறு வாசித்து காண்பிக்கப்பட்டது. அந்த நபிமொழியின் கருத்துப்படி அவர் சிரிக்க வேண்டும். ஆனால் அவ்வாறு அவர் செய்யவில்லை. அங்கிருந்தவர்கள் ஏன் சிரிக்கவில்லை என கேட்டதற்கு நூருத்தீன் அவர்கள் "டாமியட்டா பகுதியில் முஸ்லிம்கள் முற்றுகையிடப்பட்டு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க நீ சிரித்துக்கொண்டிருந்தாயா என்று எங்கே எல்லாம் வல்ல இறைவன் முன்னாள் வெட்கப்பட வேண்டியிருக்குமோ என்ற காரணத்தினாலேயே நான் சிரிக்கவில்லை" என்று பதிலளித்தார். இப்படி எல்லா நிலையிலும் தன் பாதுகாப்பின் கீழ் இருந்த முஸ்லிம்கள் குறித்த கவலையிலேயே அவர் இருந்தார் என்றால் மிகையல்ல.

### கனவில் வந்த இறைத்தூதர்

சிலுவைப் படையினர் நூருத்தீன் அவர்கள் எதிர்பார்த்தபடி டாமியட்டா பகுதியிலிருந்து பின்வாங்கி தங்கள் பகுதிகளுக்கு திரும்பத் தொடங்கினர். ஆனால் இந்த செய்தி நூருத்தீன் அவர்களுக்கு தெரியாது. சிலுவைப் படையினர் என்றைய தினம் எகிப்திலிருந்து பின் வாங்கினார்களோ அன்றைய தினம் நூருத்தீன் அவர்களின் இமாம் ஒருவர் ஒரு கனவு கண்டார். அந்தக் கனவில் முஹம்மது நபி ஸல்லல்லாஹ் அலைஹி வஸல்லம் அவர்கள் தோன்றி "நூருத்தீன் அவர்களிடம் சென்று சிலுவைப் படையினர் இன்று இரவு டாமியட்டாவில் இருந்து பின்வாங்கி விட்டனர். எனவே முஸ்லிம்கள் குறித்து கவலை கொள்ள வேண்டாம் என்று சொல்" என்று கூறினார்கள்.

கனவிலேயே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு பதில் அளித்த இமாம் அவர்கள் "அல்லாவின் தூதரே நான் இந்த செய்தியை நூருத்தீன் அவர்களிடம் சொன்னால் அவர் அதை நம்ப மாட்டாரே, இதற்கு நான் என்ன செய்வது" என்று கூறினார்.

அதற்கு பதிலளித்த நபிகள் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீ நூருத்தீனிடம் அவர் ஹரீம் மலையில் ஸஜ்தாவில் இருந்தபோது இறைவனிடம் வேண்டியதை சுட்டிக்காட்டுங்கள். அப்போது அவர் "இறைவா நீ உன்னுடைய மார்க்கத்திற்கு வெற்றியை தருவாயாக, எனக்கல்ல, உன்னுடைய வெற்றியைக் கொண்டு பெருமைப்பட்டுக் கொள்ள இந்த நாய் யார்? என்று கூறி வேண்டியதை அவரிடம் சொல்லுங்கள்" என்று கூறி கனவிலிருந்து மறைந்தார். கனவிலிருந்து திடுக்கிட்டு விழித்த இமாமவர்கள் உடனடியாக பள்ளிவாசலை நோக்கி விரைந்தார். அது சாம நேரம். பொதுவாக அந்நேரங்களில் நூருத்தீன் அவர்கள் தொழ ஆரம்பித்து அதிகாலை வரை தொழுது கொண்டிருப்பார். அதன்படியே அன்றும் நூருத்தீன் அவர்கள் பள்ளிவாசலை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தார். அவரை வழிமறித்த இமாமவர்கள் தான் கனவில் கண்டவற்றை அப்படியே அவரிடம் கூறினார். ஆனால் அதில் நாய் என்ற வார்த்தையை அவர் சொல்லவில்லை. நூருத்தீன் அவர்கள் கனவில் கண்ட எல்லாவற்றையும் முழுமையாக சொல்லும்படி இமாம் அவர்களிடம் கூறினார். இந்த முறை இமாமவர்கள் நாய் என்ற வார்த்தையையும் சேர்த்து கனவில் கண்டவற்றை முழுமையாக கூறினார். அதை செவியுற்ற நூருத்தீன் அவர்கள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்துவிட்டார். இறைவனுக்கு நன்றி செலுத்த சிரம் பணிந்தார். இவையெல்லாம் நடந்து முடிந்த பின்னரே அடுத்த நாள் இரவு சிலுவைப் படையினர் டாமியட்டா பகுதியை விட்டு திரும்பி விட்டனர் என்ற செய்தி நூருத்தீன் அவர்களுக்கு வந்து சேர்ந்தது.

### ஸலாஹுதீன் அவர்களின் தந்தை

இந்த சூழ்நிலையில் நூர்தீன் அவர்களின் படைத் தளபதிகளில் ஒருவரும் ஸலாஹுதீன் அய்யூப் அவர்களின் தந்தையுமான நஜ்முதீன் அய்யூப் அவர்கள் நூருத்தீன் அவர்களிடம் தான் தன் மகனிடம் சென்று இருக்க விரும்புவதாக அனுமதி கோரினார். இவ்வாறு அனுமதி கோரியதற்கு ஒரு முக்கிய காரணம் உண்டு. ஸலாஹுதீன் அய்யூபி அவர்கள் எகிப்தின் முக்கியமான பதவியில் அமர்ந்த பின்னர் தன் தந்தைக்கு ஒரு செய்தியை அனுப்பினார். அதில் தன் நிலைமை யூசுப் நபி அலைஹி வஸ்ஸலாம் அவர்களின் நிலைமை ஒத்ததாக இருப்பதாக கூறியிருந்தார். யூசுப் நபியும் தன் தந்தையை விட்டு பிரிக்கப்பட்டு அதன்காரணமாக அவரும் அவருடைய தந்தையும் நீண்ட நெடும் காலங்களாக வருத்தத்தில் இருந்தனர். தான் தன் தந்தையுடன் உடனடியாக சேர்ந்திருக்க விரும்புவதாகவும் செய்தியை அனுப்பி இருந்தார். இந்த செய்தியின் காரணமாகவே நஜ்முதீன் அவர்கள் நூருத்தீன் அவர்களிடம் தன் மகனிடம் சென்று இருக்க விரும்புவதாக அனுமதி கோரியிருந்தார். நூருத்தீன் அவர்களும் அவருக்கு அந்த அனுமதியை மகிழ்ச்சியுடன் அளித்தார்.கிடைக்கப் பெற்றவுடன் நஜ்முதீன் தன் குடும்பத்தாருடன் எகிப்திற்கு சென்று அங்கேயே தங்கி விட்டார். இதற்கிடையே ஸலாஹுதீன் அவர்களுக்கு ஒரு மகன் பிறந்தான். அவனுக்கு நூருத்தீன் அலி என பெயரிடப்பட்டது.



### கடுமையான நிலநடுக்கம்

இந்த வருடத்தின் ஷவ்வால் மாதத்தின் பன்னிரண்டாம் நாளில் மிகக் கடுமையான நிலநடுக்கம் ஒன்று தாக்கியது அதில் லெவான்த், எகிப்து, அரேபியன் பெனிசூலா, மொசூல், ஈராக் போன்ற பகுதிகள் பாதிப்புக்கு உள்ளாகின மற்ற பகுதிகளை ஒப்பிடும்போது லெவான்த் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியது. பஃலாபக், ஹிம்ஸ், ஹமா, ஷய்ஸர் போன்ற பகுதிகள் சின்னாபின்னமாகி விட்டன. இறந்தவர்களின் எண்ணிக்கையை கணக்கிடமுடியாத அளவுக்கு பலர் இந்த நிலநடுக்கத்தில் இறந்து போயினர். லெவான்த்தின் கோட்டைகளின் மதில்சுவர்கள் இடிந்து விழுந்து விட்டன. பஃலாபக் கோட்டையின் சேதங்களை கேள்வியுற்ற நூறுதீன் அதை புனரமைக்க அங்கே சென்றார். அந்நேரத்தில் அவருக்கு நாட்டின் மற்ற பகுதிகளில் ஏற்பட்ட சேதம் குறித்து தெரியாது. அவர் பஃலாபக் பகுதியை அடைந்தவுடன் அவருக்கு மற்ற பகுதிகளில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தகவல் தெரியவந்தது. எனவே அவர் பலாபக் பகுதியை புனரமைக்க ஒருவரை நியமித்து விட்டு ஹிம்சுக்கு சென்றார். அங்கேயும் இதே போல் செய்துவிட்டு பின்னர் ஹமாவுக்கும் பரீனுக்கும் சென்றார்.

இந்த சேதங்களின் காரணமாக நூருத்தீன் அவர்களுக்கு தன்னுடைய நாட்டின் பாதுகாப்பு குறித்து கவலை ஏற்பட்டது. கோட்டையின் மதில் சுவர்கள் குறைந்ததன் காரணமாக எதிரிகள் எளிதில் உள்ளே நுழைந்து தாக்குதல் நடத்துவார்களோ என்ற எண்ணம் அவருக்கு தோன்றியது. குறிப்பாக பரீன் கோட்டை ஃபிராங்குகளுக்கு அருகாமையில் இருந்தது. எனவே அவர் போர் வீரர்களின் ஒரு குழுவினரை தேர்ந்தெடுத்து அதற்கு ஒரு தலைவரை நியமித்து அவர்களை அந்த கோட்டையிலேயே தங்க வைத்தார். மேலும் அந்த கோட்டையை இரவு பகலாக பணிசெய்து சரி செய்யும்படி உத்தரவிட்டார்.

பின்னர் அவர் அலெப்போவிற்கு சென்றார். அங்கு மற்ற நகரங்களை விட மிக அதிகமான சேதம் ஏற்பட்டுள்ளதை தெரிந்து கொண்டார். அங்குள்ள மக்கள் எந்த அளவிற்கு பயந்து இருந்தார்கள் என்றால் அவர்கள் தங்கள் வீடுகளுக்குள் திரும்பிச் செல்லவே இல்லை. மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டு விடுமோ என்ற பயம் தான் காரணம். அவர்கள் வீடுகளை விட்டு எல்லைப் பகுதிக்கு சென்று தங்கவும் மறுத்துவிட்டார்கள். அதற்கு முக்கியமான காரணம் ஒன்று இருந்தது. அதனை நூருத்தீன் அவர்கள் மட்டுமே எதிர்கொள்ள இயலும். நூருத்தீன் அவர்கள் எதிர் கொண்டார்களா?

- இன்ஷா அல்லாஹ் அடுத்த இதழில்.




# UAPA வழக்குகளில் NIA தண்டனை பெற்றுத்தரும் ரகசியம்

Unlawful Activities Prevention Act (UAPA) எனப்படும் சட்டவிரோத செயல்கள் தடுப்புச்சட்டம், துரோக குற்றம் ஆகிய கடுமையான சட்டங்களின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் தண்டனை விகிதத்தை (conviction rate) அதிகரித்து காட்டுவதற்காக என்ஐஏ எனப்படும் தேசிய புலனாய்வு ஏஜென்சி இக்குற்றச் சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ள நபர்களுக்கு பிணை கிடைக்காமல் செய்து வருவதுடன், அவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி "வழக்கை தொடர்ந்து நடத்தாமல் குற்றத்தை ஒப்புக் கொண்டால் குறைந்தபட்ச தண்டனை வழங்கப்படும்" என ஆசை வார்த்தைகளை கூறி அவ்வாறு குற்றத்தை ஒப்புக் கொண்டவர்களுக்கு நீதிமன்றத்தின் உதவியுடன் சட்டவிரோதமாக 5 ஆண்டுகள் சிறை தண்டனை வழங்கி அவ்வழக்கு களை பாதியிலேயே முடித்து வருவதாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன.

சட்டவிரோத தடுப்புச் சட்டம், தேசவிரோத சட்டம் போன்ற சர்ச்சைக்குரிய, பயங்கரவாத சட்டப்பிரிவுகளை நீக்க வேண்டும் என நாடு முழுவதும் உள்ள பல்வேறு ஜனநாயக அமைப்புகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.

இந்நிலையில், இவ்வழக்குகளில் எவ்வாறு தண்டனை வழங்கப்படுகிறது என்பது குறித்து குடிமக்கள் உரிமைகள் பொதுமன்றம் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் வழக்கறிஞர் அ.கமருதீன் வெளிப்படுத்தியுள்ளார்.

சர்ச்சைக்குரிய இச்சட்டங்களை நீக்க வேண்டும் என வலியுறுத்தி திருச்சியில் அண்மையில் நடை பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய வழக்கறிஞர் கமருதீன் பூந்தமல்லியில் உள்ள என்.ஐ.ஏ. சிறப்பு நீதிமன்றம் இதுபோன்ற இரண்டு வழக்குகளில் கைது செய்யப்பட்ட 4 நபர்களுக்கு அண்மையில் தலா 5 ஆண்டுகள் தண்டனை கொடுத்திருக்கிறது என சுட்டிக்காட்டினார்.

முதல் வழக்கில் தஞ்சை மாவட்டம் அதிராம் பட்டணத்தைச் சார்ந்த சேர்ந்த தமிமுன் அன்சாரி என்பவரை திருச்சி கியூ பிரிவு அதிகாரிகள் கைது பண்ணாங்க. இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரிகளுடன் சேர்ந்து ராணுவ நிலைகளை ஃபோட்டோ பிடிச்சு, தாக்கி இந்தியாவை ஒரு இஸ்லாமிய நாடாக ஆக்க சதித்திட்டம் தீட்டினார் என குற்றஞ்சாட்டி அவரை கைது பண்ணாங்க. அவரை டி.வி.எஸ். டோல்கேட்ல வைத்து கைது பண்ணதா வழக்கில் காட்டினாங்க. ஆனா அவரை உண்மையில் கைது செஞ்சது திருச்சி ஏர்போர்ட்டில. இந்த வழக்கு விசாரணை பின்னர் என்ஐஏவுக்கு எதுக்கு மாற்றப்பட்டது.

அந்த வழக்கிற்கு பின்னர், சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் ஒரு குண்டு வெடித்ததற்கு முதல் நாள் ஜாகிர் உசேன் என்பவரை கைது செய்துள்ளதாக என்.ஐ.ஏ. அதிகாரிகள் அறிவிச்சாங்க. சிவபாலன், முகமது சலீம் உள்ளிட்ட மேலும் நான்கைந்து பேருடன் சேர்ந்து கள்ள நோட்டுகள் வைத்திருந்தனர். சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தை தாக்க திட்டமிட்டிருந்தனர் என்ற குற்றச்சாட்டில் அவர்களை என்.ஐ.ஏ. அதிகாரிகள் கைது செய்தனர். இதுதான் என்.ஐ.ஏ.




முதன் முதலாக நேரடியாக ஃஎப்ஐஆர் போட்ட வழக்கு.

சாதாரணமாக திருட்டு வழக்குகளில் ஈடுபடுறவங்க ஏதாவது ஒரு வழக்கில் மாட்டிகிட்டா. அதற்கு பின்னர் அவர் மேல இதுவரை கண்டுபிடிக்க முடியாத பத்து பதினைந்து வழக்குகளை போலீசார் போட்ருவாங்க. அவரால ஜாமீன் எடுக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு அவரிடம் போலீஸ்காரர், அரசு வழக்கறிஞர், நீதிபதி ஆகியோர் "உன்னுடைய குற்றத்தை ஒத்துக்கிட்டா'இதுவரை நீ சிறையில் இருந்த காலத்தை கழிச்சிகிட்ட உன்னை வெளியே விட்றுவோம்" என சொல்லுவாங்க. ஒரு வழக்கிற்கு 2பேர் வீதம் 15 வழக்குகளுக்கு 30 ஜமீன்தாரர்களை ஏற்பாடு செய்ய முடியாது என்பதால், வேற வழியில்லாம அவர் குற்றம் செய்ததாக ஒத்துக்கிடுவார்.

ஜாகிர் உசேன் வழக்கின் ஆரம்ப நிலையிலேயே அவரது வழக்கறிஞர் புகழேந்தியை ஜாகிர் உசேன் சிறையில் சந்திக்க மறுக்கிறார். அதோடு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்த நாளன்று கோர்ட்டுக்கு வந்த ஜாகிர்உசேன் "நான் பாகிஸ்தான் உளவாளி தான். நான் ஒத்துக்கறேன், எனக்கு தண்டனை கொடுங்க" என்றார்.

ஆனால் அவரோடு கைது செய்யப்பட்ட ஏனைய மற்ற நபர்கள் "குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நாங்கள் மறுக்கிறோம் இவ்வழக்கில் இருந்து எங்களை விடுவிக்கக்கோரி நீதிமன்றத்தில் டிஸ்சார்ஜ் பெட்டிசன் போட்டிருக்கிறோம்" என்கின்றனர். அப்போது ஒரே வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப் பட்டுள்ள அவர்களைப் பார்த்து நீதிபதி, நீங்க தனியா வழக்கு நடத்திகங்க.இவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால இவருக்கு மட்டும் நாளைக்கு ஜட்ஜ் மென்ட் என சொல்லி ஜாகிர் உசேனுக்கு 5 ஆண்டுகள் தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கிறார்.

இது போன்ற கடுமையான குற்ற வழக்குகளில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் குற்றத்தை ஒத்துக் கொண்டாலும், குற்றத்தை அவர்கள் மறுத்ததாகக் கருதி, தொடர்ந்து வழக்கை நடத்தி சாட்சிகள் அனைவரையும் கூண்டில் ஏற்றி விசாரித்த பின்னர்தான் தண்டனை தர வேண்டும். ஆனால் இந்த வழக்கில் மறுநாள் ஒன்றிரண்டு சாட்சிகள் மற்றும் விசாரணை அதிகாரியை மட்டும் விசாரித்துவிட்டு ஜாகிர்உசேனுக்கு மட்டும் தண்டனை வழங்கியுள்ளார் என்.ஐ.ஏ. நீதிமன்ற நீதிபதி, என்கிறார் வழக்கறிஞர் கமருதீன்.

அதன்பின்னர், குற்றத்தை ஒப்புக் கொண்டால் ஜாகிர் உசேனுக்கு வழங்கப்பட்டதைப் போல குறைந்தபட்ச தண்டனை பெற்றுத்தருவதாகஅரசு தரப்பில் உறுதியளிக்கப்பட்டதால்,

சிவபாலன் அப்ரூவராக மாறினார். முஹம்மது சலீம் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதையடுத்து அவர்கள் இருவருக்கும் நீதிமன்றம் தலா 5 ஆண்டுகள் தண்டனை வழங்கியது. இதுபோன்ற கடுமையான சட்டப்பிரிவுகளில் போடப்பட்டுள்ள வழக்குகளில் சாதாரணமான ஆயுள்தண்டனை அல்லது குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் தண்டனை விதிக்கப்படும். ஆனால் ஜாகிர் உசேனுக்கு கொடுக்கப்பட்டது 5 ஆண்டுகள் சிறை. இத்தீர்ப்பை எதிர்த்து என்.ஐ.ஏ. அல்லது அரசு தரப்பில் வேறுயாருமோ மேல்முறையீடு செய்யவில்லை என்பது ஆச்சரியமாக உள்ளது.

தண்டனைக்குப் பிறகும் ஜாகிர் உசேனின் முகத்தை மூடி வைத்தவாறு தான் பத்திரிகைகளுக்கு செய்தி

கொடுத்தாங்க. பாகிஸ்தான் உளவாளி என குற்றஞ்சாட்டப்பட்டவரை எங்கேயும் அடையாளம் காட்டக்கூடாது என்பதில் என்ஐஏ ரொம்ப தெளிவா இருக்கு என்கிறார் வழக்கறிஞர் கமருதீன்.

இலங்கையைச் சேர்ந்த ஜாகிர் உசேன் இந்திய அரசின் உளவாளியாக பல்வேறு வெளிநாடுகளில் செயல்பட்டு வந்ததாக கூறப்படுகிறது. தண்டனை விகிதத்தை உயர்த்திக் காட்டுவதற்காக என்.ஐ.ஏ. தன்னோட நபர்களையே கைது பண்ணி ஒத்துக்க வச்சு, அதற்குப் பின்னர் அதையே மற்றவர்களிடம் காட்டி பேரம் பேசி குற்றத்தை ஒத்துக் வச்சு குறைந்த பட்ச தண்டனை பெற்றுத்தருகிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

இதேபோன்ற வழக்கில் என்.ஐ.ஏ.வால் கைது செய்யப்பட்ட ரஃபீக் என்பவர் தன் மீதான குற்றத்தை ஒத்துக் கொள்ள மறுத்ததோடு, அவ்வழக்கில் ஜாமீன் பெற்றார். ஆனால் அவர் வெளியே வர முடியாதவாறு அவர் மீது அடுத்தடுத்து அதிகாரிகள் வழக்கு போட்டனர்.இந்நிலையில் குற்றத்தை ஒத்துக்க சொல்லி என்.ஐ.ஏ. அதிகாரிகள் தன்னை மிரட்டுவதாக கூறி உயர்நீதிமன்றத்தில் வழக்கு போட்டார். இன்றுவரை அவர் ஜாமீனில் வெளியே வரமுடியவில்லை. ஒரு வழக்கில் ஜாமீன் கிடைத்தால், தீவிரவாதி கைது எனக்கூறி அவர் மீது இன்னொரு வழக்கைப்போட்டு கைது பண்ணி சிறையில் அடைச்சிடுவாங்க.

**யு.ஏ.பி.ஏ. வழக்குகளில் என்.ஐ.ஏ. எப்படி கையாளுறாங்க என்பதற்கு ஒரு உதாரணம்.**

ஜாகிர் உசேன் வழக்கிற்கு பிறகு இலங்கையைச் சேர்ந்த அருண் செல்வராஜ் என்பவரை கைது செய்கிறாங்க. கடற்படை தொடர்பாக சென்னை பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில் நாங்க கொடுத்த ரகசிய புகைப்படங்களை அந்நிகழ்ச்சியை நடத்திய ஜாகிர் உசேன் பாகிஸ்தானுக்கு கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவரை கைது செய்தனர். இத்தனைக்கும் அது கடற்படை அதிகாரிகளின் குடும்பத்தினர் கலந்துகொண்ட ஒரு நிகழ்ச்சி. இரகசிய ஃபோட்டோக்களை கொடுத்த இராணுவ அதிகாரிகள் மீது இதுவரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

அதேபோல 2012ம் ஆண்டு தமிமுன் அன்சாரி கைது செய்யப்பட்டார். ஒன்றரை வருஷம் கழிஞ்சு அருண் செல்வராஜ் என்பவரை கைது செய்தாங்க. இவங்க இரண்டு பேருக்கும் பாஸ் (தலைவர்) யாருன்னா இலங்கையில் உள்ள பாகிஸ்தான் தூதரக அதிகாரி என குற்றப்பத்திரிகையில் படம் வரைந்து விளக்கியிருக்காங்க.

இவ்வழக்கில் 2015ம் ஆண்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. மொத்தம் 150மம சாட்சிகளில் இதுவரை 38 சாட்சிகள் மட்டுமே விசாரிக்கப் பட்டுள்ளனர்.

இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் வரை சென்று தமிமுன் அன்சாரிக்கு ஜாமீன் வாங்கிட்டோம். உடனே இவ்வழக்கின் விசாரணை அதிகாரியான க்யூ பிரிவு அதிகாரியை மிரட்டியதாக தமிமுன் அன்சாரி, திருச்சியைச் சேர்ந்த அவரது வழக்கறிஞர் கென்னடி ஆகியோர் மீது மீண்டும் ஒரு பொய் வழக்கு போட்டாங்க.

அந்த வழக்கில் ஜாமீன் எடுத்த எனக்கு “இந்த வழக்கு சம்பந்தமாக உங்களை விசாரிக்கணும்” எனக்கூறி இதுவரை மூன்று முறை சம்மன் அனுப்பியிருக்காங்க. இப்படி வழக்கறிஞர்களையும் என்.ஐ.ஏ. அதிகாரிகள் மிரட்டுறாங்க என்கிறார் வழக்கறிஞர் கமருதீன்.

நாலரை வருசமா அருண் செல்வராஜ் சிறையில் இருந்தார். அவரிடம் என்ஐஏ அதிகாரிகள் வழக்கம்போல பேரம் பேசினர். இதையடுத்து 38 சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் இந்த வழக்கில் நான் குற்றத்தை ஒத்துக்கிறேன் எனக்கூறி அருண் செல்வராஜ் பெட்டிசன் போடுறார். இந்த வழக்கில் முதல் குற்றவாளியான தமிமுன் அன்சாரிக்கு தெரியாமலேயே இந்த வழக்கை இரண்டாகப் பிரித்து அருண் செல்வராஜூக்கு 5 வருஷம் தண்டனை வழங்கி நீதிமன்றம் தீர்ப்பளிச்சது.

இதுதான் என்.ஐ.ஏ. இந்த வழக்குகளில் தண்டனை வாங்கிக் கொடுக்கும் ரகசியம். அதேபோல, தமிமுன் அன்சாரி வழக்கில் அவருக்கு எதிராக பொய்சாட்சி சொல்ல வேண்டும் என தன்னை அதிகாரிகள் மிரட்டுவதாக தஞ்சாவூரைச் சேர்ந்த பிரபு பில்லா என்பவர் மாஜிஸ்திரேட்டிடம் வாக்குமூலம் கொடுத்தார்.

இந்நிலையில், 5 ஆண்டுகள் தண்டனை வழங்கப் பட்ட ஜாகிர்உசேன் தண்டனை காலம் முடிந்து இலங்கைக்கு சென்றுவிட்டார். அவர் யார் என்பதே எங்களுக்கு சந்தேகமாக இருக்கு. அவருக்கு முதலில் தண்டனை கொடுத்துவிட்டு அதைகாட்டி மற்றவர் களுக்கு ஆசை வார்த்தைகளை கூறி கன்வின்ஸ் செய்து அவர்களுக்கும் தண்டனை வழங்கி வர்றாங்க. இதனால் இவ்வழக்குகளில் தண்டனை விகிதம் அதிகம் இருப்பது போல செயற்கையாக ஒரு மாய தோற்றத்தை ஏற்படுத்துறாங்க என்.ஐ.ஏ. அதிகாரிகள் என்றார் வழக்கறிஞர் கமருதீன்.

நன்றி - அங்குசம்

# UAPA சட்டம் செயல்பாட்டுத் தணிக்கையும் அச்சட்டம் பற்றிய சில எண்ணங்களும்



UAPA கொடுங்கோன்மை சட்டத்திற்கு எதிராக மக்கள் இந்தியா முழுவதும் முகாம்களை நடத்தி வருகின்றனர். அருட்தந்தை ஸ்டேன் சுவாமி அவர்களின் சிறை மரணத்திற்கு பின், இச்சட்டத்திற்கு எதிரான மக்களின் குரல்கள் அதிகரித்துள்ளன.

அதன் ஒரு பகுதியாக தமிழகத்தில் பல மாவட்டங்களில், UAPA கொடுங்கோன்மை சட்டத்திற்கு எதிரான கருத்தரங்கங்கள், முகாம்களும் நடந்துக் கொண்டிருக்கின்றது. இதன் ஒவ்வொரு முகாமிலும், நமது தாருல் இஸ்லாம் அறக்கட்டளை சார்பாக வழக்கறிஞர் கமருதீன் அவர்கள் கலந்து கொள்கிறார்.

இந்நிலையில்கடந்த 24 ஜூலை 2021 அன்று இணையவழியில் Campaign for Judicial Accountability and Reforms(CJAR)மனித உரிமைக் காப்பாளர் கூட்டமைப்பும் (Human Rights Defenders Alert - India) இணைந்து நடத்திய கருத்தரங்கில் உச்சநீதிமன்ற, உயர்நீதிமன்றகளின் நீதிபதிகள் திருமிகு.மதன் லோக்கூர், திருமிகு.ஆலம், திருமிகு.தீபக் குப்தா, திருமதி.அஞ்சனா பிரகாஷ், திருமிகு.கோபால் கௌடா ஆகியோர் ஆற்றிய உரையின் தமிழாக்கம் நூல் வடிவில் தரப்பட்டுள்ளது. இவ்வுரை பொது மக்களிடம் எளிதில் சென்றடையும் நோக்கோடு, காவல் சித்திரவதைகளுக்கு எதிரான கூட்டிய க்கத்தின் சார்பில் தமிழில் வெளியிடப்பட்டது. அதன் ஒரு பகுதியை இங்கே தருகின்றோம்..

*அன்பிற்குரிய பங்கேற்பாளர்களே! இன்றைய அமர்வில் ஊபா சட்டத்தின் செயல்பாட்டுத் தணிக்கையில் தொடங்கி, அச்சட்டம் பற்றிய சில பொதுப்படையான எண்ணங்களை உங்களோடு பகிர்ந்து கொள்ளலாம் எனக்கருதுகிறேன். அரசமைப்புச் சட்டம் தன்னுரிமைக்கு (சுதந்திரத்திற்கு) வழங்கும் உத்திரவாதம், “தேசிய பாதுகாப்பு” ஆகிய இரு கோணங்களிலிருந்தும் என் தணிக்கை அமைகிறது. இச்சட்டம் மெய் வாழ்க்கையில் செயல்படும்போது தன்னுரிமைக்கு உத்தரவாதம் வழங்காமல் தேசியப்பாதுகாப்பை உறுதிசெய்யும் முயற்சியில் எவ்வாறு ஈடுபடுகிறது என்பதை கண்டறிய முயல்கிறேன்.*

*ஊபா சட்டம் பற்றிய குற்றாய்வுகளில் ஒன்று என்னவென்றால், அச்சட்டத்தின்படியான குற்றத்தீர்ப்பு விகிதம் மிகக் குறைவாகவும், வழக்கு நிலுவையில் கிடக்கும் விகிதம் மிக அதிகமாகவும் இருப்பதால் “சட்டச் செயல்வழியே தண்டனையாகிறது” என்பதே.*

*தேசியக் குற்றப்பதிவுகள் கழகத்தின் கடைசி அறிக்கை 2019ம் ஆண்டுக்கானது. அந்த ஆண்டுக்கு “ஊபா” என்ற தலைப்பில் குற்றத்தீர்ப்பு விகிதங்கள் ஒப்பளவில் அதிகமாக 29.2சதவிகிதம் என்ற நிலையில் இருப்பதை இவ்வறிக்கை காட்டுகிறது. இந்தக் குற்றத்தீர்ப்பு விகிதம் எவ்வாறு கண்டறியப் படுகிறது? எளிய விடைதான்.*

*2019ம் ஆண்டு 2,361 ஊபா வழக்குகள் விசாரணைக்காக நிலுவை இருக்கின்றன. 113 வழக்குகள் கீழ்காணும் வகையில் தீர்வு செய்யப்பட்டன.*

குற்றத் தீர்ப்பு: 33

வழக்கிலிருந்து விடுதலை: 64

குற்றச்சாட்டு நீக்கம்:16

ஆக 29.2சதவிகிதம் குற்றத்தீர்ப்பு விகிதம் என்பது ஓராண்டில் தீர்வு செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பெறப்படக் காணலாம் (113 /33).

உசாவல்(வழக்கு விசாரணை) நிலையில் 95சதவிகிதம் வழக்குகள் நிலுவையில் நிற்பதையும் இந்த அறிக்கை பதிவு செய்கிறது.

ஆனால், பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் மொத்த எண்ணிக்கையுடன் அல்லது கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கையுடன் ஒப்புநோக்கின் உண்மைக்கு நெருக்கமான கணக்கு வெளிப்படும். குற்றத்தீர்ப்பின் விகிதம் 2 சதவிகிதமாகக் குறையும். ஊபா வழக்குகளின் நிலுவை விகிதம் 98சதவிகிதமாக உயரும்.

இவை நீதிமன்ற தீர்ப்பு விகிதங்கள் என்பது நன்கறிந்த செய்தி.

ஆனால் புலனாய்வின் நிறைவைக் குறிக்கும் “காவல்துறைத் தீர்வு விகிதம்” அவ்வளவு நன்கறிந்த ஒன்றல்ல எனலாம். ஊபா வழக்குகளைப் பொறுத்தவரை, ஊபா குற்றங்களில் குற்றம் மடலிடும் விகிதம் மட்டும் 42.5சதவிகிதம் என்றும், நிலுவை விணீதம் 77.8சதவிகிதம் என்றும் தேசியக் குற்றப்பதிவுகள் கழகத்தின் அறிக்கை காட்டுகிறது.

புலனாய்வு, உசாவல் ஆகிய இரு கட்டங்களிலுமே தீர்வு விகிதம் இவ்வளவு குறைவாக இருந்ததால், வழக்கு இறுதியில் தோற்றுப்போகக்கூடும் என்றாலும் குற்றஞ்சாட்டப்பட்டவர் 8, 10 அல்லது சில வழக்குகளில் 12 ஆண்டுகளுக்குப் பிறகுதான் சிறைக்காவலிலிருந்து வெளியே வருவார் என்பதில் வியப்பில்லை. ஆகவே ஊபா வழக்குகளில் செயல் வழியே தண்டனையாகி விடுவாதகச் சொல்வது தவறாகாது.

இந்தக் கட்டத்தில் முற்றமுழுக்கத் தேசிய பாதுகாப்புக் கோணத்திலிருந்து ஒரு கேள்வியைக் கேட்பது பொருத்தமாக இருக்கலாம்: புலனாய்வு முகமைகளுக்கு அசாதாரண அதிகாரங்களை வழங்குவதும், குற்றம்சாட்டப்பட்டவர்களின் பல அடிப்படை உரிமைகளையும் சட்ட உரிமைகளை நிறுத்தி வைப்பதுமான தனிப்பொறுப்புள்ள சட்டச் சட்டகத்துக்கு இந்த காவல்துறை தீர்வு விகிதங்கள் பொருந்தி வருமா?

மேலும்,தேசியப் புலனாய்வு முகமையானது தேசிய பாதுகாப்புத் தொடர்புள்ள செயல்கள் மீதும், சதிகள் மீதும் நடவடிக்கை எடுக்கும் தனிப்பொறுப்புள்ள முகமைக்கு வகைசெய்கிறது. இந்தப் புள்ளி விவரங்கள் குறித்து மேலும் விவாதமும் பொறுப்புக்கூறலும் தேவைப்பட்டால் வியப்பில்லை.

ஆயினும், இந்தத் தனிச்சட்டங்களும், தனிப் பொறுப்பு முகமைகளும் ஊபா வழக்குகளில் விரைவாகவும், கவனஞ்சிதறாமலும் புலனாய்வுகள் செய்து முடிக்கத் தவறி விடுவதாகத் தோன்றுகிறது.

அப்படியானால் அரசமைப்புச் சட்ட உரிமை களைப் பெரிதும் பலியிடுவதை அடிப்படையாகக் கொண்ட இந்தச் சட்டச் சட்டகத்தை மேற்கண்ட முடிவுகள் நியாயப்படுத்துமா என்று நாம் கேட்கத்தான் வேண்டும்.

இங்கு மும்பை பயங்கரவாத தாக்குதல் வழக்கை நாம் நினைவுகூறலாம். 2008,2012,2019 ஆண்டுகளில் செய்யப்பட்ட திருத்தங்களால் ஊபா சட்டம் மென்மேலும் கடுமையாக்கப்படுவதற்கு முன்பே நடைபெற்ற தாக்குதல் அது.

இந்தத் தாக்குதலை ஐ.நா தீர்மானங்களின் பொருள்விளக்கப்படி மெய்யாகவே ஒரு பண்பாட்டு பயங்கரவாதத் தாக்குதல்தான். 2008ம் ஆண்டு திருத்தச் சட்டத்தில் மிகவும் கடுமையான சட்டத்தை மேலும் கடுமையாக்குவதை நியாயப்படுத்த இந்தத் தீர்மானங்கள் எடுத்துக்காட்டப்பட்டன.

ஆனால்,ஒரு செய்தி கருத்தில் கொள்ளப் படவேயில்லை. அதாவது 2008,நவம்பர் 26 முதல் 29ம் தேதிக்கு இடையே தாக்குதல் நடைபெற்று விட்டது. புலனாய்வு, உசாவல் (வழக்கு விசாரணை) உயர்நீதிமன்றத்திலும், இறுதியில் உச்ச நீதிமன்றத்திலும் மேல் முறையீடுகள் யாவும் 2012 ஆகஸ்ட் 29க்குள் முடிந்துவிட்டன.

புலனாய்வும், உசாவலும் முழுக்கமுழுக்க குற்ற நடைமுறைச் சட்டத்தின் வெவ்வேறு வழிவகைகளில் ஒட்டியுள்ள 20,21,22 ஆகிய அரசமைப்புச் சட்ட உறுப்புகளுக்கிணங்கவே நடைபெற்றன என்பதை நீதிமன்றங்களின் தீர்ப்புகள் காட்டுகின்றன. நடைமுறையில் கடுமைகாட்ட வழிசெய்யும் திருத்தங்கள் நியாயமான விசாரணைக்கோ அல்லது ஊபா வழக்குகள் விரைவாகத் தீர்வு செய்யப் படுவதற்கோ எவ்வகையில் துணை செய்தன?

அப்பாவி மக்கள் கொல்லப்பட்ட வகையிலும், பாரிய அளவில் உடமைகள் அழிக்கப்பட்ட

வகையிலும் பயங்கரவாதத் தாக்குதல் பெருஞ்சேதம் உண்டுபண்ணியதோடு கண்ணுக்குப் புலப்படாத சுற்றடி வழியில் நாட்டின் குற்ற நீதிமுறைமைக்கும் மிகவும் கேடான சில விளைவுகளுக்கு வழிகோலி விட்டது.

பதறிப்போய் அவசர கோலமாய் ஊபா சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் பாரதூர விளைவுகளை ஏற்படுத்திவிட்டன. இந்தத் திருத்தங்கள் "பயங்கரவாதச்செயல்" என்பதன் பொருளை விரிவாக்கியதோடு 43A 43F ஆகிய நடைமுறை சார் பிரிவுகளையும் சட்டத்தில் சேர்த்துவிட்டன.

43D(2)என்ற பிரிவு புலனாய்வு முகமை புலனாய்வுக் காலத்தை 180 நாள் வரை நீட்டிக்கொள்ள வாய்ப்பளித்தது. குற்றஞ்சாட்டப்பட்டவர் அதுவரை காவலில் இருக்க வேண்டும். 43D(4),(5) ஆகிய பிரிவுகள் குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை பெறுவதை கிட்டத்தட்ட முடியாத காரியமாக்கி விட்டன.

சில நாள் முன்பு திருவாட்டி ஃபரா நாக்வி எழுதிய அருமையான கட்டுரையைப் படிக்க நேர்ந்தது. 2008ம் ஆண்டின் சட்டம் எண் 35 எவ்வாறு இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. அதன் மிகக் கடுமையான வழிவகைகள் எவ்வாறு நாட்டுக்குக் கிடைத்த ஏதோ அற்புதப் பரிசுபோல் சித்தரிக்கப்பட்டன என்பதை அவர் அக்கட்டுரையில் விவரித்திருந்தார்.

புலனாயவுக்காலம் நீட்டிக்கப்பட்டதைப் பொருத்தவரை இது சட்டத்தை வலுவான அரசுக்குப் பொருத்தமுடையதாக்கும் நோக்கமுடையது என்றும்,வேறெந்த நாட்டிலும் இருக்கக்கூடிய இதுபோன்ற சட்டங்களைவிடக் கடுமையானது என்றும் நாடாளுமன்றத்தில் பெருமிதத்துடன் அறிவிக்கப்பட்டது.

மறுபுறம், அதேநேரத்தில், 2007 ஜூலையில் லண்டனில் நடைபெற்ற பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து குற்றச்சாட்டுகளை வலியுறுத்துவதற்கான கால அவகாசத்தை 14 நாளிலிருந்து 90 நாளாக உயர்த்துவதற்கான ஒரு முன்மொழிவின் மீது பிரித்தானிய நாடாளுமன்றம் வாக்களித்தபோது அது அமோகப் பெரும் பான்மையால் தோற்கடிக்கப்பட்டது.

முன்மொழியப்பட்ட அச்சட்ட முன்வடிவின்படி 90 நாள் கால அவகாசமானது காவல்துறையினர் குற்றவழக்காடல்களில் பயன்படும்படியான சான்றியம் பெறுவதற்கோ, காத்து வைப்பதற்கோ, பகுத்தாய்வதற்கோ அல்லது விசாரிப்பதற்ககோ வாய்ப்பளிக்கும் வகையில் பயங்கரவாதக் குற்றங்களில் குற்றஞ்சாட்டப்பட்டோரைக் காவலில் வைக்கும் காலத்தை நீட்டித்து ஆராய்ந்து பார்ப்பதற்கான காலம் என்று கருதப்பட்டிருக்கும்.

முன்மொழியப்பட்ட திருத்தங்களின் படியே கூட சிறப்பு வழக்குகளிலும் ஓர் உயர் நீதிமன்ற நீதியரின் ஒப்புதலின் பேரிலும்தான் அது சாத்திய மாகியிருக்கும். ஆனால், முன்மொழியப்பட்ட சட்டத்திருத்தம் "மாந்தத்தன்னுரிமையைக் கேலிப்பொருளாக்கிவிடும்" என்பதால் அந்த சட்ட முன்வடிவு நாடாளுமன்றத்தில் தோற்கடிக்கப் பட்டது. இடைக்கால வழிமுறையாக 28 நாள் கால அவகாசம் வழங்குவது, ஆண்டுதோறும் மீளாய்வு செய்வது என்று தீர்வு காணப்பட்டது. 2012ம் ஆண்டு மீண்டும் 14 நாளுக்குத் திரும்பி சென்றுவிட்டனர்.

ஸ்காட்லாந்தில் குற்றப் புலனாய்வின்போது குற்றஞ் சாட்டப்பட்டோரிடம் வினாத்தொடுக்கும் சட்டத்தையும் நடைமுறையையும் ஆய்வுசெய்த கார்லாவே பிரபுவின் 2011ம் ஆண்டு அறிக்கை வேறு உள்ளது. ஆனால் அது இந்தியாவில் நமக்கொரு கனவாகத்தான் இருக்கும். ஏனென்றால் ஸ்கோட்லாந்தில் குற்றச்சாட்டுகளை வலியுறுத்து வதற்கு முன்பாக காவல் காலம் மணிக்கணக்கில் அளவிடப்படுகிறது. மிகச்சிறப்பான வழக்குகளுக்கு வெளிவரம்பு 24 மணிநேரம்தான்.

கார்லோவே பிரபுவின் அறிக்கை ஐக்கிய முடியரசு (பிரிட்டன்), அயர்லாந்து, மேற்கு ஐரோப்பா ஆகிய இடங்களில் இருக்கும்படியான இதேபோன்ற நடைமுறைகளையும் கருதிப்பார்ப்பது, குற்றச் சாட்டின்றி காவலில் வைத்திருக்க அனுமதிக்கக் கூடிய காலஅவகாசத்தைக் கூடுதலாக்கத் தேவையில்லை என்ற முடிவுக்கு வருகிறது. ஏனென்றால் "நம் புலனாய்வு நடைமுறைகள் குற்றஞ் சாட்டப்பட்டவர்களிடம் தகவல் கறப்பதை நம்பியிருக்கவில்லை" என்கிறது அறிக்கை.

அப்படியானால் வலுவான அரசு என்பதற்கான இலக்கணம் என்ன? தேசப்பாதுகாப்பு பற்றிய வாய்வீச்சுகளும், ஏட்டிக்குப் போட்டி விவாதங்களும் குறைந்த பொறுப்புக்கூறலும்தானா? அல்லது பொறுப்புக் கூறும்படியான, குறிப்பிட்ட சில குடியியல் தன்னுரிமைத் தராதரங்களை மதிக்கும் படியான, அதேபோல் உருப்படியாகச் சாதிக்கும் படியான வேறு முன்மாதிரிகள் உள்ளனவே, அவையா?

நம் நாடாளுமன்றத்திலிருந்தே மேற்கண்டவாறு

பெறப்படும் எடுத்துக்காட்டு வேறெந்த நாட்டைவிடவும் வெகு அதிகமாய் நமது மக்களின் ஆள்வகை விடுமையைப் பறிக்க விரும்புகிறோம் என்பதைக் காட்டுகிறது. அதற்கு எவ்வகை நியாயமும் காட்டவும் இல்லை, பொறுப்புக்கூறலும் இல்லை. கடுமையான தர்மசங்கடத்திற்குரியதாக இருக்க வேண்டிய செய்தி பெருமிதம் பொங்க அறிவிக்கப்படுவதுதான் உள்ளபடியே கவலைக் குரியதாகும். ஆனால் அதுதான் ஆபத்தான சட்டங்கள் செய்யும் கலையாகும்.

பிணை விடுதலைக்கான வழிவகைகளைப் பொறுத்தவரை அடிப்படை ஆதாரமற்றவையாகத் தோன்றும்படியான, எவ்வகையிலும் "பயங்கரவாதச் செயல்" என்று தேறாத வழக்குகளில் கூட, பிணை வழங்குவதற்கு இச்சட்டத்தில் நுழைக்கப்பட்டுள்ள தடைகளைக் கடக்க நீதிமன்றங்கள் தத்தளிக்க காண்கிறோம்.

குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்றமற்றவராய் இருந்தால், 43D(4)(5)பிரிவுகள் குற்றவியல் சட்டத்தின் அடிப்படைக் கொள்கையை விட்டுக்கொடுப்பதாக, செயலிழக்கச் செய்வதாக எனக்குத் தோன்றுகிறது.ே

மலும்,அந்த வழிவகைகளில் அடங்கிய கட்டுத்தளைகளை உயர் நீதிமன்றம் அல்லது உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களுக்குப் பொருந்தச் செய்யும் முயற்சி நடக்குமானால் அவ்வழி வகைகளின் அரசமைப்புச் சட்டச் செல்லுபடித் தன்மை ஐயத்திர்குரியதாகிவிடும் எனக் கருதுகிறேன். இன்றைய உரையாளர்களில் ஒருவரான நீதியரசர் அஞ்சனா பிரகாஷ் தமது விளக்கங்கள் சிலவற்றில் இந்தக் கருத்தைத் திறமிக்க முறையில் வளர்த்தெடுத்து விரிவாக எடுத்துரைத்துள்ளார்.

சிக்கல் 2008ம் ஆண்டுத் திருத்தங்களோடு முடியவில்லை. 2012ம் ஆண்டிலும் மீண்டும் 2019ம் ஆண்டிலும் மேலும் மேலும் திருத்தங்கள் செய்யப் பட்டிருப்பது வருத்தத்திற்குரியது. 2019ம் ஆண்டுத் திருத்தங்களின் விளைவாக இப்போது தனியொருவருக்கும் "பயங்கரவாதி" என்று முத்திரையிட முடியும்.

ஊபா தான் பிணைவழங்கும் கட்டத்திலேயே மெய்ப்பிக்கும் சுமையை எதிர்மாறாக்கும் ஒரேசட்டம் என்பதில்லை. NDPS, POCSO, PMLA (அதன் வழிவகைகளை உச்சநீதிமன்றம் சொல்லாமற் செய்யும் வரை) போன்ற பல சிறப்புச் சட்டங்களிலும் இதேபோன்ற வழிவகைகள் உள்ளன.

அவற்றையும் தவறாகப் பயன்படுத்த முடியும். ஆனால் குற்சச்சாட்டப்பட்டவருக்கு எதிராக குறிப்பான முதனிலை வழக்கு இருப்பது இப்போதும் இச்சட்டங்களுக்குத் தேவைப்படும். இங்கேதான் ஊபா தனித்து நிற்கிறது. அதன் தெளிவற்ற பெருவீச்சான இலக்கண வரையறைகளின்படி "சட்டப்புறம்பான" அல்லது "பயங்கரவாத செயற்பாடு" என்றுமுதனிலை வழக்கு தொடுப்பதற்கு அநேகமாய் எந்த ஆதாரமும் தேவையில்லை- "போரும் அமைதியும்" புத்தகம் வைத்திருந்தார் என்பது போன்ற அற்பக் காரணமே பயங்கரவாதத்தை ஆதரித்தமைக்குச் சான்றாகக் காட்டப்படலாம்.

இவ்வாறான "பயங்கரவாதச் செயற்பாடு" என்பதை வெகு எளிதில் குறிப்பிட்ட சில அடையாளங் களோடு மட்டும் தொடர்பு படுத்தும் படியான சிலபல அளாவல்களை சமூக, அரசியல், பண்பாட்டு ரீதியில் ஆராய்ந்து பார்க்கும் தேவையும் உள்ளது.

வன்முறையை எவ்வாறு நோக்கவும், முன்னிறுத்தவும் அரசு முயல்கிறது என்பது ஊபாவின் செயல்பாட்டு நோக்கம் பற்றிய பயனுள்ள ஊடுநோக்கை வழங்குகிறது. வன்முறை என்பது வகைப்படுத்தப்படுவது தனியொருவரின் குற்றமாகவா? அல்லது குறிப்பான குழுக்களின் குற்றமாகவா? அரசு அறிக்கைகள் பிணக்குக்கும் வன்முறைக்குமான அமைப்பியல் காரணங்களைக் கவனத்தில் கொள்கின்றனவா?

2000-2004, 2001-2005 காலங்களுக்கான வழக்குகளை எடுத்துரைக்கும் தேசியக் குற்றப்பதிவகத்தின் (NCRB) அறிக்கையில் பொடா அல்லது ஊபா வழக்குகள் பற்றிய தரவுகள் ஏதுமில்லை. ஆனால் அந்த அறிக்கையில் ஓர் அத்தியாயத்தில் (அத்தியாயம்-3) வன்முறைக் குற்றங்கள் கீழ்கண்டவாறு வெவ்வேறு தலைப்புகளில் வகைபிரிக்கப்படுகின்றன.

1.உயிருக்குப் பாதிப்பான வன்முறை குற்றங்கள்:

கொலை-(இதச 302),

கொலை செய்ய முயற்சி-(இதச 307),

கொலை ஆகாத குற்றமுறு உயிர் பறிப்பு-(இதச 304),

வரதட்சனைச்சாவுகள் (இதச 304-B),

கடத்திச்செல்லுதல்- (இத.ச.363முதல்369,371முதல் 373),

2. உடமைக்குப் பாதிப்பான வன்முறைக் குற்றங்கள்

கொள்ளை (இதச 395முதல் 398)

கொள்ளையடிப்பதற்காக ஆயத்தமும் ஒன்றுகூடலும் (இதச 399 முதல் 402)

திருட்டு இதச 392 முதல் 394,397முதல் 398 )

3.பொதுப் பாதுகாப்புக்குப் பாதிப்பான வன்முறைக் குற்றங்கள்:

கலகங்கள்-இதச 143-145,147-150,151,153,153-A,153B,157,158,160)

தீவைப்பு -இதச 435,436,438)

4.பெண்களுக்குப் பாதிப்பான வன்முறைக் குற்றங்கள்

வல்லுறவு (இதச 376)

அடுத்துக் குற்றங்கள் மேலும் வகைப்படுத்தப் படுகின்றன. உள்வகைப்பாட்டின் தலைப்புகளில் ஒன்று கொலை நோக்கங்கள் என்பதாகும். இது கருத்துக்குரியது மட்டுமல்லாமல் முக்கியமானதும் ஆகும். 2001-2005 ஆண்டுகளுக்கு அது பின்வருமாறு உள்ளது.

**கொலை நோக்கங்கள்**

கொலைகள் நடப்பதற்கு முதன்மை நோக்கங்களாக இருந்தவை கடந்த காலத்தில் போலவே சொந்த வன்மம் அல்லது பகைமையும், சொத்துத் தகராறும் முறையே 11.8 விழுக்காடும், 8.6 விழுக்காடும் இந்தக் கணக்கில் அடங்கும். மற்ற முக்கிய நோக்கங்களாக இருந்தவை காதல் பூசல்கள்(7.4%) பயங்கரவாதிகள்/தீவிரவாதிகளின் வன்கொடுமைகள்(3.1%) மகாராட்டிரம் வர்க்க மோதலால் 60.8 விழுக்காடு கொலைகள் நடந்திருப்பதாக அறிக்கையிட்டுள்ளது. பீகார் கொலைகளில் 42.5 விழுக்காடு சாதியத்தால் நிகழ்ந்ததாக கணக்குக் கொடுத்துள்ளது. 36.3 விழுக்காடு கொலைகளுக்கு அரசியல் காரணங்கள் இருந்தன.

கொலைக்குற்றம் பற்றிய இந்தப் பகுத்தாய்வில் குற்றத்துக்கும்,குற்றவாளிக்கும் இடையே ஒரு தெளிவான காரணகாரியத் தொடர்பு உள்ளது. வர்க்க/சாதிக் கட்டமைப்பு இருப்பது தெளிவாகத் தெரிவதும், அந்த கட்டமைப்புகளுக்குள் எழும் சமூக/வர்க்க மோதல்களைப் பற்றிய விழிப்புணர்வும் இன்னுங்கூட முக்கியமானது. இது சமூக/ அரசியல் பதற்றங்களுக்கும் பெறுவீத வன்முறையோடு அவற்றுக்குள் காரண காரியத் தொடர்புக்கும் ஒரு மிக முக்கிய ஒப்புதலெனக் கண்டேன்.

மேலும் 2004,2005 அறிக்கைகளில் "பயங்கரவாத, தீவிரவாதக் குற்றங்கள்" என்பவை மொத்த வன்முறைக் குற்றங்களில் முறையே 3.3, 3.1% என்ற கணக்கும் நோக்கற்பாலது. இதுவும் கூட குறிப்பான சில பகுதிகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகளாக ஒதுக்கப்படுகிறது. ஆனால் சாதி தொடர்பான வன்முறை குறிப்பிட்ட சில மாநிலங்களில் நடைபெறும் குற்றங்களில் கிட்டத்தட்ட 27% - 33% ஆகிறது. இதேபோல் சாதிமோதல்களும் வகுப்புவாத மோதல்களும் மொத்த வன்முறையில் பாதி விழுக்காடாகின்றன.

குற்றங்களை இப்படிக் கூர்மையாக வகைப் படுத்துதல் 2004-2005க்குப் பின் கலங்கி அழியத் தொடங்குகிறது. 2014க்குப் பிறகு இந்த வடிவமைப்பே மாற்றப்படுகிறது. அண்மையச் செய்திகளைப் பார்க்கும் போது,முன்னர் வன்முறைக் குற்றங்களின் மொத்தத் தொகையில் மிகச்சிறு விழுக்காடாக இருந்த "பயங்கரவாத வன்முறை" இப்போது நடுவரங்கில் தூக்கி நிறுத்தப் படுவதாகவும், அதே நேரத்தில் மற்றச் சிலபல அமைப்பியல் பிணக்குகள் கண்ணுக்குப் புலப் படாமல் அறவே மறைக்கப்படுவதாகவும் தெரியும். வன்முறை என்பது எப்படிச் சட்டத்திலும் கூட அரசியல் நோக்கில் கட்டுமானம் செய்யப்படுகிறது என்பதை இதிலிருந்து அறியலாம்.

குற்றங்கள் இப்போது அவை பதியப்பெறும் சட்டங்களுக்கு ஏற்ப வகைப்படுத்தப்படுகின்றன. இப்படித்தான் சாதி அல்லது வர்க்க அல்லது வகுப்புவாதப் பிணக்குகளால் நடக்கும் கொலைகள் முன்பு அவ்வாறே வகைப்படுத்தப்பட்டவை, இப்போது 302ம் பிரிவின் கீழ் பட்டியலிடப்படும் தனிப்பட்ட குற்றங்களாகக் காட்டப்படுகின்றனவே தவிர, அக்குற்றங்களின் மூலக்காரணத்தை வெளிப்படுத்துவதில்லை.

"பயங்கரவாதக் குற்றங்கள்" எனப்படுகிறவை "ஊபா சட்டத்தின் கீழ் பதியப்பெறும் குற்றங்கள்" என்று மாற்றி வகைப்படுத்தப்பட்டு, "அரசுக்கு எதிரான குற்றங்கள்" என்ற அத்தியாயத்தில் அரசத்துரோகம் "தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகம் செய்யும் பழிச்சாட்டல், உரைகள்" போன்ற "இந்தியத் தண்டனைச் சட்டக் குற்றங்களோடும் பொதுச் சொத்துக்கு சேதம் ஏற்படாமல் தடுத்தல் சட்டத்தின்" கீழான குற்றங்களோடும் கூட சேர்த்து வைக்கப்படுகின்றன.

இப்படி "வன்முறை"யை நீர் மீள்வரிசைப் படுத்துவதே அதனை மேலும் முனைப்பற்றதும், அதேபோல் அரசியல்மயப்பட்டதும் ஆக்கி விடுகின்றது. அது முனைப்பற்றதாவதாகச் சொல்லப் படுவது ஏனென்றால் அது "அரசுக்கு எதிரான குற்றங்கள்" அல்லது "ஊபாவின் கீழான குற்றங்கள்" என்று,வேறு முத்திரைகளை ஏதுமின்றிப் பிரதி

பலிக்கிறது. ஆனால் செயல்களின் இந்தக் குழுச் சேர்க்கை ஏற்படுத்தும் கருத்து என்னவென்றால், தேசிய ஒருமைப்பாட்டுக்குக் குந்தகமான உரைகளுக்கு அரசத்துரோகம் என்றும், பொதுச் சொத்துக்கு சேதம் என்றும், பயங்கரவாதம் என்றும் பழிசாட்டும் பேச்சுச் செயல்களிலிருந்து ஒரு தொடர்ச்சி இருப்பதாகக் காட்டுவதால் அது மேலும் அரசியலாறது.

என் பார்வையைத் தெளிவாக்க வேண்டி ஓர் எடுத்துக்காட்டு தருகிறேன். ஒருவர் நல்லெண்ணத்தோடு பகுத்தறிவின் அடிப்படையிலும் ஏரணத்தின் அடிப்படையிலும் முழுக்கமுழுக்க அமைதியாக உரை நிகழ்த்துவதாகக் கொள்வோம். அவர் அரசாங்கத்தின் ஒரு சட்டத்தையோ ஒருசில செயல்களையோ குற்றாய்வு செய்வதற்காக அரசமைப்பின் வழிவகைகளையும் சட்ட வழிவகைகளையும் எடுத்துக்காட்டிப் பேசுகிறார். பிறகு சிலர் அமைதியான முறையில் எதிர்ப்பு ஊர்வலம் நடத்துகின்றனர். வேறு சிலரும் ஊர்வலம் நடத்துகின்றனர். அது அவ்வளவு அமைதியாக நடைபெறவில்லை. சில பொதுச் சொத்துக்கள் சேதமாக்கப்படுகின்றன. ஏதேனும் ஒரு சட்டப் புறம்பான அல்லது பயங்கரவாத அமைப்பு அல்லது தனியாளும் இந்த குறிக்கோளை ஆதரித்து அறிக்கை விடுவதாகக் கொள்வோம். வேறு ஒருவர் குண்டு வீசியதில் ஒரு சிலர் உயிரிழக்கின்றனர்.

இப்போது, ஊபாவுக்கு மிகைப்படத் தரப்பட்ட இலக்கணங்களின் அடிப்படையிலும் குறிப்பிட்ட சில குற்றங்களைக் குழுச்சேர்க்கும் இந்த வழி முறையின் அடிப்படையிலும் குண்டு வீச்சிலிருந்து கருத்து மாறுபட்டுப் பேசிய பேச்சுவரை ஒன்றைச் சதியின் பகுதியாகக் கருதப்படலாம். அல்லது தேசவிரோத நடவடிக்கைகளின் வீதப்படிசார் அளவுகோலில் தொடர்புடைய குற்றங்களாகக் கருதப்படலாம். உரையாளர் பயங்கரவாதச் செயல் செய்த குற்றச்சாட்டுக்கு ஆளாக நிலை ஏற்படவும் வாய்ப்புண்டு. அதாவது வன்முறையான "பயங்கரவாதச் செயல்களை" (முன்பு மொத்த வன்முறைக் குற்றங்களில் வெறும் 3.3 சதவீதமாக இருந்தவற்றை) வன்முறையல்லாத பேச்சுச் செயல்களோடு அல்லது அற்ப வன்முறையோடு குழுச்சேர்ப்பது பயங்கர வாதம் என்றும், "தேசியப் பாதுகாப்பு" என்றும் ஒரு புதிய கற்பனையை உண்டாக்கி, அதில் எல்லாவிதமான கருத்து மாறுபாட்டையும் சேர்த்துக் கொண்டு, பயங்கரவாதச் சிக்கலை அரங்கின் நடுவில் ஏற்றிவைக்கிறது. இந்த மீள்குழுச்சேர்ப்பு தேசியப் பாதுகாப்பின் மீதும் ஒரு பாதக விளைவை ஏற்படுத்துவதாக எனக்குப்படுகிறது.

எப்படியென்றால் உள்நாட்டுக் கருத்து மாறுபாட்டின் மீது மேலும் கவனம் குவிப்பதன் மூலம் தேசியப் பாதுகாப்புக்கு உண்மையான அச்சுறுத்தலும் முந்தைய அறிக்கைகளில் மொத்த வன்முறையில் தோராயமாக 3% என்று கணக்கிடப்படுவதுமான வழக்குகள் போதிய கவனம் பெறத்தவறிவிடுகின்றன.

அதேபோல், எடுத்துக்காட்டாக சாதி, வகுப்பு (வர்க்கம்), வகுப்புவாதம் போன்றவை தொடர்பான கடும் வன்முறைக்கு வழிசெய்யும் பிற முக்கியக் காரணங்கள் 'அரசுக்கு எதிரான குற்றங்கள்' என்ற வகைப்படுத்தப்படவில்லை. அவற்றால் தேசிய ஒருமைப்பாட்டுக்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என்று பொருளாகிறது. மேலும், கட்டமைப்பியல் வன்முறை பெரிதும் கண்ணுக்குப் புலப்படாமல் செய்யப்படுகின்றது, "இந்தியத் தண்டனைச் சட்டம் 302ம் பிரிவின் கீழான குற்றங்கள்" என்பன போன்ற "வீரியமற்ற வகைப்பாடுகளில்" அல்லது அட்டவணை சாதிகள், அட்டவணைப் பழங்குடிகள் (வன்கொடுமைகள் தடுப்பு) சட்டம் போன்ற தனிமனிதக் குற்றங்களாகத் தொலைந்து போகின்றன. இப்படி வெறுப்பு வளர்த்தல் குற்றம் என்பது 302ம் பிரிவின் கீழான ஒரு குற்றச்செயலாக மட்டுமே கருதப்படலாம்.

உலகின் ஆகப்பெரும் குடியாட்ச்சியத்தில் இந்த மிகக்கொடுமையான சட்டம் நம்மை எங்கு கொண்டு சேர்த்துள்ளது? இச்சட்டத்தின் விளைவுகளை அனைவரும் பார்த்துக் கொள்ளலாம். வழக்கு விசாரணையே இல்லாமல் ஸ்டேன் சுவாமி இறந்து போகக் கண்டு வருந்தினோம். 8,10 அல்லது 12 ஆண்டுகள் கூட சிறைபட்டுக் கிடந்தபின் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு வாழ்வு முறிந்து, வருங்காலமே அற்றுப் போய் சிறைமீண்டு வரும் ஏராளமான இந்தியர்களையும் நாம் மறந்துவிடக் கூடாது. தேசியப் பாதுகாப்பு, அரசமைப்புச் சட்ட உரிமைகள் ஆகிய இரு வகையிலும் ஊபா நமக்குத் தரத்தவறி விட்டது. முற்றான முழுச் சீர்மை அவசர அவசியம் என்று பணிந்துரைப்பேன்.

என் உரையை முடிக்கும்முன் ஒன்று சொல்ல விரும்புகிறேன். முதுநிலை வழக்கறிஞர் திரு. சி.யு.சிங் எழுதிய ஒரு கட்டுரையை அண்மையில் படித்தேன். குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் ஆண்டுக் கணக்கில் சிறைப்பட்டுக் கிடந்த பின் விடுவிக்கப் படும்போது இழப்பீடு கோருவதற்கு ஆதரவாக அவர் வாதிட்டுள்ளார். இந்தக் கருத்தின்மீது மேல் நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்கும் எனக் கருதுகிறேன்.

# UAPA என்ற அநீதி சட்டம்

அஞ்சனா பிரகாஷ்,
உயர்நீதிமன்ற நீதிபதி (ஓய்வு)



சட்ட விரோத நடவடிக்கை தடுப்புச்சட்டம் மற்றும் தேசதுரோக சட்டம் ஆகியவை இன்றைய சூழலில் தேவையா என்ற கேள்வி பலராலும் எழுப்பப்பட்டுள்ளது. நான் நீதிபதி தீபக் குப்தா அவர்களின் கருத்தில் உடன்படுகின்றேன். தற்போதைய சட்டவிரோத நடவடிக்கை சட்டம் (ஊபா) ஏற்புடையதல்ல. அச்சட்டத்தின் நடைமுறை பற்றி பின்னர் விவாதிக்கலாம். ஆனால் அந்த சட்டம் பயங்கரவாதிகள், பயங்கரவாத செயல் என்பதற்கு கொடுத்துள்ள விளக்கம் வெற்று விளக்கமாக உள்ளது. இதனால் எவரும் இச்சட்டத்தால் பாதிக்கக்கூடும். எனவேதான் பசு மூத்திரம் கொரானாவை குணப்படுத்தாது என கருத்துத் தெரிவித்தவர் மீது அரசுக்கு எதிராக வெறுப்பை தூண்டியதாக கைது செய்து சிறைப்படுத்த முடிகின்றது. இச்சட்டம் அரசின் இறையாண்மை பாதுகாப்பதற்கு பதிலாக அரசியல் கட்சிகளை பாதுகாக்கவும் அதன் இறையாண்மையை நிறுவவும் பயன்படுத்தப்படுகின்றது.

நமது சட்டங்கள் குறிப்பாகவும், தெளிவாகவும் இருக்க வேண்டும். வெறுமனே வெற்று வார்த்தை களுடன் எதற்கு வேண்டுமானாலும் தவறாக பயன்படுத்தும் வகையில் இருக்கக் கூடாது. ஆனால் ஊபா சட்டம் தவறாகப் பயன்படுத்தும் வகையில் உள்ளது.

இரண்டாவது நம் சட்டங்களின் அடிப்படைத் தன்மையை புரிந்து கொள்ளவேண்டும். உலகளாவிய மனிதஉரிமை பிரகடனம், அதன் பிரிவு 11 ஒவ்வொரு மனிதனும் குற்றமற்றவர் என அனுமானிக்கும் உரிமையை உறுதி செய்கின்றது. நமது 1950ம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 20(3) தனிநபர் ஒருவர் குற்றவாளியாக கருதும் நிலையிலிருந்து தற்காத்துக் கொள்ளும் உரிமையை அங்கீகரிக்கின்றது. எனவே அந்த நபர் கேள்விக்கு பதில்சொல்லாமல் மௌனமாகக்கூட இருக்க முடியும்.

1976ம் ஆண்டின் சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமை மாநாட்டு வரைவானது உலகம் முழுதும் ஒரு நபரை அப்பாவி என அனுமானிக்கும் உரிமையை உறுதி செய்துள்ளது. அந்த உரிமையை அரசாங்கம் தன்னிச்சையாக பறிக்க முடியாது.

ஊபா சட்டத்தில் சில அடிப்படை குற்றவியல் கோட்பாடுகளை நான் விவாதிக்க விரும்புகின்றேன்.

முதலில் சட்டத்தின்படி குற்றம் சாட்டப் பட்டவரை அது நிரூபிக்கப்படும்வரை அப்பாவி என கருதவேண்டும். இரண்டாவதாக அந்த நபருக்கு எந்த பதிலும் சொல்லாமல் அமைதியாக கூட இருக்க உரிமை உண்டு. மூன்றாவதாக குற்றம் சாட்டப்பட்டவர் மீது சந்தேகத்திற்கிடமின்றி குற்றத்தை நிரூபிக்க வேண்டும். நான்காவது அரசாங்கம் குற்றத்தை எவ்வளவு நிரூபிக்கின்றதோ அந்த அளவே தண்டனை இருக்கவேண்டும்.

சட்டத்தின் நிலை மேற்கண்டவாறு உள்ளபோது, ஊபா சட்டத்தின் பிரிவு 43(E) குற்றம் சாட்டப்பட்டாலே அந்த நபரை குற்றவாளியாக கருதவேண்டும் என்கிறது. இதனால் குற்றம் நிரூபிக்கப்படும்வரை அப்பாவியாக கருத வேண்டும் என்ற சட்ட கோட்பாடு மறுக்கப்படுகின்றது.

அடுத்து இந்த வழக்கில் கைதுசெய்யப்பட்டவரே தன்னை அப்பாவி என நிரூபிக்கவேண்டும் அதுவும் சட்டஅடிப்படைக்கு எதிரானது. மேலும் கடுமையான தண்டனையைப் பொருத்து அந்த குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு கூடுதலாக அரசுக்கு இருக்க வேண்டும். ஆனால் ஊபா சட்டத்தில் சில சாதாரண குற்றங்களுக்குக்கூட ஆயுள் தண்டனை, மரண தண்டனை என உள்ளது. இதை எந்த வடிவிலும் நியாயப்படுத்த முடியாது.

இந்திய சாட்சியல் சட்டத்தில் பிரிவு 106ன் படி குற்றத்தை நிரூபிக்கும் பொறுப்பு எப்போது குற்றம் சாட்டப்பட்டவருக்கு வரும் என்றால், அந்தக் குற்றம் அவரின் சிறப்பு கவனத்துடன் நடந்தது என்ற நிலை வரும்போது மட்டுமே. மேலும் அதே சட்டத்தில் பிரிவு 113(A)(B) என்ற பிரிவுகள் புதிதாய் சேர்க்கப்பட்டு நிரூபிக்கும் பொறுப்பு குற்றம் சாட்டப்பட்டவர் மீது வரதட்சணை, மரணம் போன்ற வழக்குகளில் சுமத்திய போதும், முதலில் அந்த குற்றச்சாட்டின் அடிப்படை முகாந்திரத்தை நீதிமன்றத்தில் அரசு நிரூபிக்கவேண்டும். அதன் பின்பே குற்றம் சாட்டப்பட்டவருக்கு தன்னை அப்பாவி என நிரூபிக்கும் சுமைவரும். ஆனால் ஊபா சட்டத்தில் நேரெதிர் திசையில் இந்தக் கோட்பாடு பயன்படுத்தப்படுகின்றது.

ஊபா சட்டத்தின் பிரிவு 43(D) குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக ஆவணங்கள் இருந்தால் அவரை குற்றவாளியாக பார்க்கவேண்டும், பிணை வழங்கக்கூடாது என கூறுகின்றது. ஒருவரை வழக்கின் ஆரம்பகாலமான பிணைகோரும் காலத்திலேயே நீதிமன்றம் குற்றவாளி என கருதிவிட்டால், விசாரணைக்குப்பின் என்ன முடிவுக்கு நீதிமன்றம் வரும்? அரசு தரப்புக்கு என்னதான் வேலை?

முதல் நிலை தோற்றத்தில் அதாவது மேலோட்டமாக பார்த்தபோது அவர் மீது குற்றம் தென்பட்டால் நீதிமன்றம் பிணை வழங்கக்கூடாது என இச்சட்டம் சொல்கின்றது. ஆனால் எந்த நீதிமன்றம் என குறிப்பிடவில்லை.

நமது நீதிமன்றங்களில் அதிகாரம் தலைகீழாய் கவிழ்க்கப் பட்ட பிரமீடுபோல உள்ளது. அதிக அதிகாரம் மற்றும் கூடுதல் விருப்ப முடிவு எடுக்கும் நிலையில் உள்ள உச்சநீதிமன்றமும் சாதாரண மாவட்டம் நீதிமன்றம் போல, இந்த வரையறைக்குள் வரும் என்பது போன்ற தோற்றம், குற்றவியல் நடைமுறை சட்டத்திற்கு எதிராக உள்ளது.

குற்றவியல் நடைமுறைச் சட்டம் 1974ம் ஆண்டு வந்த பின்பு பிணை வழங்கும் அதிகாரத்தை எல்லா நீதிமன்றத்திற்கும் பரவலாக்கியுள்ளது. இந்த முக்கியத்துவத்தை இந்த ஊபா சட்டம் நிராகரிப்பது ஏன்? கெடுவாய்ப்பாய் தடா சட்டத்தில் இது போன்று இருந்த பிரிவை நீக்க உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் இந்த நியாயத்தை உச்சநீதிமன்றம் விவாதிக்காமல் வெறுமனே தேச நலன் கருதி ஆட்சியாளர்கள் கொண்டுவந்த சட்டம் என்ற ஒன்றைச் சொல்லில் எல்லா வழக்குகளையும் கடந்த காலங்களில் தள்ளுபடி செய்துவிட்டது.

ஆட்சியாளர்கள் கொண்டு வந்தார்கள் என்பதற்காக மனித உரிமைக்கு எதிரான பிரிவை கேள்வி எழுப்பாமல் சென்றது சரியல்ல. மேலும், எந்த நீதிமன்றமும் மக்களின் சிவில் உரிமைகளை கொல்லும் இந்த சட்டப்பிரிவை கேள்வி எழுப்பவில்லை.

ஊபா சட்டத்தின் திருத்தமானது 9/11 தாக்குதலுக்குப் பிறகு ஐ.நா பாதுகாப்பு சபை 1373 தீர்மானத்தின் மூலம் கொண்டுவரப்பட்டது.

அது அல்கொய்தா, ஆப்கானிஸ்தான், ஒசாமா பின்லாடன் தொடர்புகளை குறித்து 2008ம் ஆண்டு கொண்டு வரப்பட்டதாக சொல்லப்படுகின்றது. இந்தியாவுக்கு தொடர்பில்லாத மத்தியகிழக்கு பிரச்சினைக்காக இந்தியாவில் ஏன் இந்த சட்டம் வரவேண்டும்? அதற்கு என்ன தேவை இருக்கின்றது?

உலகம் முழுவதும் இதுபோன்ற பயங்கரவாத தடுப்புச் சட்டங்கள் தவறாக பயன்படுத்தப் படுகின்றன.

இதை அமெரிக்க மிஷனுக்காக நிரந்தர துணை பிரதிநிதி அம்பாஸ்டர் ரிச்சட் மில்ஸ் என்பவர் பயங்கரவாத தடுப்பு சட்டம் 1373 தீர்மானமாக கொண்டுவரப்பட்டதன் இருபதாண்டு நினைவு தினத்தில் கடந்த 12.1.2021 ஐ.நா சபையில் கீழ்க்கண்டவாறு பேசினார்.

“வரலாற்றில் பயங்கரவாத தடுப்பு நடவடிக்கை என்பது திரும்பத்திரும்ப மனித உரிமைகளை காவு வாங்கிக்கொண்டு நடக்கின்றது. எனவேதான் அமெரிக்க அரசு மத சிறுபான்மையினர், சிறுபான்மை குழுக்களை சேர்தோரை கும்பல் கும்பலாக சிறைபிடிப்பதை எதிர்த்து வருகின்றோம். இங்கே பயங்கரவாத தடுப்பு பற்றி பேசும் நாடுகள், தங்கள் உள்நாட்டில் அந்த பெயரை பயன்படுத்தி சிறுபான்மை மக்களின் மனித உரிமையை மீறாமல் இருக்கவேண்டும்.”

ஆனால் நீதிமன்றம் மேற்கண்ட கருத்தை காணத்தவறிவிட்டது.

# உங்கள் இல்லம் தேடி இஸ்லாம்!



22.08.2021 ஞாயிறு அன்று சிதம்பரம், சீர்காழி பகுதிகளில், தாருல் இஸ்லாம் அறக்கட்டளை மற்றும் அன்பகம் இஸ்லாமிய அழைப்பு மையம் சார்பாக, மூத்த அழைப்பாளர் ஹாஜி. ஜக்கரிய்யா அவர்களின் தலைமையில் தாஃவா சுற்றுப் பயணம் மேற்கொள்ளப்பட்டது... அல்ஹம்துலில்லாஹ்!







# ஔரங்கசீப்-ன் எளிமையான வாழ்வு

ஆலம்கீர் ஔரங்கசீப் அதிகாலைத் தொழுகையை முடித்து விட்டு இஸ்லாம் மார்க்கம் சம்மந்தமான நூல்களை படிப்பார். இரவு வேளையில் மாறுவேடம் பூண்டு குடிமக்கள் குறையை அறிந்து நிறைவு செய்வார். இவ்வாறு மாறுவேடம் பூண்டு இரவு நகரை சுற்றும் போது கூலி வேலைகள் செய்த நிகழ்வுகள் அவர் வரலாற்றில் பார்க்கலாம்.

காலை 7.30 மணி தனது தனி அறையில் நீதி வழங்குதல். காலை 8.30 மக்களுக்கு தரிசனம், யானைச் சண்டையை பார்வையிடல். காலை 9.15 பொது தர்பார். காலை 11.00 மணி தனிப்பட்ட நபர்களை காணுதல்.காலை 11.50 அந்தப்புரத்தில் மதிய உணவு, சிறிது ஓய்வு. மதியம் 2 மணிக்கு லுஹர் தொழுகை. 2.30க்கு தனிச்சேம்பரில் படித்தல். அரசு சம்மந்தமான காரியங்களை நீறைவேற்றுதல். மாலை 5.30 மணிக்கு தனிப்பேட்டி. மண்டபத்தில் மாலை நேரத்து மரியாதைக்குப் பின் மஃரிபு தொழுகை. மாலை 6.40 திவான் இகாஸ் அவையில் பணிகள். இரவு 7.40 சபை கலைக்கப்படுதல். இஷா தொழுகை இரவு 8 மணி. அந்தப்புரம் இஸ்லாமிய தியானம் படிப்பு. பின்னர் படுக்கை அறை செல்லுதல்.

ஒருசில நம்பிக்கைக்குரிய அதிகாரிகள் பணியாளர்கள் தனி மண்டபத்தில் அவருடன் செல்வர். சிம்மாசனத்திலிருந்து நீதி வழங்கல், ஔரங்கசீப் மிகவும் எளிய வாழ்வு வாழ்ந்த புலன்களை ஒருத்ததவசி கடும் நோன்பு நோக்கிற தவசி போன்றவர் என ஜவஹர்லால் நேரு குறிப்பிடுகிறார்.

But in his pessional life Aurangd was simple and almost an asectin ஆம்! வரலாற்றில் மாமன்னர் ஔவுரங்கசீப் ஒரு துறவி அரசர் தான் (Terweshking) இந்தியாவின் பெரும் பகுதியை ஆண்ட முகலாய சக்கரவர்த்தி படுக்கை எங்கு தெரியுமா? லேன்பூல் என்னும் பத்திரிகை ஆசிரியர் சொல்கிறார். .... for besiders this he slept on the ground with only a tiger's skin over him.

"ஔவுரங்கசீப் தரையில் படுத்திருப்பார். புலித்தோலை தன் மேலே போர்த்தியிருப்பார்."

"மாமிச உணவு உண்ணாதவர் - ஔரங்காசீப் மாமிச உணவு உண்ணாதவர்". கிபி 1640 முதல் 1677 வரை இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த க. வேர்னியர் என்பவர் எழுதிய நூலில் குறிப்பிடுகிறார்.



**ஹாஜி.பீ.எம்.அப்துல் கரீம்**
**குளச்சல்**

சுயதொழில் புரிந்த சக்கரவர்த்தி

"முஸ்லிம் யாராகிலும் தான் சுயதொழில் செய்துதான் வாழவேண்டும் என்ற நபி போதனைப்படி ஔரங்கசீப் தானே சுயதொழில் செய்தார்.

தொப்பி நெய்தல், தான் ஹாபிஸாக இருந்ததால் குர்ஆன் பிரதிகளை தன் கைப்பட எடுத்தார். இக்குர்ஆன் பிரதிகளை மக்கா மதீனா போன்ற புனித நகரங்களுக்கு அனுப்பி வைத்தார். குர்ஆன் பிரதிகளை விற்றும்,இரவு மாறுவேடம் பூண்டு உழைப்பின் மூலம் கிடைத்த

வருவாயைக் கொண்டு தன் ஜீவிதத்தை அரசு பணம் பெறாமல் எளிமையாக கழித்தார்.

உயர்ந்த ஆடை அணியாதவர்

இஸ்லாம் தடுத்துள்ள ஆடைகளை அவர் அணிந்ததில்லை. தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களால் ஆன பாத்திரங்களை உபயோகப் படுத்தவில்லை என பெர்னியர் கால்பர்ட் குறிப்பிடுகிறார். ஆடை, உணவு எளிமையாக இருந்தது அவர் விரும்பி சாப்பிடும் உணவு கொரிந்தா என்னும் புளிப்புப்பழமும், கர்த்தாலி என்னும் சப்பிச் சாப்பிடும் பிசினும் என ஜாதுநாத் சர்க்கார் குறிப்பிடுகிறார்.

"சதி" வழக்கத்தை ஒழித்தவர் (உடன்கட்டை ஏறுபவர்) இம்மாதிரி வழக்கத்தை சட்டத்தின் மூலம் ஒழித்தார். இதனால் உடன்கட்டை ஏறும் பெண்ணின் ஆபரணங்களை அபகரித்து வாழ்ந்தவர் பாதிப்புக்குள்ளாகியவர்கள் இந்து மத சடங்குகளில் தலையிடுகிறாறென வதந்தியைப் பரப்பினர்.

நௌரோஸ் இன்னும் புத்தாண்டு விழா ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 21 கொண்டாடப்படும். இது அக்பர் காலத்தில் நடைமுறைக்கு வந்தது. அரசரின் எடைக்கு எடை வெள்ளி, தங்கப்பட்டாடை பொருள்களை வைத்து நிறுத்து புரோகிதர்களுக்கு தானம் கொடுக்கும் வழமையை ஔரங்கசீப் ஒழித்தார்.

இதனால் புரோகிதர்கள் இந்து மத விரோதியென வதந்தியை பரப்பினர். பங்க்,அபின்,கஞ்சா போன்ற போதைப் பொருட்களை தன் ஆட்சியில் தடைசெய்தார். வாமார்கிகளும் துறவிகளும், சன்னியாசிகளும் தங்கள் வழிபாட்டு சாதனம் இதை தடை செய்வது இந்து மதத்திற்கு எதிரானதென பிரச்சாரம் செய்தனர்.

தீபாவளி பண்டிகையின்போது இருந்த அலங்காரத் திருக்கிருந்தவரியை இரத்து செய்தவர் ஔரங்கசீப்.

ஔரங்கசீப் ஆட்சியில் ஹிஜ்ரி 1709 (கிலீ1669) புர்ஹான்பூரில் முஸ்லிம்களில் இருதரப்பினரிடையே பெரும் கலவரம் ஏற்பட்டது. இனிமேல் "தாபூத்" ஊர்வலம் நடத்தக் கூடாதென அரசாணை பிறப்பித்தார்.

ஹோலிப் பண்டிகையின் போது ஏற்பட்ட விஷமங்களை தடுத்து நிறுத்தினார். தசரா விழாவின்போது ஹிந்து சீமான்களுக்கு அங்கிகளும், ஆடைகளும் வழங்கி கௌரவித்தார்.

ஔரங்கசீப் தன் அரசவையில் முஸ்லிமல்லாதவர் இருவர்களுக்கு முக்கிய பதவி கொடுத்ததை எதிர்த்தவர்களிடம் அரசியலுக்கும் மதத்திற்கும் சம்பந்தமில்லை.அரசியல் விவகாரங்களில் மதம் கிடையாது. அவரவர் அவரவர் மதத்தை பின்பற்றலாம் என்றவர் ஔரங்கசீப்.

ஔரங்கசீப் இறுதி உயில்

தான் இறந்தால் தான் பாதுகாப்பாக வைத்துள்ள தொகையில் குல்லாவிற்றதின் மூலம் வந்த ரூபாய். 4 இரண்டணாவை கொண்டு கபன் துணியும்,குர்ஆன் எழுதியது மூலம் வந்த 350 ரூபாய்களை ஸாலிஹான ஏழைகளுக்கு தானம் செய்ய வேண்டும். தமது கபுறுக்குமேல் எவ்வித மேல் முகடுகளோ, கட்டுமானமோ இல்லாமல் இருக்கவேண்டும். இது ஔரங்கசீப் எழுத்து மூலம் உத்தரவு என ஜாதுநாத் சர்க்கார் கூறுகிறார்.

இறுதி நாள்

ஐந்து அல்லது ஆறு நாட்கள் மட்டுமே ஐங்காலத் தொழுகையை நீரினால் புறசுத்தம் செய்து கொள்ளாமல் தொழுது பதிமூன்று நாட்கள் நோய்வாய்ப்பட்டு தாம் நாடியவாரே வெள்ளிக் கிழமை ஹிஜ்ரி 1118 துல்கஃதா மாதம் 28ஆம் நாள் கி. பி.1707 பிப்ரவரி 21இல் தனது 90 ஆவது வயதில் அஹ்மது நகரிலிருக்கும் பொழுது காலமானார்கள். ஐம்பது ஆண்டு இரண்டு மாதம் இருபத்தி ஏழு நாட்கள் இந்தியாவின் பெரும் பகுதியை ஆட்சி செய்த மா மன்னர் ஔரங்கசீப் உடல் தௌலதாபாத்திற்கு அருகில் குல்தாபாத்தில் ஔரங்கபாத்திற்கு சமீபத்தில் ஷெய்க்புர்ஹானுத்தீன் கான் (வலி) ஷாஹ்ஜர் திஜர்பக்ஸ் (வலி) என்ற இரு நேசர்களின் அடக்கஸ் தளங்களிடையே அடக்கம் செய்யப்பட்டுள்ளது.


"இறைகாக்கும் வையகம் எல்லாம் அவனை

முறைகாக்கும் முட்டாச் செயின்."

என்ற குரள்படி ஔரங்கசீப் இந்தியாவின் பெரும் நிலப்பகுதியை நீதி நெறி காத்து ஆண்டார் நீண்டகாலம் இந்நெடுநிலத்தை ஆளும் பேறுபெற்றார்.

ஆலம்கீர்! புவியரசர்! அரசத் தலைமைக்கு வழிகாட்டியான அணையாவிளக்கு! இஸ்லாத்தின் சிறப்பை உயர்த்திய மன்னர் தர்மத்திற்கும் அதர்மத்திற்குமுள்ள வேறுபாட்டை நன்குணர்ந்தவர்; வன்மையான வாள்வீரர் எண்ணற்ற சக்திகள் நிறைந்தவர் பற்றற்ற ஒரு பக்கிரி. வரலாற்று ஆசிரியர் எனக் கூறிக்கொள்வோர் உம்முடைய கருத்தை அறியாமல் உம்மைப் பற்றி எத்தனையோ கட்டுக் கதைகளை உண்டாக்கி விட்டார்கள். அவர்களுடைய பார்வை மங்கலமானது.

உம்முடைய மிக எளிமையான அடக்க இடம் அலங்காரம் செய்து கட்டடம் எழுப்பப்படாத சமாதி உலகப் பேரரசர்களின் நீரே உயர்ந்தவர் என்பதற்குச் சான்று பகருகிறதென அல்லாமாசர்முகம்மது இக்பால் கவிதை வரிகளில் குறிப்பிட்டிருப்பது முற்றிலும் உண்மையாகும். ஆட்சியாளர்கள் ஔரங்கசீப்பின் எளிமையையும், ஆடம்பரத்தை வெறுத்த ஆட்சியையும் இன்று உலகிற்கு தந்தால் உலகம் அமைதிப் பூங்காவாக திகழும் ஔரங்கசீப்பின் பெயர் அபுல்முஸஃபர் முஹ்யித்தீன் முகம்மது ஔரங்கசேப்பாகும்.




# உச்ச நீதிமன்றத்தின் தாழ்ச்சியும் வீழ்ச்சியும்

தொடர் - 09

அன்பார்ந்த வாசகர்களே!

இந்தத் தொடர் நாட்டில் நடந்த பல அரிய, அதிசய நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுகின்றது. முற்றாக மக்கள் மன்றத்திலிருந்து மறைக்கப்பட்டவை. நம் நீதித்துறையும், இதரத் துறைகளும் எத்தகையதொரு அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளன என்பதை இத்தொடர் சுட்டிக்காட்டும். படியுங்கள்! பரப்புங்கள்! பாரதத்தை இந்த பாசிஸ்ட்டுகளின் பிடியிலிருந்து மீட்க ஒன்றினைவோம்.

## மூத்த வழக்கறிஞர் பிரசாந்த் பூஷன் உச்ச நீதிமன்றத்தில் சொன்னதென்ன?



*12.* கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் இவை *நமது இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 19(1)*(a)ன் *கீழ் எல்லா குடிமக்களுக்கும் உத்திரவாதம் வழங்கப் பெற்ற அடிப்படை உரிமையாகும். இந்த 19(1)*a *அரசியல் அமைப்புச் சட்டம் நமது அரசியல் அமைப்பு சட்டம் வழங்கியுள்ள எல்லா உரிமைகளுக்கும் அடிப்படையான பாதுகாவலன். அது பாதுகாத்திடும் உரிமைகள், சட்டத்தில் செயல் பாடு, அதிகாரவட்டடங்கள் ஒவ்வொன்றிற்கும் தனித் தன்மைகள்.*

*அவை சுதந்திரமாகச் செயல்படும் உரிமை,*

மதசார்பின்மை, அச்சம், பீதி ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட, நடுவுநிலையான தேர்தல், இன்னபிற ஆகியவனவாகும். அரசியல் நிர்ணயச் சட்டத்தின் பிரிவு 19(1)aக்கும், அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு (129)க்கும் இடைப்பட்ட பிரிவு 19(2).

கருத்துச் சுதந்திரம், பேச்சு சுதந்திரம் இவற்றின் மீது சில நியாயமான கட்டுப்பாடுகள் REASONABLE RESTRICTIONS விதிக்கின்றது. இந்த நிபந்தனையை(REASONABLE RESTRICTIONS) வரையறுக்கப்பட்ட கட்டுப்பாடுகள் என்கிறார்கள்.

இந்த நிபந்தனைகளை மீறுவது அரசியல் நிர்ணயச்சட்டம் பிரிவு 129ன் கீழ் நீதிமன்ற அவமதிப்பு என்று தண்டிக்கலாம்.

(ஆறிவுப்பூர்வமான காரணகாரியங்களின் அடிப்படையில் அமைந்த) நியாயமான கட்டுப் பாடுகள் என்பவைதான் கருத்துச் சுதந்திரத்தின் நிபந்தனைகள். இந்த நிபந்தனைகள் அரசியல் நிர்ணயச் சட்டம் பிரிவு 19(2)ல் சொல்லப் பட்டுள்ளது. இந்த நிபந்தனைகளை மீறும் போது தான் நீதிமன்ற அவமதிப்பின் கீழ் வரும். உச்ச நீதி மன்றத்தின் நீதிமன்ற அவமதிப்பு ஒரு போதும் நியாய மான கட்டுப்பாடுகள் கடந்து வந்திட இயலாது.

13. ஒரு குடிமகனின் உண்மையான கருத்தொன்றை வைத்துக்கொள்வதையும், அதை வெளிப்படுத்துவதற்கு இருக்கும் உரிமையை நசுக்குவது நியாயமான கட்டுப்பாடுகள் அல்ல. அந்த கருத்துக்கள் பொது நலனை மையமாக கொண்டதாக இருந்தால், நிச்சயமாக நியாயமான கட்டுப்பாட்டுக்குள் வராது. குறிப்பாக நமது அரசியல் நிர்ணயச் சட்டம் உருவாக்கிய நிறுவனங்கள் மீது நல்ல எண்ணத்தில் கூறப்படும் குறைகள் நீதிமன்ற அவமதிப்பின் கீழ் வராது. இந்தக் கொள்கைகளின் மீதுதான் நமது ஜனநாயகம் அமைக்கப்பட்டுள்ளது.

நீதித்துறையின் செயல்பாடுகளை நேர் செய்யும் நோக்கில் மக்கள் கருத்துகளை உருவாக்குவது, மக்கள் மன்றத்தில் விவாதங்களை நிகழ்த்துவது இவையெல்லாம் நீதிமன்ற அவமதிப்புக்குள் வராது. நியாயமான கட்டுப்பாடுகள் - REASONABLE RESTRICTIONS என்பனவற்றின் கீழும் வராது.

இன்ஷா அல்லாஹ் தொடரும்...

**எம்.ஜி.எம்.**




சென்னை மயிலாப்பூர் சி.ஐ.டி. காலணியில் அமைந்துள்ள கவிக்கோ அரங்கத்தில் நடந்த ஒரு நூல் வெளியீட்டு விழாவில் பேசிய கவிஞர் மு. மேத்தா அவர்கள் "மும்தாஜ் மீது கொண்ட காதலால் அன்று ஷாஜஹான் தாஜ் மஹால் கட்டினார். கவிக்கோ அப்துர் ரஹ்மான் மீது கொண்ட காதலால் இன்று முஸ்தபா அண்ணன் கட்டிய தாஜ்மஹால் தான் கவிக்கோ அரங்கம்" என்று கூறினார்.

இலக்கியப் பிரியரும் சமுதாயப் புரவலருமான முஸ்தபா அண்ணன் அவர்கள் கவிக்கோ மீதான தன் காதலை மீண்டும் நிறுவியிருக்கிறார். அதை தன் முகநூல் பதிவில் 25.08.2021 அன்று வெளியிட்டிருக்கிறார். அதை வைகறை வெளிச்சம் வாசகர்களுக்கு அப்படியே தருகிறோம்.

ஆஸ்திரேலியாவில் கவிக்கோ பெயரில் ஒரு தெரு.

கவிக்கோ, இலக்கிய வரலாற்றில் மறுக்க முடியாத பக்கம். என் ஆன்மாவோடு கலந்தவர். சகோதர நண்பர். என் ஆலோசகர். ரஹ்மத் பதிப்பகத்தின் இஸ்லாமிய மொழி பெயர்ப்பில் அவர் ஆற்றிய பணி வரலாறு சொல்லும். வரலாற்று நாயகனுக்கு வரலாற்றில் ஓர் ஏடு. ஆஸ்த்திரேலேயாவில் MELBOURNE-MELTON பகுதியில் எனக்கு சொந்தமான ஒரு LAND- LAY OUTல் ஒரு தெருவுக்கு KAVIKKO STREET என்ற பெயரை சூட்டஅரசிடம் அனுமதி கேட்டு விண்ணப்பித்தேன். இன்று அனுமதி கிடைத்துவிட்டது. மிகவும் செல்வந்தர்களான ஆஸ்திரேலியா வெள்ளையர்கள் வாழும் பகுதி. இது ஒரு வரலாறு. ஒரு தமிழ் கவிஞன் பெயர் அந்த நாட்டு வரலாற்றில் முதலில் ஒரு தெருவுக்கு பெயராக சூட்டப்பட்டது, தமிழுக்கும் கவிக்கோவிற்கும் சிறப்பு. எனக்கு ஓர் அரிய வாய்ப்பு. நன்றி ஏக இறைவனுக்கு.

- முஹம்மது முஸ்தபா

அறங்காவலர்: ரஹ்மத் டிரஸ்ட்.

மயிலாப்பூர், சென்னை-4



# பசியின்மை தீர்ப்போம்!

நம் உடல் ஆரோக்கியமாக இருப்பதன் அடையாளமே பசி மனிதர்கள் ஓடி ஓடி உழைப்பது தங்கள் பசியைப் போக்கத்தான். நல்ல பசி எடுத்து உண்பவர்கள் மட்டுமே ஆரோக்கிய மனிதர்கள். முதுமையில் பசியின்மையை பலருக்குப் பெரும் பிரச்சனை. பசி, ருசி இரண்டுமே சற்று குறைவாக இருக்கும்.இயற்கை மருத்துவத்தில் இதற்கு எளிதான நிவாரணங்கள் உள்ளன.

சிக்கல் கூடாது

தினசரி காலைக்கடன் இயல்பாக வெளியேற வேண்டும் இதில் சிக்கல் உள்ளவர்கள், கழிவுகளை வெளியேற்ற முடியாமல் அவதிப்படுகிறார்கள். அவர்களுக்கு பசியும் எடுக்காது. நாட்டு கொய்யா, சர்க்கரைவள்ளிக்கிழங்கு, நெல்லிக்காய்,பழங்கள், கீரைகள் உட்கொண்டால் சிக்கல் தீரும்.

எண்ணெய்க் குளியல்

வாரத்திற்கு இரண்டு முறை தலைக்கு எண்ணெய் தேய்த்துக் குளித்தால் உடல் உஷ்ணம் குறையும். பசியும் நன்றாக எடுக்கும்.

எண்ணெய் கொப்பளித்தல்

வாரம் ஒரு முறை காலையில் 50 மி. லி நல்லெண்ணெய்யை வாயில் ஊற்றி நன்றாகக் கொப்பளிக்க ,பல் இடுக்குகளில் உள்ள கிருமிகள் வெளியேறும். நாக்கில் படிந்திருக்கும் வெள்ளை படலம் சுத்தமாகும். முதுமையில் பலவித மாத்திரைகள் உட்கொள்வதாலும், உமிழ்நீர் சுரப்பு குறைவதாலும் ,வாயில் வறட்சி உண்டாகும். அதற்கும் எண்ணெய்க் கொப்பளித்தல் நல்ல தீர்வு.

ஈரத் துணி பட்டி

காலையில் உணவுக்கு முன்பாக, வயிற்றில் ஈரத் துணியை விரித்துப் போட்டுக் கொள்ளவும். இதன் மூலம் பசியை இயற்கையாகவே தூண்டலாம்.

புரோபயாடிக்

இது நுண்ணுயிர் கலந்த உணவாகும். இது நம் தயிரில் அதிகமாக உள்ளது. தினமும் தயிரைக் கடைந்து மோராக உட்கொள்ளவும். முதியவர்கள் மதிய உணவில் மோர் கட்டாயம் சேர்த்துக்கொள்ள வேண்டும்.

ஐந்தரைப் பெட்டி மருத்துவம்

மிளகு, சீரகம், பெருஞ்சீரகம் வெந்தயம்,மஞ்சள், பட்டை,கிராம்பு, லவங்கம் போன்றவை நம் பசியை

ஆரோக்கியமான முறையில் தூண்டுகின்றன. சாப்பாட்டுக்கு அரை மணி நேரம் முன்பாக சீரகத்தண்ணீர் அருந்தலாம். சோம்பை மென்று அதன் சாறை உட்கொள்வதால் பசி தூண்டப்படும்,

உணவும் நன்றாக செரிக்கும். உணவில் மஞ்சள் தூள் கட்டாயம் வேண்டும். அது பசியைத் தூண்டுவதுடன் புற்றுநோய் வராமல் நம்மைப் பாதுகாக்கும்.

வாழ்க்கைமுறை

உடலுழைப்பு, உடற்பயிற்சி, சரியான நேரத்தில் சாப்பிடுவது, போதுமான தூக்கம் இதெல்லாம் பசியை இயல்பாக்கும் பழக்கங்கள்.

உணவு வேலைக்கு ஒருமணிநேரம் முன்பிருந்தே காபி, டீ, பால், நொறுக்குத்தீனி கூடாது. சாப்பிடும்போது இடையில் அடிக்கடி தண்ணீர் அருந்துவதை தவிர்க்க வேண்டும்.

நீண்ட ஆயுளின் இரகசியம்


அமெரிக்காவின் லிட்டில் ராக் என்ற பரிசோதனைக் கூடத்தில் எலிகளை வைத்து ஒரு பரிசோதனையை மேற்கொண்டனர். எலிகளை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து ஒரு பிரிவு எலிகளுக்கு வயிறுமுட்ட உணவு கொடுத்தார்கள் அதாவது 100% கலோரி உணவு, இன்னொரு பிரிவுக்கு தேவைப்படும் கலோரியில் 40 % மட்டுமே கொடுத்தார்கள்.

ஆராய்ச்சியின் முடிவுகள் அவர்களை ஆச்சரியப்படுத்தின. வயிறு முட்ட சாப்பிட்ட எலிகள் சில மாதங்கள் மட்டுமே உயிர் வாழ்ந்தன. ஆனால் 40% கலோரி மட்டுமே சாப்பிட்ட எலிகள் நீண்டகாலம் வாழ்ந்தன. மேலும் இவை நோய் எதிர்ப்பு சக்தியும் அதிகம் கொண்டதாக இருந்தன.

சுத்திகரிக்கப்பட்ட துரித உணவுகள் அதிக கலோரி கொண்டவை அவற்றில் ஊட்டச்சத்துக்களும் குறைவு தொடர்ந்து இவ்வகை உணவுகளைச் சாப்பிடுவது வாழ்நாளைக் குறைகிறது. குறைந்த கலோரி உணவே, நீண்ட ஆயுளின் இரகசியம்.

குறைந்த கலோரி உண்ண வேண்டுமா? ஆரோக்கிய உணவை அரைவயிறு சாப்பிடுங்கள், கால் வயிறு தண்ணீர் குடியுங்கள். மீதம் கால் பங்கு காலியாக இருக்கட்டும் இதைக் கடைப்பிடித்தால் நூறு வயது தாண்டி வாழலாம்.




# பிராமிணிஸ்டுகள் குண்டு வைத்தார்கள்

# முஸ்லிம்கள் தூக்கிலிடப்பட்டார்கள்

## - எஸ்.எம்.முஸ்ரிப்

**சென்ற இதழின் தொடர்ச்சி...**

இந்தக் கும்பல்கள்தாம் குண்டுவெடிப்புகளை நடத்தியது என்பதும் உறுதி செய்யப்பட்டது. இவற்றில் அஜ்மீர் ஷெரீஃப் குண்டு வெடிப்பு, மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு ஆகியவற்றை அந்தந்த மாவட்ட தலைமை நீதிமன்றம் (Session court) விசாரித்தது.

இந்த எல்லா குண்டு வெடிப்புகளும் ஒரே சதியில் நிகழ்ந்தவைதான் என்றாலும், அஜ்மீர் ஷெரீஃப் எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பில், ஆர்.எஸ்.எஸ்.-ம் இன்னும் சில பிராமிணிஸ்ட்டு அமைப்புகளைச் சார்ந்தவர்களும் தண்டிக்கப்பட்டார்கள். ஆனால் மக்கா மஸ்ஜித் குண்டுவெடிப்பிலும், சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பிலும், குற்றம் சாட்டப்பட்ட எல்லா குற்றவாளிகளும் (இவர்கள் ஆர்.எஸ்.எஸ். இன்னும் அதுபோன்ற பிராமிணிஸ்ட்டுகள் அமைப்பைச் சார்ந்தவர்கள்) விடுதலை செய்யப்பட்டனர். மக்கா மஸ்ஜித் குண்டு வெடிப்பில் வழங்கப்பட்ட தீர்ப்பை அத்தியாயம் 10ல் விவாதித்துள்ளோம். சம்சவ்தா எக்ஸ்பிரஸ் குண்டு வெடிப்பு பற்றிய குறுகிய குறிப்பொன்றை, அத்தியாயம் ஒன்றில் தந்துள்ளோம்.

ஏனைய வழக்குகளைப் பொறுத்தவரை நான் அறிந்தவரை வரிசை எண். 1 முதல் 5, 8, 13, 24, 28 மற்றும் 29 ஆகியவற்றிலும், நீதிமன்றங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டன. வழங்கப்பட்ட தீர்ப்புகளில் வரிசை எண். 1 முதல் 4 வரை உள்ள வழக்குகளில்,

அதாவது அக்ஷர்தாம் (குஜராத்) குண்டு வெடிப்பு 2002,

முலந்த்வைல் பார்லி மற்றும் மத்திய மும்பை குண்டு வெடிப்புகள் 2003,

காவல்துறை சிறப்புப் படை அலுவலக குண்டு வெடிப்பு (பெங்களூர்) 2005.

காலுப்பூர் (அஹமதாபாத்) குண்டு வெடிப்பு ஆகியவற்றில் நீதி மன்றங்கள் கைது செய்யப் பட்டிருந்த முஸ்லிம் இளைஞர்களை விடுதலை செய்துவிட்டது. இந்த முஸ்லிம் இளைஞர்கள் பல

ஆண்டுகளாகச் சிறையில் வாடி வந்தார்கள்.

வரிசை எண். 5,8,13,24,25 & 28 i.e. மும்பை ரெயில் குண்டு வெடிப்பு 2006,

ஆர்.டி.எக்ஸ். வகை வெடி பொருட்கள், ஆயுதங்கள் கடத்தப்பட்ட வழக்கு, அவ்ரங்கபாத் 2006,

லும்பினி பூங்கா (ஹைதராபாத்) வெடிகுண்டு வழக்கு - 2007,

ஜெர்மன் பேக்கரி குண்டு வெடிப்பு வழக்கு (பூனா) 2010,

சின்னசாமி விளையாட்டு மைதானம், பெங்களூர் வெடிகுண்டு வழக்கு - 2010,

தில்சுக் நகர் (ஹைதராபாத்) வெடிகுண்டு வழக்கு - 2013, புத்தகயா (பீகார்) 2013 வழக்கு ஆகியவற்றில் நீதிமன்றம் குற்றம் சுமத்தப்பட்டவர்களைத் தண்டித்தது. தீர்ப்புகளில் நான்கு-ஐ (அதாவது மும்பை ரெயில் குண்டு வெடிப்பு வழக்கு, ஜெர்மன் பேக்கரி வெடி குண்டு வழக்கு, ஆர்.டி.எக்ஸ் வகை வெடி பொருட்கள், ஆயுதங்கள் கடத்தல் வழக்கு, தில்சுக் நகர் ஆகியவற்றை) அத்தியாயம் ஐந்து மற்றும் 8ல் விரிவாக விவாதித்துள்ளோம்.

**மீதி வழக்குகள் - மத்திய உளவுத்துறைக்கும் இதர உளவு நிறுவனங்களுக்கும் மிகப்பெரிய சங்கடம்**

ஏனைய வழக்குகள் குறிப்பாக 10 ஆண்டுகளுக்கு மேலாக நிலுவையிலுள்ள வழக்குகள். விரைவில் நீதிமன்றங்களால் விசாரித்து தீர்ப்பு வழங்கப் படவுள்ளன. இவையெல்லாம் IB என்ற மத்திய உளவுத்துறையின் வழிகாட்டுதல்களின் கீழ் புலனாய்வு செய்யப்பட்டவை. இந்த வழக்குகளில் தாங்கள் தயாரித்துத் தந்த போலி ஆவணங்களும் பொய்களும் நீதிமன்றங்களால் ஏற்றுக்

கொள்ளப்படுமா? என அங்கலாயிற்று நிற்கின்றனர். மத்திய உளவுத் துறையினரின் IB இந்த வழக்குகள் எல்லாவற்றிலும் இல்லா விட்டாலும் சிலவற்றிலாவது நீதிமன்றங்கள் நீதி வழங்குமானால், அப்பாவி முஸ்லிம்களை விடுதலை செய்யுமானால், அதில் புலனாய்வு செய்த முகமைகளை கண்டிக்குமானால், மத்திய உளவுத்துறை, அதற்கு எடுபிடிகளாகச் செயல்பட்ட மாநில புலனாய்வு துறையினர் இவர்களின் முகத்திரைக் கிழியும்.

IB என்ற மத்திய உளவுத் துறையின் மீதுள்ள நம்பிக்கை தவிடுபொடியாகும். இதனால் அவர்களுக்கிருக்கும் ஒரே வழி, முடிந்த மட்டும் இந்த வழக்குகளில் நீதிமன்றத்தைக் குழப்புவது. அல்லது, வழக்குகளை முடிந்த மட்டும் காலதாமதப்படுத்துவது. இழுத்தடிப்பது. அவர்கள் வழக்குகளை இழுத்தடிக்க முடியும். எப்படியெனில்



அந்த வழக்குகளுக்கு ஒரு புது திருப்பத்தைக் கொண்டு வருவது, அதற்காக சில அப்பாவிகளைக் கைது செய்வது, அவர்களுக்கு சில புனைப் பெயர்களைத் தந்து இந்த வழக்கோடு இணைப்பது. இதன் மூலம் இந்த நிலுவையிலுள்ள வழக்குகளுக்கு ஒரு புதுக் குழப்பத்தைத் தருவது.

இதுபோன்ற ஈனச் செயல்களுக்கு உதவ NIA என்ற தேசிய புலனாய்வு முகமை, IB என்ற மத்திய உளவுத் துறையின் வழிகாட்டுதலின் பேரில் ஒரு FIR முதல் தகவல் அறிக்கையை 2012ல் தாக்கல் செய்தது. அதில் இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பின் காணாமல் போன அல்லது தலைமறைவாயுள்ள உறுப்பினர்கள் - தீவிரவாதிகள் பல குண்டு வெடிப்புகளில் ஈடுபட்டிருப்பதாகக் கூறிற்று. இந்தக்குண்டு வெடிப்புகள், 2006ம் ஆண்டுக்கும் - 2011ம் ஆண்டுக்கும் இடையே நடந்தவை (ஆதாரம் - The Indian Express, Tune 23/january/2018)

இப்படியொரு பொத்தாம் பொதுவான FIR முதல் தகவல் அறிக்கையைத் தாக்கல் செய்துவிட்டு அவ்வப்போது, முஸ்லிம் இளைஞர்களைக் கைது செய்வது, அவர்களைப் பழைய வழக்குகளுடன் சேர்ப்பது, இதன்வழி பழைய வழக்குகளில் ஒரு புது, விளக்கத்தையும், திருப்பத்தையும் தந்து இழுத்தடிப்பது. பூனாவில் 2014ம் ஆண்டு எஜாஸ் ஷேஹ் (எ) வசிம் என்பவரைக் கைது செய்தது. அதேபோல் அப்துல் சுப்ஹான் குறைஷி (எ) தௌவ்ஹீர்-ஐ 2018ல் கைது செய்தது. அதேபோல், அரிஸ்கான் (எ) ஜூனைத்-ஐ கைது செய்தது எல்லாம், இந்தப் பின்னணியில்தான்.


ஆச்சரியப்படத்தக்க அளவில் மேலே உள்ள கைதுகளையெல்லாம் செய்தது டெல்லி ஸ்பெஷல் போலிஸ். இந்த டெல்லி போலிஸ் மத்திய உளவுத்துறையின் எடுபிடி.

இன்ஷா அல்லாஹ் தொடரும்.....

# அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும்!








கொரோனாவின் காலகட்டம் முழுவதிலுமாக தங்களை அற்பணித்து முதல் அலையிலும், இரண்டாம் அலையிலும் கொரோனா நோய் தொற்று பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரம் காலம் பாராமல் உடனுக்குடன் ஓடி உதவிய உள்ளங்களுக்கு அல்லாஹ் அருளிய அருட்கொடை இது. இதுபோல் ஆகஸ்ட் 15ம் நாள் அன்றும் FAM Trust சார்பாக Dedication Honoring விருதும் கொடுக்கப்பட்டிருந்தது

இரண்டாம் அலையில், ECHL என்னும் ஓர் குழுவை நிறுவி அதில் பயனித்த தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட் மற்றும் இடலை சமூக முஸ்லிம் இளைஞர்களுக்கு, சகோதரத்துவ அமைப்பான (த.மு.மு.க) தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் சார்பாக திருவிதாங்கோட்டில் வைத்து 28/8/2021 அன்று 27ம் ஆண்டு துவக்க விழா முன்னிட்டு சமூக சேவகர் விருது வழங்கப்பட்டது...

அல்ஹம்துலில்லாஹ்...

இதுபோல் த.மு.மு.க கழக சகோதரர்களும் கொரோனா காலத்தில் அயராது உழைத்தார்கள், ஜாதி மத பேதமின்றி இறந்தவர்களின் உடலை அடக்கம் செய்தார்கள். அவர்களின் பணிகளையும் அல்லாஹ் பொருந்திக் கொள்ளட்டும்.

அன்புடன்

அப்துல் பாசித்

தாருல் இஸ்லாம் ஃபவுண்டேஷன் டிரஸ்ட்

தொடர்புக்கு: 8148129887

Owned and published by **M. GULAM MOHAMED** from 52/1 Mannady street, Mannady, Chennai - 600001.
Editor **M. Gulam Mohamed.** Printed by **M. GULAM MOHAMED** at **CHENNAI OFFSET PRINTERS,**
19/1, 21,2, Kitabath Khan Bhadur Street, chennai - 600 002